# தமிழ் நாட்டின் வரலாறு 1311 -– 1801CE


நூலாசிரியர்

**முரைவர் ச. நடராஜன்**

உதவிப் பேராசிரியர், (த) வரலாற்றுத் துறை

**மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்,**

**திருநெல்வேலி – தமிழ்நாடு.**



**வரலாற்றுத் துறை**

**மனோன்மணியம் சுந்தரனார்**

**பல்கலைக்கழகம்**

**தொலைவு மற்றும் தொடர் கல்வி இயக்குனர்**

**திருநெல்வேலி – தமிழ்நாடு.012 627-**

**ஜனவரி - 2024**

| வ.எ | இயல் | உள்ளடக்கம் | ப. எ |
|---|---|---|---|
| 1 | I | பாண்டிய அரசின் வீழ்ச்சி மதுரை சுல்தானகத்தின் - - பொருளாதாரம் - சமூகம் - நிர்வாகம் - எழுச்சி கலாச்சாரம் | 1-25 |
| 2 | II | விஜயநகர ஆட்சியின் தாக்கம் – குமார கம்பனின் படையெடுப்பு – மதுரை நாயக்கர்கள் – விஸ்வநாத நாயக்கர் – திருமலை நாயக்கர் – ராணி மங்கம்மாள் – மீனாட்சி – மதுரை நாயக்கர்களின் வீழ்ச்சி. | 26-64 |
| 3 | III | தஞ்சை நாயக்கர்கள் நாயக்கர் - செஞ்சி நாயக்கர்கள் - பொலிகாரி - ஆட்சியாளர்களிடையே உள்நாட்டுப் போர் அமைப்பு சமூக மற்றும் பொருளாதார - நிர்வாகம் - கோவில் கலை மற்றும் - மதம் - நிலைமைகள் கட்டிடக்கலை | 65-105 |
| 4 | IV | தமிழ் நாட்டின் மராத்தியர்கள் – செர்போஜி II – நிர்வாகம் – தமிழ் கலாச்சாரத்திற்கு மராட்டியரின் பங்களிப்பு – சரஸ்வதி மஹால் நூலகம் – ராம்நாட்டின் சேதுபதிகள் – சமூகம் – பொருளாதாரம் – மதம் மற்றும் கலாச்சாரம் | 106-142 |
| 5 | V | கர்நாடக நவாப்கள் - நவாப்களின் கீழ் தமிழ்ச் சமூகம் - - கர்நாடகப் போர்கள் - மைசூர் உறவுகள் - ஆங்கிலோ பொருளாதாரம் மற்றும் மதம் மற்றும் - சமூகம் - பொலிகர் கலகம் - கலாச்சாரம் புலித்தேவர் கான் - - வீரபாண்டிய கட்டபொம்மன் - வேலுநாச்சியார் - சாஹிப் மருது சகோதரர்களின் கிளர்ச்சி | 143-216 |
| | | **கூடுதல் வாசிப்பு நூல்கள்** | 217 |

# அலகு – 1

பாண்டிய அரசின் வீழ்ச்சி மதுரை சுல்தானகத்தின் - - பொருளாதாரம் - சமூகம் - நிர்வாகம் - எழுச்சி கலாச்சாரம்

**நோக்கங்கள்**

- பாண்டிய அரசின் வீழ்ச்சி
- மதுரை சுல்தானகத்தின் அரசியல் நிலைகள்
- மதுரை சுல்தானகத்தின் சமூகம் - பொருளாதாரம் - கலாச்சாரம்

பாண்டிய வேந்தனான குலசேகர பாண்டியனுக்கு சுந்தரபாண்டியன், வீரபாண்டியன் என்று இரண்டு புதல்வர்கள். வீரபாண்டியன் தாதிக்குப் பிறந்தவன். தந்தை ஆட்சி புரியும் காலம் தொட்டே இருவரும் இளவரசர்களாக ஆட்சி புரிந்தனர். வீரபாண்டியன் கி.பி. 1296 - 97 ல் இளவரசுப் பட்டம் எய்தினான். அதற்கு அய்ந்தாறு வருடங்களுக்குப் பிறகு கி.பி. 1303 ல் சுந்தரபாண்டியன் பட்டம் ஏற்றான். அரசுரிமைக்காக இவ்விருவருக்கும் மூண்ட பொறாமையும், பகையும் பாண்டிய நாட்டின் வீழ்ச்சிக்கு அடிகோலியது.

"வீரபாண்டியனின் திறமையையும், வீரத்தையும் கண்டு அவனே தனக்குப் பின் அரசனாக வேண்டும் என மன்னர் குலசேகரன் பணித்தான். இதனால் வெகுண்ட சுந்தரபாண்டியன் தந்தையை கொலை செய்து விட்டு மதுரையில் முடிசூட்டிக் கொண்டான். இது நடந்தது கி.பி.1310ல் . சகோதர யுத்தம்

ஆரம்பமாயிற்று. வீரபாண்டியனுக்கு ஆதரவாக குலசேகரத் தேவரின் மகள் வயிற்றுப் பேரனும் கருர் பகுதிக்குத் தலைவனுமான " மானர் பெருமான் " உதவி புரிந்தான். சுந்தர பாண்டியனோ டில்லி சுல்தான் அலாவுதீன் கில்ஜியிடம் தஞ்சம் புகுந்தான். வீரபாண்டியன் பாண்டியர் அரியணை ஏறினான்.

சுந்தரபாண்டியன் அலாவுதீன் கில்ஜியின் உதவியை நாடினான். அப்போது கில்ஜியின் தளபதி மாலிக் கபூர் தென்னக அரசுகளை சூறையாடிக் கொண்டிருந்தான்.

மாலிக் கபூருக்கு தமிழகத்தின் மீது படையெடுக்கும் எண்ணம் இல்லை என்றும், சுந்தரபாண்டியனுக்கு ஆதரவாகத்தான், அவன் தமிழகத்தின் மீது படையெடுத்து வந்தான். ஆனால், மாலிக் கபூர் தமிழகத்திற்குள் வருவதற்குள் ஹொய்சாள மன்னன் வள்ளால தேவனின் முயற்சியால் பாண்டிய சகோதரர்களுக்குள் சமாதானம் ஏற்பட்டு, வீரபாண்டியன் சோழ நாட்டில் வீரத்தலவாய்புரத்தை தலைநகராகக் கொண்டு, ஆட்சி செய்து வந்தான்; சுந்தரபாண்டியன் மதுரையிலிருந்து ஆட்சி புரிந்து வந்தான். மாலிக் கபூரிடம் தோற்ற வள்ளால தேவன், அவனது கட்டளையின் பேரில், மாலிக் கபூரின் படை பாண்டியர்களின் ராஜ்ஜியத்திற்குள் நுழைவதற்கு வழிகாட்டினான். வீரபாண்டியன் நேரடியாகப் போர் புரியாமல், கோட்டையைப் பூட்டிக்கொண்டு, சுல்தான் படைகளின்மீது ஆங்காங்கு திடீர் தாக்குதல்கள் புரிந்தான். இதனால் மாலிக் கபூர் அதிக வெறுப்புக்கு ஆளானான்.

வீரத்தலவாய்புரம் சுல்தான் படையினரிடம் வீழ்ந்தது. ஆனால் வீரபாண்டியன் தப்பித்து ஓடிவிட்டான்.

மாலிக் கபூர் தன் படையை காஞ்சிபுரத்திற்குத் திருப்பி, அங்குள்ள கோயில்களையெல்லாம் தரைமட்டமாக ஆக்கினான். சிதம்பரமும், மாலிக் கபூர் படையின் தாக்குதலுக்கு உள்ளானது. அங்குள்ள கோயில்களில் இருந்த சிலைகள் உடைக்கப்பட்டன. செல்வங்கள் கொள்ளையடிக்கப்பட்டன, பின்னர் மாலிக் கபூர் தன் கவனத்தை மதுரைப்பக்கம் திருப்பினான். வீரபாண்டியன், சுந்தரபாண்டியனுடன் சேர்ந்துவிட்டான். இப்போது சகோதரர்கள் இருவரும் சேர்ந்து கொண்டு, சுல்தான் படையை எதிர்க்கத் தீர்மானித்தனர். சுந்தரபாண்டியன், தன் படையைத் திரட்டிக் கொண்டு மாலிக் கபூரை எதிர்நோக்கிச் செல்ல தீர்மானித்தான். ஆனால் வீரபாண்டியனோ மதுரையிலிருந்து கொண்டே தற்காப்பு நடவடிக்கைகளில் ஈடுபடலாம் என்று வலியுறுத்தினான். முடிவில், சுந்தரபாண்டியன் சுல்தான் படையை எதிர் நோக்கிச் செல்ல வேண்டும், வீரபாண்டியன் மதுரையில் இருந்து கொண்டு பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்று சகோதரர்கள் இருவரும் முடிவுக்கு வந்தனர். ஆனால் இம்முறையும் நிலைமை மாலிக் கபூருக்குச் சாதகமாகவே இருந்தது.

மேலைத் திருக்காட்டுப்பள்ளி வரை, சுந்தரபாண்டியனின் படை வெற்றிகரமாக வந்தது. கோடை காலமாக இருந்ததால் போர் வீரர்களின் தண்ணீர்த் தேவை அதிகரித்தது. துரதிர்ஷ்ட வசமாக வழக்கத்துக்கு மாறாக காவிரி நதியில் தண்ணீர் இல்லை. நிலைமையை முன்கூட்டியே அறிந்த மாலிக் கபூர் படையினர்

தண்ணீரைப் பக்குவமாகப் பயன்படுத்தினர். தண்ணீரைத் தேடி சுந்தரபாண்டியனின் படை, இலக்கை விட்டு மேற்குப் பக்கமாக காவிரிக் கரையோரம் சென்றது. இதனால் பாண்டியப் படைகளின் வேகமும் குறைந்தது. மாலிக் கபூரின் படை சுந்தரபாண்டியனின் படையை திருச்சிராப்பள்ளியில் எதிர்கொண்டது. ஏற்கனவே சோர்வுக்கும் உளைச்சலுக்கும் ஆளான பாண்டியப் படையினரால், சுல்தானியப் படையை எதிர்கொள்ள முடியவில்லை. பாண்டியர் படை வீழ்ந்தது. சுந்தரபாண்டியன் கைது செய்யப்பட்டான்.

சுந்தரபாண்டியனைத் தவிர மற்ற படைவீரர்கள் மற்றும் தளபதிகளின் தலை துண்டிக்கப்பட்டன. திருச்சிராப்பள்ளியிலும், திருவரங்கத்திலும் உள்ள கோயில்கள் சூறையாடப்பட்டன. அங்குள்ள செல்வங்கள் கொள்ளையடிக்கப்பட்டன. மேலும் திருவரங்க கோயிலிலிருந்து ரெங்கநாதர் மூலவர் சிலையை மாலிக் கபூர் படை தூக்கிச் சென்றது. சுந்தரபாண்டியனின் படை நிர்மூலமானதால், மாலிக் கபூரின் பெரும்படையை எதிர்நோக்க முடியும் என்று மதுரையிலிருந்த வீரபாண்டியனுக்குத் தோன்றவில்லை, எனவே அவன் பெண்களையும் குழந்தைகளையும் மதுரையிலிருந்து மலையாள தேசத்திற்கு பாதுகாப்பாக அனுப்பும் முயற்சியில் ஈடுபட்டான், எதிர்பார்த்தது போல் மாலிக் கபூரின் படை மதுரையை முற்றுகையிட்டது.

மாலிக்காபூர் படை மதுரையை சூறையாடியது. மாலிக் கபூர் மதுரையில் நுழைந்தவுடன் பாண்டிய அரசன் வீரபாண்டியன் தன் பரிவாரங்களோடு ஓடி விட்டான் என்று ஜியாவுதீன் பார்னி

குறிப்பிடுகிறார். ஆனால் மாலிக் கபூர் எதிர்பார்க்காத விதமாக, சுந்தரபாண்டியனின் மாமா விக்கிரம பாண்டியன் மறவர் படைகளைக் கொண்டு மாலிக் கபூர் படையினர் மீது திடீர் தாக்குதல்கள் நடத்தி பெரும் சேதத்தை ஏற்படுத்தினான். ஒரு காலகட்டத்திற்குப் பிறகு மாலிக் கபூரால் முற்றுகையைத் தொடர முடியவில்லை. அதனால் வீரபாண்டியனுடன் மாலிக் கபூர் ஓர் ஒப்பந்தத்திற்கு வந்தான்.

மதுரை மீனாட்சியம்மன் கோயில் இடிக்கப்படாமல் இருக்க, அக்கோயிலுக்கு சொந்தமான 9000 மொடக்கு பொற்காசுகளையும், விலைமதிக்க முடியாத நவத்தினங்களையும் சுல்தானுக்குத் தர வேண்டும்.

மதுரையில் பாதுகாக்கப்பட்டு வைக்கப்பட்டிருக்கும் உணவுப் பொருட்களில் பாதியை சுல்தானியப் படையினருக்கு கொடுக்க வேண்டும்.

பாண்டியர்கள் வசமிருக்கும் யானைகளும்,குதிரைகளும் சுல்தான் வசம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

இதற்குப் பிரதிபலனாக மாலிக் கபூர் வசம் சிறைப்படுத்தப்பட்டிருந்த சுந்தரபாண்டியன் விடுதலை செய்யப்படுவான். மேலும் மதுரை கோயிலில் உள்ள மீனாட்சி அம்மாளுக்கும் சொக்கனாதருக்கும் எந்த பாதிப்பும் ஏற்படாது என்ற உத்தரவாதத்தை மாலிக் கபூர் அளித்தான்.

மாலிக் கபூர் மதுரை மீது படையெடுப்பு நிகழ்த்திய வருடம் கி.பி.1311ம் ஆண்டு. ஏகப்பட்ட செல்வங்களும், 612 யானைகளுடனும், 20,000 குதிரைகளுடனும் மாலிக் கபூர் படை

மதுரையை விட்டு டெல்லிக்குப் புறப்பட்டது. மாலிக் கபூர் படை மதுரையை விட்டுச் சென்ற பின் பாண்டிய சகோதரர்கள் இருவருக்கும் இடையே மறுபடியும் சண்டை ஏற்பட்டது. மீண்டும் சுந்தரபாண்டியனும், வீரபாண்டியனும் போட்டி போட்டுக் கொண்டு சிறிது காலம் ஆண்டனர். பாண்டிய நாட்டில் எங்கும் குழப்பம் மலிந்திருந்தது.

இந்த நிலையைப் பயன்படுத்திக் கொண்டு திருவாங்கூர் பகுதியை ஆண்டு வந்த சேரமன்னன் இரவிவர்மன் பாண்டிய நாட்டின் மீது படையெடுத்து பல பகுதிகளைக் கைப்பற்றினான். இது நடந்தது கி.பி. 1311-12 ல் . இரவிவர்மன் தனது படைகளுடன் வடக்கே காஞ்சி வரை சென்றான். வேகவதி ஆற்றில் இரண்டாம் முறையாக சேரன் முடிசூட்டு விழா நடத்தியதை வரதராஜ சுவாமி கல்வெட்டு ஒன்று கூறுகிறது. தொண்டை மண்டலம் வரை பரவியிருந்த பாண்டியர் ஆதிக்கம் சேரனால் ஒடுக்கப்பட்டது. சென்னைக்கருகிலுள்ள பூவிருந்தவல்லி பெருமாள் கோவிலில் பாண்டியரது கயல்கள் மீது சேரனின் அங்குசம் பாய்வது போன்ற சிற்பம் இன்றும் உள்ளது.

பிறகு சேரனை வீழ்த்தி இந்தப் பகுதியை காகதீய அரசன் பிரதாபருத்ரன் கைப்பற்றினான். அடுத்தடுத்த வந்த தோல்விகளினால் பாண்டியர் ஆதிக்கம் ஆட்டம் கண்டது. காஞ்சிப் பகுதியை பாண்டியர் இழந்தனர். ஆங்காங்கே சிற்றரசர்கள் சுயத்தன்மை பெறத் தொடங்கினர். வட ஆர்க்காடு பகுதியில் சம்புவராயர்களும், தென்னார்க்காடு பகுதியில் சேதிராயரும், பாண்டிய நாட்டில் சில பகுதிகளில்

வாணாதிராயர்களும் சிற்றரசர்களாக சுயேட்சையாக இயங்கத் தொடங்கினர்.

இச் சூழ்நிலையில் தென்னிந்தியாவில் மேலும் இரு முகமதியப் படையெடுப்புகள் நடந்தன. கி.பி. 1319 ல் குஸ்ரோ கான் படையெடுப்பு. கி.பி. 1323ல் முகமது பின் துக்ளக் என்றழைக்கப்பட்ட உலுக்கான் படையெடுப்பு. உலுக்கான் மதுரையை வென்று ஆட்சியைக் கைப்பற்றினான். இவன் தான் பாண்டிய அரசனை வென்று டில்லி சுல்தான்களின் ஆட்சியை முதன் முதலில் 1323ல் நிறுவினான். பாண்டிய நாடு துக்ளக் இராச்சியத்தின் 23 மாகாணங்களில் ஒன்றாக இணைக்கப்பட்டது. சில ஆண்டுகளுக்குப் பிறகு டில்லி சுல்தான் தொடர்பை அகற்றிவிட்டு ஜலாலுதீன் ஆசன்ஷா தன்னை மதுரை சுல்தானா க பிரகடனப்படுத்திக் கொண்டான். மதுரையில் சுல்தான்கள் ஆட்சி நிறுவப்பட்டது. கி.பி. 1335 முதல் 1378 வரை மாபார் சுல்தான்கள் ஆண்டனர். ஜலாலுதீனுக்குப் பிறகு அலாவுதீன் உடாஜி, குதுபுதீன், கியாசுதீன், நாசிருதீன், அடில்ஷா, பக்ருதீன் முபாரக்ஷா, அலாவுதீன் சிக்கந்தர்ஷா போன்றோர் மதுரை சுல்தான்களாக அரசாண்டனர்.

தொகுப்பாக

- மாறவர்மன் குலசேகர பாண்டியன் தன் மகனான சுந்தரபாண்டியனால் கொலை செய்யப்படுகிறான்.
- சுந்தரபாண்டியனுக்கும் வீரபாண்டியனுக்கும் அரசரிமைப் போர் ஏற்படுகிறது.

- வீரபாண்டியனின் ஆட்சிக்கெதிராக டில்லி சுல்தான் உதவியை நாடி பாண்டியப் பேரரசின் வீழ்ச்சிக்கு காரணமானான் சுந்தரபாண்டியன்.
- தொடர்ச்சியான முகமதியப் படையெடுப்புகளால் பாண்டியர் ஆட்சி வீழ்த்தப்பட்டு மதுரையில் சுல்தான் ஆட்சி தொடங்கியது.

பாண்டியரை வீழ்த்தி, பாண்டியர் ஆட்சியை அழித்தது வடுகரான விசய நகரப் பேரரசு என்பது வரலாற்று மோசடி . பின் எப்படி விசயநகரப் பேரரசு உருவாயிற்று? எப்படி மதுரையை வடுகர்கள் ஆண்டனர்? அதற்கு முன் மதுரை சுல்தான்கள் எப்படி பாண்டியரை வீழ்த்தினர் என்று பார்க்கலாம்.

ஆரம்பகால இடைக்காலம் தீபகற்ப இந்தியாவில் முஸ்லீம் வம்சங்களின் எழுச்சியைக் கண்டது .கிபி 1323 இல் டெல்லி சுல்தானகத்தின் படைகளால் வாரங்கலின் காகத்தியர்களின் தோல்வியும் , கிபி 1333 இல் ஹொய்சாலர்களின் தோல்வியும் தென்னிந்திய வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயத்தை பறைசாற்றியது .அக்காலகட்டத்தின் மாபெரும் போராட்டம் விஜயநகரத்தில் அதன் பேரரசின் தலைநகரான விஜயநகரப் பேரரசுக்கும் இன்றைய கர்நாடகாவின் குல்பர்காவை தளமாகக் கொண்ட பஹ்மனி சுல்தானகத்திற்கும் இடையே இருந்தது .16 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில், பஹ்மனி சுல்தானகம் அகமதுநகர் , பெரார், பிதார், பிஜாப்பூர் மற்றும் கோல்கொண்டா ஆகிய இடங்களை அடிப்படையாகக் கொண்டு ஐந்து வெவ்வேறு சுல்தான்களாகப்

பிரிக்கப்பட்டது, ஒன்றாக டெக்கான் சுல்தான்கள் என்று அழைக்கப்பட்டது.

**மதுரையில் சுல்தானியர் ஆட்சி (கி.பி. 1333-1378)**

டெல்லியை ஆண்டு வந்த சுல்தான்கள் தங்களது மேலாண்மையைத் தமிழகத்தின் மீதும் செலுத்தினர். மாலிக்காபூர் படையெடுப்பை அடுத்து குஸ்ருகான், உலூக்கான் போன்றோர் படையெடுத்துத் தமிழகத்தினைச் சிதைத்து வைத்திருந்தனர். இதன் விளைவாக மதுரையில் சுல்தானியர் ஆட்சி நிலைபெற்றது. மதுரையானது டெல்லியின் அரச பிரதிநிதியான ஒருவரால் நிருவாகம் செய்யப்பட்டது.

**ஜலாலுதீன் அசன்ஷா (கி.பி.1333-1340)**

கியாசுதீன் துக்ளக் இறந்தவுடன் உலூக்கான் டெல்லியில் அரியணை ஏறினான். இவனே முகமதுபின் துக்ளக் ஆவான். இவனது ஆட்சியில் தமிழ்நாடு துக்ளக் பேரரசின் இருபத்து மூன்றாவது மாநிலமாக ஏற்படுத்தப்பட்டது. அதனை நிருவாகம் செய்ய ஜலாலுதீன் அசன்ஷா என்பவன் அரச பிரதிநிதியாக நியமிக்கப்பட்டான். துக்ளக் ஆட்சியில் மத்திய அரசாங்கம் சீர்கெட்டு வலிமையை இழந்தது. தமிழ்நாடு போன்ற வெகுதொலைவில் அமைந்த மாநிலங்களைக் கட்டுப்படுத்துவது கடினமாயிற்று. மதுரையில் ஆட்சி செலுத்திக் கொண்டிருந்த ஜலாலுதீன் அசன்ஷா டெல்லி அரசாங்கத்தின் கட்டுப்பாட்டை மீறி, கி.பி. 1333இல் தன்னாட்சியைத் தொடங்கினான். அவன் ஆட்சி தொடங்கியது முதல் மதுரையில் சுல்தானியர் ஆட்சி தொடங்கியது எனலாம்.

இசுலாமியர் பாண்டிய நாடு வரை வந்து ஆதிக்கத்தை நிலை நாட்டியதைக் கண்ட தென் இந்திய இந்து அரசர்கள் வீர உணர்வு கொண்டு எழுந்து இசுலாமியர் மீது படையெடுப்பு நடத்தினர். துவார சமுத்திரத்தில் ஆட்சியில் இருந்த போசள அரசன் மூன்றாம் வீரவல்லாளன் தென் இந்தியாவை இசுலாமியர்களின் பிடியிலிருந்து விடுவிப்பதற்காகப் போரிட்டான். அதில் வெற்றியும் கண்டான். ஆனால் அவ்வரசனால் தமிழ்நாட்டின் வடக்குப் பகுதியை மட்டும் கைப்பற்ற முடிந்தது. பின் அப்பகுதியை ஆட்சி செய்யும் பொறுப்பைச் சம்புவராயர்களிடம் ஒப்படைத்தான். இதனையடுத்து இசுலாமியர் படையெடுப்பைச் சந்திக்கும் பொருட்டு மூன்றாம் வீரவல்லாளன் திருவண்ணாமலையில் ஒரு படையை நிறுத்தினான்.

மதுரையில் அந்நியர்கள் ஆட்சிக்கு எதிராகச் சூழ்ச்சிகளும் போராட்டங்களும் தொடங்கின. கி.பி.1340இல் மதுரையை ஆட்சி செய்து வந்த ஜலாலுதீன் அசன்ஷா கொல்லப்பட்டான்.

**அலாவுதீன் உதாஜி (கி.பி. 1341)**

ஜலாலுதீன் அசன்ஷாவை அடுத்து அலாவுதீன் உதாஜி என்பவன் மதுரையில் ஆட்சிப் பொறுப்பேற்றான். இவன் இந்துக்களின் உள்ளங்களில் கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருந்த சமய உணர்வையும், வீர உணர்வையும் அடக்க எண்ணினான். இசுலாமியரின் ஆட்சியை ஒழித்து, இந்து ஆட்சியை நிலைநாட்ட முயன்று கொண்டிருந்த போசள அரசன் மூன்றாம் வீரவல்லாளனை அடக்கவும் திட்டம்

தீட்டினான். தன் திட்டத்தை நிறைவேற்றும் பொருட்டு வீரவல்லாளனை எதிர்த்து, நேருக்கு நேர் நின்று அவனோடு போர் செய்தான். போர் செய்து கொண்டிருக்கும்போது எதிர்பாராத நேரத்தில் பகைவரின் அம்பு ஒன்று தாக்கி அலாவுதீன் உதாஜி போர்க்களத்திலேயே உயிர் துறந்தான். இவனது ஆட்சி ஓராண்டிலேயே முடிந்துவிட்டது. இதன் மூலம் மதுரையில் இசுலாமியரின் ஆதிக்க வெறி தோல்வி கண்டது.

**குத்புதீன்**

அலாவுதீன் உதாஜிக்குப் பின்னர் அவனது மருமகன் குத்புதீன் மதுரையில் சுல்தான் பதவியேற்றான். இவனது ஆட்சி வெறும் நாற்பது நாட்கள் மட்டுமே நடந்தது. இச்சுல்தானும் இந்துக்களின் வீர உணர்வுக்குப் பலியானான்.

**கியாஸ் உதீன் தம்கானி (கி.பி. 1342-1344)**

அதன் பின்னர் கியாஸ் உதீன் தம்கானி மதுரையில் சுல்தான் பொறுப்பில் அமர்ந்தான். இச்சமயத்தில் போசள அரசன் மூன்றாம் வீரவல்லாளன் தமிழகப் படையெடுப்பைத் தொடங்கினான். கண்ணனூர்க் கொப்பத்தைக் கைப்பற்றும் நோக்குடன் முன்னேறி வந்தான். இசுலாமியருக்கும் இந்து சமயத்தைச் சார்ந்த போசளப் படையினர்க்கும் இடையே கடுமையான போர் மூண்டது. இதில் போசள அரசன் வீரவல்லாளன் தோல்வியுற்று, கைது செய்யப்பட்டு மதுரைக்கு அனுப்பப்பட்டான். பின்பு வீரவல்லாளனைத் தம்கானி கொன்று அவனுடைய தோலை உரித்து, உடலுக்குள் வைக்கோலை அடைத்து, அதை மதுரையின் மதில் சுவரின் மேல்

தொங்கவிட்டான். வீரவல்லாளனின் உடலைக் கி.பி. 1342இல் மதுரையில் பார்த்ததாக இபன்பதூதா என்பவன் தனது குறிப்பில் கூறியுள்ளான். இபன்பதூதா மொராக்கா நாட்டைச் சேர்ந்தவன். சிறந்த கல்வியாளன் ஆவான். இவன் பல நாடுகளைச் சுற்றி விட்டுக் கி.பி. 1333இல் டெல்லி வந்தான். இவன் தம்கானியினது மனைவியின் சகோதரியை மணந்தவன் ஆவான். இவன் கி.பி.1334 முதல் 1342 வரை இந்திய நகரங்கள் பலவற்றைச் சுற்றிப் பார்த்துவிட்டு இறுதியில் மதுரை வந்தான். தம்கானியின் நெருங்கிய உறவினனாக இருந்தாலும், தம்கானி பாண்டிய நாட்டில் கொடுங்கோல் ஆட்சி புரிந்ததைத் தனது குறிப்பில் இபன்பதூதா விரிவாகக் கூறியுள்ளான்.

தம்கானி இந்துப் பெண்களைக் கொன்று குவித்தான்; ஆண்களைக் கழுவில் ஏற்றினான்; தாயின் மார்பிலே பால் உண்டு கொண்டிருந்த பச்சிளங் குழந்தைகளை வாளால் வெட்டிக் கொன்றான். தான் கொன்று குவித்த மக்களின் தலைகளைக் கொய்து மாலைகளாகக் கோத்துச் சூலங்களில் தொங்க விட்டான். இவற்றை எல்லாம் இபன்பதூதா தனது குறிப்பில் விவரித்துள்ளான். கடைசிக் காலத்தில் தம்கானி காலராநோய் வாய்ப்பட்டு இறந்தான்.

**பிற சுல்தானிய மன்னர்கள் (கி.பி.1345 – 1378)**

கொடுமைகள் நிறைந்த கியாஸ் உதீன் தம்கானிக்குப் பின்பு நாசீர்உதின், அடில்ஷா, பக்ருதீன் முபாரக் ஷா, அலாவுதீன் சிக்கந்தர்ஷா ஆகியோர் ஆண்டனர். இவர்களது ஆட்சி கி.பி.1345 முதல் 1378 வரை மதுரையில் நடந்தது.

மதுரை சுல்தானகத்தைப் பற்றி அறிய இரு சமகாலத்திய சான்றுகளை வரலாற்று ஆசிரியர்கள் பயன்படுத்துகிறார்கள். இபுனு பதூதாவின் குறிப்புகளும், கங்கதேவியின் மதுரா விஜயம் இரண்டுமே, மதுரை சுல்தான்களை கொடுங்கோலர்களாகவும், இந்து குடிமக்களை கொடுமை படுத்தியவர்களாகவும் சித்தரிக்கின்றன. கியாத்துதீன் இந்துகளுக்கு இழைத்த கொடுமைகளைக் கண்டு மனம் வருந்திய பதூதா, "இக்கொடுமைகளின் காரணமாகவே இறைவன், கியாத்துதீனின் மரணத்தை துரிதப்படுத்தினார்" என்று குறிப்பிடுகிறார். மதுரா விஜயம் "குளிக்கும் பெண்களின் மார்பில் பூசிய சந்தனம் கலந்து வெளிர் நிறமாக ஓடிய தாமிரபரணி, சுல்தான்களின் ஆட்சியில் பலியிடப்பட்ட பசுக்களின் ரத்தம் கலந்து சிவந்து ஓடியது" எனக் குறிப்பிட்டுகிறது.

**சமூக மற்றும் பொருளாதார நிலை**

மாலிக்காபூர், முகமது துக்ளக், மதுரை சுல்தான்கள் ஆகியோரின் அழிவு நடவடிக்கைகள் பற்றி விரிவாக எழுதப்பட்டுள்ளன. எனினும் மதுரை சுல்தானிகளின் ஆட்சிக் காலத்தில் தமிழ் நாட்டில் ஏற்பட்ட ஆக்கப்பூர்வமான மாற்றங்கள் பற்றியும் அறிந்து கொள்ள வேண்டியது அவசியம். சகோதர நேயத்தை கருப்பொருளாகக் கொண்ட இஸ்லாம் சமயம் சாதி வேறுபாடுகளாலும், கொடுமைகளாலும், சண்டைகளாலும் சீர்கெட்டுப் போயிருந்த தமிழ்நாட்டு மக்களுக்கு மாற்று மார்க்கமாக அமைந்தது. சாதிப் பாகுபாடுகளைப் பொருட்படுத்தாத இஸ்லாமிய சமயத்தில் பலர் சேர்ந்தனர். குறிப்பாக கீழ்ச்சாதி மக்கள் இப்புது சமயத்தைத் தழுவினர். இதன் மூலம் இவர்கள் வேத

வைதீக சனாதன சமய சாதித் தளைகளிலிருந்து விடுபட்டனர். தமிழ் நாட்டில் சாதிக் கொடுமைகள் குறைந்தன.

## நிர்வாகம்

14 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில், தென்னிந்தியா மீண்டும் மீண்டும் படையெடுப்புகளுக்கு உட்பட்டது. டெல்லி சுல்தானகத்தின் படைகள். ஒரு காலத்தில் மூன்று தனித்தனி படையெடுப்புகள் நடந்தன. பதினைந்து ஆண்டுகள். கி.பி 1311 இல் முதல் படையெடுப்பு மாலிக் கஃபூரின் தலைமையில் நடந்தது. மதுரையை சூறையாடியது. இதைத் தொடர்ந்து மேலும் இரண்டு பயணங்கள் இருந்தன.

டெல்லி சுல்தானகம் - 1314 இல் குஸ்ரவ் கான் தலைமையிலான இரண்டாவது மற்றும் மூன்றாவது 1323 உலுக் கானால் கி.பி. இந்தப் படையெடுப்புகள் அப்பால் பாண்டியப் பேரரசைச் சிதைத்துவிட்டன மறுமலர்ச்சி. முந்தைய படையெடுப்புகள் கொள்ளையடிப்பதில் திருப்தி அடைந்த நிலையில், உலுக் கான் முன்னாள் பாண்டிய ஆட்சிகளை டெல்லி சுல்தானகத்துடன் ஒரு மாகாணமாக இணைத்தது.

மாபார் ( பாரசீக மொழியில் மாபார் என்பது மதுரை சுல்தானைக் குறிக்கிறது). தென்னிந்தியாவின் பெரும்பகுதி டெல்லியின் ஆட்சியின் கீழ் வந்தது மற்றும் ஐந்து மாகாணங்களாக பிரிக்கப்பட்டது - தேவகிரி, டைலிங்,
கம்பிலி, தொரசமுத்திரம் மற்றும் மாபார் ( மதுரை). 1325இல், உலுக் கான் டெல்லியில் முஹம்மது பின் என்ற பெயரில்

அரியணை ஏறினார். துக்ளக் .பெர்சியா மற்றும் கொராசான் மீது படையெடுப்பதற்கான அவரது திட்டங்கள், அவரது கருவூலத்தை திவாலாக்கியது. டோக்கன் கரன்சியை வெளியிட வழிவகுத்தது . இது கள்ளநோட்டுக்கு வழிவகுத்து மேலும் மோசமாகியது.

சுல்தானகத்தின் நிதி .அவனது பெரும் படையையும் வீரர்களையும் செலுத்த முடியவில்லை கிளர்ச்சியில் தொலைதூர மாகாணங்களில் நிறுத்தப்பட்டது .கிளர்ச்சி செய்த முதல் மாகாணம் வங்காளம் மற்றும் மாபார் விரைவில் பின்பற்றினார் .மாபார் கவர்னர் ஜலாலுதீன் அஹ்சன் ஷா அறிவித்தார். சுதந்திரம் பெற்று மதுரை சுல்தானகத்தை அமைத்தார் .நிறுவப்பட்ட சரியான ஆண்டு மதுரை சுல்தானியம் தெளிவாக இல்லை .நாணயவியல் சான்றுகள் 1335 CE என சுட்டிக்காட்டுகின்றன.

இருப்பினும் பாரசீக வரலாற்றாசிரியர் ஃபிரிஷ்தா மபாரின் ஆண்டைக் குறிப்பிடுகிறார் 1340CE என கிளர்ச்சி. சுல்தான் ஜலாலுதீன் அஷான் ஷா :(1340-1335) இவர் மதுரையை ஆண்டார் 1340வரை சுல்தானகம் .அவர் பெயரில் நாணயங்களை வெளியிட்டார் .அவர் சொந்தக்காரர்களால் கொல்லப்பட்டார் 1340 இல் அமைச்சர் அல்லாவுதீன் உதாஜி.

அல்லாவுதீன் உதாஜி :(1340 ) அவர் கொல்லப்பட்ட பிறகு சுல்தானகத்தின் அதிகாரத்தை ஏற்றுக்கொண்டார். சுல்தான் ஜலாலுதீன் அஷான் ஷா .அவர் மீது போரை நடத்துவதற்கு அவர் அறிவுறுத்தப்பட்டார்

இந்துக்கள் மற்றும் இந்து மதம் உண்மையான முஸ்லீம் . அவர் தொடர்ந்து, போர்களை அறிவித்தார் இந்து மன்னர்கள் அல்லது தலைவர்களுக்கு எதிரானது .திருவண்ணாமலை மீது படையெடுத்து மூன்றாம் வீர வல்லாளனுக்கு எதிரான போர், 1340 இல் .போரில் உதாஜி வெற்றி பெற்றாலும், இறுதியில் போரில் அவர் தலையில் துளைத்த ஒரு தற்செயலான அம்பு மூலம் கொல்லப்பட்டார்.

குத்புதீன் :அஷான் ஷாவின் மருமகன் குத்புதீன் 40 நாட்கள் மட்டுமே ஆட்சி செய்தார். மேலும் அவர் தனது பெயரில் நாணயங்களை வெளியிட்டார் .அவர் குடிமக்களின் நம்பிக்கையை இழந்ததால், அவர் கொல்லப்பட்டார்.

கியாசுதின் தமாகன் ஷா :(1342-1341 ) கியாசுதீன் எந்த வகையிலும் குறைந்தவர் அல்ல. குத்புதீனை விட வெறுப்பில் . அவர் இந்துக்களிடம் மிகவும் இரக்கமற்றவராக நடந்து கொண்டார் அவர்கள் மிகவும் மோசமாக .இந்துக்கள் கொல்லப்பட்டதாக இபின் பதூதா தனது புத்தகத்தில் எழுதியுள்ளார் இரக்கமின்றி மனிதாபிமானமற்ற முறையில் நடத்தப்பட்டனர் .குழந்தைகள் வெட்டிக் கொல்லப்பட்டனர் கழுத்துகள் .இந்துக்களின் வெட்டப்பட்ட தலைகள் மாலைகளாக அலங்கரிக்கப்பட்டு திரிசூலங்களில் தொங்கவிடப்பட்டன.

அவர் இந்து மன்னர்கள் மீது புனிதப் போர்களை அறிவித்தார் மற்றும் அனைவருக்கும் எதிராக புனிதப் போரை நடத்தினார் முஸ்லிம் அல்லாதவர்கள் .அவர் ஹொய்சாள மன்னர்களின் கண்ணனூர் கொப்பா மற்றும் போரின் மீது

படையெடுத்தார் முஸ்லிம் படைகளால் தாக்குப்பிடிக்க முடியாமல் அவர்களுக்கு பாதகமாக மாறியது ஹொய்சலர்களுடனான போர் .மூன்றாம் பல்லால தேவன் ஒரு நிபந்தனை போட்டார் கோட்டையை ஒப்படைத்தால் முஸ்லிம் படைகள் திரும்பிச் செல்ல அனுமதிக்கும் அவரை .கியூஆசுதின் அத்தகைய சமரசப் பேச்சுக்கு ஆதரவாக இல்லாததால், அவர் ரகசியமாக இருந்தார்.

4000வீரர்களைக் கூட்டி, ஹொய்சாலர்களை அவர்களது படைவீடுகளில் தாக்கினர் .தோற்கடிக்கப்பட்டது மூன்றாம் வீர பல்லாளன் தேவன் மதுரைக்குக் கைதியாகக் கொண்டுவரப்பட்டான் ஐபின் பதுடா முன்னிலையில் இரக்கமின்றி கொல்லப்பட்டார் .ஹொய்சாள மன்னனின் தோல் இருந்தது கொல்லப்பட்ட பின் உரிக்கப்பட்டு உடல் மதுரை கோட்டையில் தொங்கவிடப்பட்டது.

1342ஆம் ஆண்டில் கியாசுதீன் காலரா தாக்குதலில் தனது ஒரே மகன், மனைவி மற்றும் தாயை இழந்தார் .விரைவில் அதன் பிறகு அவரும் திடீரென இறந்தார் .அவர் தனது பெயரில் நாணயங்களை அச்சிட்டு வெளியிட்டார். சுல்தான் நசிருதீன் : கியாசுதீனின் சகோதரரின் மகன் நஜிருதீன் பதவி ஏற்றார். ஆட்சி செய்து மதுரை சுல்தானகத்தின் சுல்தானானார் .நிறைய செலவு செய்தார் ஐபின் பதுதாவின் சீனாவிற்கு பயணத்திற்கான ஆதாரங்கள் .நிறைய பணம் செலவழித்தான் மற்றும் அமைச்சர்கள் அதிகாரங்களைப் பெறுவதற்கான ஆதாரங்கள் . அவரும் வெளியிட்டார் ஹிஜிரா 745 எனக் குறிக்கப்பட்ட ஆண்டில்

அவரது ஆட்சியின் நினைவாக நாணயங்கள் 1334கி.பி .என்ற தரவுகளில் முறிவு இருப்பதை வரலாற்றாசிரியர்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

1334மற்றும் 1356 க்கு இடைப்பட்ட சுல்தானக வரலாறு. ஃபக்ருதீன் முபாரக் ஷா :(1370-1361 ) ஃபக்ருதீன் ஆட்சியின் போது முபாரக் ஷா, வரலாற்றாசிரியர்களை மதிப்பிடுவதற்கு உதவியாக நாணயங்களை வெளியிட்டார்

அவரது ஆட்சியின் கால வாளி .அவரது ஆட்சியின் போதுதான் குமார கம்பனா விஜயநகரப் பேரரசு அமைதியை மீட்டெடுக்கவும் மீண்டும் நிறுவவும் மதுரை மீது படையெடுத்தது இந்து மதத்தை மீட்க இயற்கை நீதி. மதுரை சுல்தானியத்தில் இந்துக்களின் நிலை பற்றி ஒரு குறிப்பு உள்ளது மதுர விஜயம் என்ற நூலை எழுதியவர் கங்காதேவி .அவள் விவரிக்கிறாள் ஒரு பெண் குமார கம்பனின் கைகளில் ஒரு புனித வாள் ஒப்படைக்கப்பட்டது இந்த காட்டுமிராண்டித்தனமான மற்றும் அநீதியான ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைக்க, திடீரென்று தோன்றியவர் மதுரை சுல்தானகம் மற்றும் உலக எதிரியான சுல்தானைக் கொல்லவும்.

விஜயநகரப் பேரரசின் முதலாம் பக்கரின் மகன் குமார கம்பனா இந்தப் பெரியவரைப் பிடித்தான் தமிழகத்தில் முஸ்லிம் ஆட்சியை தகர்க்க வேண்டும் என்ற உறுதியுடன், 1371ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் ஃபக்ருதீன் முபாரக் ஷாவை தோற்கடித்தார்.

முபாரக் ஷா கொல்லப்பட்டார் மற்றும் மதுரை சுல்தானகம் சுத்தியலால் தாக்கப்பட்டது சவப்பெட்டியில் கடைசி ஆணி. மதுரைப் படையெடுப்பின் விளைவுகள் :ஆட்சியின் தவறான ஆட்சியைப் பழிவாங்கவே மதுரையில் இருந்த சுல்தான்கள் விஜயநகரப் பேரரசு விடுதலை செய்ய முடிவு செய்தனர் மதவெறி பிடித்த முஸ்லிம் ஆட்சியாளர்களின் பிடியில் இருந்து மதுரையும் அதன் குடிமக்களும், யார் இல்லை இந்துக்கள் மற்றும் இந்து சம்பந்தப்பட்ட கோவில்களை மட்டுமே அழித்தது, கொள்ளையடித்தது மற்றும் கொன்றது.

கோவிலின் செல்வம், ஆபரணங்கள் மற்றும் சொத்துக்களை கொள்ளையடித்தார், ஆனால் அதையும் கொண்டு சென்றார் அநீதியான ஆட்சி, இந்து மக்கள் மீது வெறுப்பும் பகைமையும் கொண்டது. அல்லாவுதீன் சிக்கந்தர் ஷா :(1378-1370) முபாரக் இறந்த பிறகு ஷா, அல்லாவுதீன் சிக்கந்தர் ஷா மதுரை சுல்தானகத்தின் ஒரு பகுதியை ஆட்சி செய்து வந்தார் 1378வரை . அவருடன் மதுரை சுல்தானகம் அதன் முடிவைச் சந்தித்தது . அவர் வேரோடு பிடுங்கப்பட்டார் மேலும் மதுரை சுல்தானகம் விஜயநகரத்தின் முழுமையான கட்டுப்பாட்டின் கீழ் வந்தது பேரரசு. முதலாம் புக்க ராயரின் கீழ் விஜயநகரப் பேரரசு தொடர் முயற்சிகளை மேற்கொண்டது தென்னிந்தியாவை வெற்றிகொள் . நடுவில் விஜயநகரப் படையெடுப்புகள் தொடர்ச்சியாக நடந்தன பதினான்காம் நூற்றாண்டை ஆரம்பத்தில் கட்டுப்படுத்தி இறுதியில் முடிப்பதில் வெற்றி பெற்றது தென்னிந்தியாவில் மதுரை சுல்தானகத்தின் ஆட்சி .விஜயநகரப் படைகள் தலைமை

தாங்கின புக்காவின் மகன், குமார கம்பண்ண உடையார் . கம்பண்ணனை முதலில் அடக்கினான்.

இன்றைய காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள சம்புவராய வம்சம், அப்போது தில்லியின் ஆட்சியாளர் மதுரை வெற்றிக்கு உதவ மறுத்த சுல்தான் பின்னர் மதுரையை கைப்பற்றினார். கம்பண்ணாவின் படையெடுப்பு சமஸ்கிருத காவியமான மதுராவில் விவரிக்கப்பட்டுள்ளது
விஜயம்) 'மதுரையின் வெற்றி') அல்லது விர கம்பராய சரித்திரம் )'வரலாறு கம்பண்ணாவின் மனைவி') கம்பண்ணாவின் மனைவி கங்காதேவி எழுதியது.

**சமுக பொருளாதார மற்றும் கலாசார நிலைகள்**

- முஸ்லீம் படையெடுப்பு மதுரையின் பொருளாதாரத்தையும் அதன் வளர்ச்சியையும் பாதித்தது . ஆனாலும் படையெடுப்பு நடந்தவுடன், இந்துக்கள் கொள்ளையடிப்பதும் இடிப்பதும் வழக்கமாக இருந்தது கோவில்கள் மற்றும் இந்துக்கள் இரும்புக் கூர்முனையில் இரக்கமற்ற முறையில் கொல்லப்படுகின்றனர்.
- மதுரை சுல்தானாக அறிவிக்கப்பட்ட பிறகு மதுரையில் ஏற்பட்ட மாற்றங்களை ஆய்வு செய்யும் போது பிரிவு வாரியாக கி.பி 1335 ஆம் ஆண்டு மதுரையின் சுல்தானாக இருந்த நாம், ஒட்டுமொத்தமாக ஒரு படத்தைப் பார்க்கிறோம் மதுரை சாம்ராஜ்யத்திற்கு நிகர இழப்பு மற்றும் உணர்வுகளுக்கு சேதம் பாண்டியப் பேரரசு அழிந்த பிறகு மதுரை சுல்தானகத்தின் குடிமக்கள் .சேதம் குமார

கம்பனின் படையெடுப்பிற்குப் பிறகுதான் கட்டுப்பாடு தொடங்கியது விஜயநகரப் பேரரசு.

- **கலை மற்றும் கட்டிடக்கலை** :இந்து மற்றும் முஸ்லீம் கலவையில் ஒரு ஒற்றுமை இருந்தது கலை மற்றும் கட்டடக்கலை முறைகள் மற்றும் பயன்பாடு.
- புதிய கட்டடக்கலை தீர்வுக்கு சரசோனிக் கட்டுமானம் என்று பெயரிடப்பட்டது முறை .இதில், கைவேலைப்பாடுகளும், அலங்காரங்களும் அதிகம் காணப்பட்டன.
- இந்த இரு கலைகளின் கலவையின் காரணமாக இந்துவின் பிற்கால கோவில்கள் மற்றும் முஸ்லீம்களின் வழிபாட்டுத் தலங்கள் தோற்றத்திலும், தரத்திலும், தரத்திலும் வேறுபட்டன
- மொழி வளர்ச்சி :முஸ்லிம்கள் மொழிகளின் வளர்ச்சியை ஆதரித்தனர். இந்த காலகட்டத்தில், இந்து மற்றும் இஸ்லாமிய மொழி வளர்ச்சி இரண்டு கலாச்சாரங்களிலும் இலக்கியம் தோன்றியது.
- உருது, இந்து மற்றும் முஸ்லீம் கலாச்சாரத்தின் கலவையால் பிறந்த மொழி. அதன் இயற்கையான வளர்ச்சியும் வளர்ச்சியும் இருந்தது.
- பாரசீக மொழியும் சுயசரிதை, கடிதங்களில் நிறைய இலக்கியங்களைக் கண்டது. வரலாற்று துண்டுகள் போன்றவை.

- காகிதத்தின் பயன்பாடு இமேஜிங்கில் பல புதுமையான செயல்முறைகளைக் கொண்டு வந்தது மற்றும் அச்சிடுதல்.
- முஸ்லிம் நிர்வாகிகள் படித்தவர்களுக்கும் கற்றவர்களுக்கும் ஆதரவளித்தனர். இதன் மூலம் படித்தவர்களுக்கு சமூகத்தில் அந்தஸ்து கிடைத்தது. பெண்களுக்கு கல்வி மறுக்கப்பட்டது )ஆ (கல்வி நிறுவனங்கள் மற்றும் நூலகங்கள் முழுவதும் நிறுவப்பட்டன.
- கவிஞர்கள், எழுத்தாளர்கள் மற்றும் தத்துவவாதிகள் நிர்வாகிகளின் நீதிமன்றங்களை அலங்கரித்தனர். அரபு மொழி கட்டாயமாக்கப்பட்டது. கல்வி நிறுவனங்களில் மதக் கல்வி கட்டாயமாக்கப்பட்டது
- தமிழ் முஸ்லிம்கள் ஒரு சமூகமாக :முஸ்லிம்கள் மற்றும் தமிழர்களின் கலப்பு கலாச்சாரம் ஒரு சமூகமாக தமிழ் முஸ்லிம்களாக உருவெடுத்தனர்.
- ஜாதி வெறியும் அதன் எதிர்மறை விளைவும் மற்ற சமூகங்கள் மீது பரவலாக இருந்தது முஸ்லீம் ஆட்சிக்கு முன் .படிப்படியாக சாதி வேறுபாடுகள் நடுநிலையானன.
- பிராமணர்களின் முக்கியப் பாத்திரம் பறிக்கப்பட்டது, மேலும் கோயில்கள் அவர்களை இழந்தன நம்பகத்தன்மை மற்றும் வருவாய்.
- சமூக தூய்மை பாதிக்கப்பட்டது .முஸ்லீம் ஆண்கள் வலுக்கட்டாயமாக திருமணம் செய்து கொண்டனர் இந்துப்

பெண்கள், இந்துக்கள் மிகவும் கலக்கமடைந்தனர் .தவிர, இந்து மதம் இந்த கட்டாய மதமாற்றங்கள் காரணமாக பாதிக்கப்பட்டது.

- இஸ்லாமிய வளர்ச்சி :இஸ்லாம் மத விஷயங்களில் வடிவியல் முன்னேற்றத்தைக் கண்டது. இந்துக்களின் கட்டாய மதமாற்றம்; அதிக எண்ணிக்கையில் திறக்கும் மசூதிகள் இந்து மதத்தை அச்சுறுத்துகின்றன .எனவே, இந்து மதம் போர்க்கால அடிப்படையில் பக்தி இயக்கத்தை நாடியது.
- தமிழர்களின் மேம்பட்ட வெளித் தொடர்புகள் : முஸ்லிம்கள், தமிழர்களின் வருகையால் ஒரு செல்லுபடியாகக் கொடுத்த வெளி உலகத்துடன் தொடர்பு கொள்ள வாய்ப்பு கிடைத்தது தனிநபர்களுக்கு அனுபவம் . தமிழர்கள் நல்லது கெட்டது கற்கத் தொடங்கினார்கள்.
- இந்துக்கள் மீதான அட்டூழியங்கள் :முஸ்லிம் ஆட்சியாளர்கள் பல கட்டுப்பாடுகளை விதிக்கத் தொடங்கினர். இந்துக்கள் குறிப்பாக இந்து பெண்கள் மீது . அவர்கள் அணிய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.
- 'பர்தா'. இந்து கோவில்கள் அடிக்கடி தாக்கப்பட்டன . இந்துக்கள் இருந்தனர்
- கண்மூடித்தனமாக கொல்லப்பட்டு இந்துக் கடவுள்கள் இழிவுபடுத்தப்பட்டனர். இந்து சமூகம் ஒடுக்கப்பட்டது.
- இந்துக்கள் மீதான வரி :முஸ்லிம் ஆட்சியாளர்கள் இந்துக்கள் மீது அதிக வரி விதித்தனர் .புதிய வரிகள்

ஜிசியா, வருமான வரி, வீட்டு வரி, சுங்க வரி போன்றவை விதிக்கப்பட்டன.

- விவசாயம் புறக்கணிக்கப்பட்டது, தென்னந்தோப்புகள் கூட மாற்றப்பட்டன கல்லறைகள், இந்துக்கள் கூர்முனையில் இறக்க விடப்பட்டனர்.
- முஸ்லீம் சுல்தான்கள் தங்கள் களியாட்டங்களுக்கு அதிக பணம் செலவழித்தனர் அரசனின் நீதிமன்றம்.
- மூக நிலைமைகள், வாழ்க்கை முறை மற்றும் பொருளாதாரம் ஆகியவை பல்வேறு கலவைகளால் வெளிப்படுத்தப்படுகின்றன. இலக்கியத்தின் நுண்ணிய நிலை திருப்தி, மகிழ்ச்சி மற்றும் பறவையின் பார்வையை அளிக்கிறது.
- சுதந்திரத்தையும் வாழ்க்கைப் பாதுகாப்பையும் ஒரு நோக்கத்துடன் அடைய வேண்டும். இலக்கியம் ஒரு மாயக் கண்ணாடியாகச் செயல்பட்டது, சமூக நலன் பற்றிய ஆய்வுக்கும்.
- தீமைகள் .இரண்டு பிரபலமான எழுத்தாளர்களின் கவனிக்கப்பட்ட பதிவுகள் மற்றும் குறிப்புகள் விதியின் மதிப்பு மற்றும் மதிப்பைப் பற்றிய போதுமான தகவல் மற்றும் மதிப்பீட்டை எங்களுக்கு வழங்கும் மேலும் ஒட்டுமொத்த மதிப்பீடு:
- கம்பண்ணனின் மனைவி கங்காதேவி, தனது மதுரை விஜயத்தில், 'கம்பண்ணா' என்று எழுதினார். ஸ்ரீரங்கம் கோவிலை பழைய நிலைக்கு மீட்டெடுப்பதன் மூலம்

வெற்றியின் அடையாளமாக உள்ளது. கி.பி 1371 இல் மகிமை .விஜயநகரம் மதுரையை முறையாக அறிவித்தது. கிபி 1378 இல் இரண்டாம் ஹரிஹரரின் ஆட்சியின் போது உடைமை.

**சுய மதிப்பிட்டு கேள்வி**

- பாண்டியர் வீழ்ச்சியின் முக்கியத்துவத்தை எழுதுக.
- மதுரையில் சுல்தானன் எழுச்சியினை விவரிக
- மதுரை சுல்தான் சமூகத்தின் பொருளாதாரத்தை குரிபிடுக

## அலகு – இரண்டு

விஜயநகர ஆட்சியின் தாக்கம் – குமார கம்பனின் படையெடுப்பு – மதுரை நாயக்கர்கள் – விஸ்வநாத நாயக்கர் – திருமலை நாயக்கர் – ராணி மங்கம்மாள் – மீனாட்சி – மதுரை நாயக்கர்களின் வீழ்ச்சி

**நோக்கங்கள்**

- விஜயநகர ஆட்சி தோற்றம் வளர்ச்சி
- மதுரை நாயக்கர்களின் கலை மற்றும் கட்டிடகலைகள்
- மதுரை நாயக்கர்களின் வீழ்ச்சி

குமார கம்பணன் விஜய நகரப் பேரரசைச் சேர்ந்த மன்னனாவான் .கிபி .1336 ஆம் ஆண்டில் ஹரிஹரர் மற்றும் புக்கர் எனும் சகோதரர்கள் விஜயநகரப் பேரரசைத் தோற்றுவித்தார்கள் . குமார கம்பணன் புக்கரின் மகன் ஆவார் .இவர் கிபி 1362 இல் திருவண்ணாமலையை தலைநகராகக் கொண்டு தொண்டை நாட்டை ஆண்ட இராஜநாராயணச் சம்புவராயனுடன் போரிட்டு வென்று தொண்டை நாட்டைக் கைப்பற்றினார் .பின்னர் மதுரைக்குப் படையெடுத்து அங்கு சுல்தான்களின் ஆட்சியை முடிவுக்கு கொண்டு வந்தார் .கி.பி .1364 ஆம் ஆண்டளவில் மகமதியர்களின் ஆட்சி நிலை குலையத்தொடங்கி கி.பி .1378 வரை போராட்டம் நடைபெற்றது .குமார கம்பண்ணன் பாண்டியர்களிற்கு உதவி செய்தும் கோயில் அறநிலையங்களினைப் பாதுகாப்பதனையும் கடமையாகக்

கொண்டு போர் புரிந்து பல தலைவர்களினைப் பாண்டிய நாட்டினைக் காக்கும் பொறுப்புகளில் அமர்த்தினான்.

முதலாம் புக்கனுடைய ஆட்சிக்குமுன் தமிழ் தாட்டின் வடக்குப் பகுதியில் சம்புவராய மன்னர் அரசும், தெற்குப் பகு இயில் மதுரைச் சுல்தானிய அரசும் நிலை பெற்றிருந்தன .இவ் விரு தாடுகளையும் வென்று விறயநசகரத்தோடு சேரும்படி செய்தது முதலாம் புக்கனுடைய முதல் மகனாகிய கம்பண உடையாருடைய செயற்கரும் செயலாகும் .கம்பண உடையாருக்குக் குமார கம்பணர் என்ற பெயரும் வழங்கியது . குமார கம்பணர் மூதலாம் புக்கனுக்குத் தேபாயி என்னும் அரசியிடம் பிறத்தவர். கோலார் என்னு மிடத்தில் கிடைத்துள்ள ஒரு கல்வெட்டின் படி குமார கம்பணர் முல்பாகல் இராச்சியத்திற்கு மகா மண்டலீசுவரராக நியமிக்கப் பெற்றுச் சம்புவ ராயருடைய நாட்டையும், மதுரைச் சுல்தானுடைய நாட்டையும் வென்று, விஜயநகர அரசோடு சேர்க்கும்படி முதலாம் புக்க தேவனால் ஆணையிடப்பட்டார் *என்று கூறுகிறது .குமாரகம்பணர் சம்பு வராயருடைய இராஜகம்பீர இராஜ்யத்தையும், மதுரைச் சுல்தானிய அரசையும் வென்று அடக்கியதற்கும், தமிழ் நாட்டை விஜயநகர மகாமண்டலீசுவரனாக ஆட்சி புரிந்ததற்கும் தகுந்த வரலாற்று ஆதாரங்கள் உள்ளன .குமாரகம்பணருடைய முதல் மனைவியாகிய கங்கா தேவியார் எழுதிய மதுரா விஜயம்" என்னும் நூலும், இராஜநாத திண்டிமன் என்பவர் எழுதிய "சாளுவ அப்யூதயம்' என்னும் நூலும், இலக்கிய வரலாற்று

ஆதாரங்களாகும், சம்புவராயர்கள் ஆட்சிக் காலத்திலும், குமார கம்பணருடைய ஆட்சிக் காலத்திலும் பொறிக்கப் பெற்ற கல் வெட்டுகளும் மிக்க துணை செய்கின்றன .இராஜ நாராயண சம்புவராயருடைய 69 கல்வெட்டுகளும் குமார கம்பணருடைய 792 கல்வெட்டுகளும் சித்தூர், செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, தென்னார்க்காடு, தஞ்சை, திருச்சி, சேலம், கோயம்புத்தூர், இராமதாதபுரம் முதலிய மாவட்டங்களில் கிடைக்கின்றன .மேற் கூறப் பெற்ற ஆதாரங்களின் துணைகொண்டு தமிழ் நாட்டில் குமார கம்பணருடைய வெற்றிகளையும், ஆட்சியையும் பற்றி நாம் அறிந்து கொள்ளலாம்.

செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, தென்னார்க்காடு ஆய மூன்று மாவட்டங்களும் சம்புவராய மன்னர்களுடைய ஆட்சியில் அடங்கி யிருந்தன .விரிஞ்சிபுரம், படைவீடு, காஞ்சிபுரம் ஆகிய இடங்கள் சம்புவராயர்களுடைய முக்கிய நகரங்களாகும் .வென்று மண் கொண்ட ஏகாம்பரநாதச் சம்புவராயரும், அவருடைய மகன் இராஜநாராயணச் சம்புவராயரும் இத் நிலப் பகுதியில் இருந்த இஸ்லாமியப் படைகளை வென்று இராஜகம்பீர இராஜ்யம் என்ற நாட்டை அமைத்தனர் .1863ஆம் ஆண்டில் குமார கம்பணர் முல்பாகல் அல்லது கண்டகானனம் என்னும் இடத்திலிருந்து தம் முடைய சேனையுடன் தமிழ்நாட்டை நோக்கப் படையெடுத்தார் . பாலாற்றைக் கடந்து விரிஞ்சிபுரம் என்னும் இடத்தைக் கைப் பற்றிப் படைவீட்டில் அமைந்திருந்த இராஜநாராயண சம்புவ ராயருடைய கோட்டையை முற்றுகையிட்டார் .சம்புவராய

மன்னனும் தோல்வியுற்று விஜயநகர அரூற்குக் கப்பங் கட்டு வதற்கு ஒப்புக் கொண்டார்.

சம்புவராய நாட்டின் ஆட்சியைக் கைப்பற்றிப் பல ரத் திருத்தங்களை இயற்றிக் காஞ்சிபுரத்தில் குமார கம்பணன் தங்கி யிருந்த பொழுது தமிழன்னை அவருடைய கனவில்தோன்றி, மதுரையில் கொடுங்கோலாட்ட புரிந்த சுல்தான்ககளை வென்று, தமிழ்நாட்டைக் காப்பாற்றும்படி அருள் செய்ததாகக் கங்கா தேவி, தம்முடைய மதூர் விஜயத்தில் கூறியுள்ளார் . இஸ்லாமி யர்களுடைய படையெழுச்சிகளாலும், மதுரைச் சுல்தான்களுடைய ஆட்சியினாலும், தமிழ்நாட்டிற்கு ஏற்பட்ட அவல நிலையைப் பின் வருமாறு கூறியுள்ளார் .“மதுரைச் சுல்தான் களுடைய ஆட்சியால் பெரும்பற்றப்புலியூர் என்ற பெயருடைய சிதம்பரம் உண்மையில் புலிகள் விக்கும் காடாக மாறி விட்டது ; திருவரங்கம் அல்லது ஸ்ரீரங்கத்திலுள்ள அரங்க நாதருடைய ஆலயம் இடிந்த நிலையிலுள்ளது ; ஆதிசேஒஷனுடைய படங்கள்தான் அரங்கநாதருடைய திருமேனியின்மீது வெயிலும், மழையும் படாமல் காப்பாற்றுகின்றன ; முற்காலத்தில் கஜா சூரனை வென்று அவனுடைய தோலை ஆடையாக உடுத்திக் கொண்ட சவெபெருமானுடைய தலமாகிய திருவானைக்காவில் கோவில் கொண்டுள்ள பெருமான் எவ் வித ஆடையுமின்றியே காணப்படுகிறார் ; மற்றும் பல தேவாலயங்களின் கர்ப்பக் இரகங்களும் மண்டபங்களும், கோபுரங்களும் இடி.த்துவீழ்கின்றன; அவற்றின்மீது முளைத்துள்ள செடி

கொடிகளும், மரங்களும் அவற்றை இடித்துக் தள்ளுகின்றன ; நித்திய நைவேத்தியங்கள் இல்லாமல் மூடிக் கடக்கும் பல கோவில்களின் வாயிற் கதவுகள் எல்லாம் செல்லரித்த நிலையில் உள்ளன".

"தென்னிந்திய ஆலயங்களில் பரதநாட்டியம் நடந்த பொழுது ஒலித்த மிருதங்கம், முழவு முதலிய குருவிகளின் இன்னிசைக்குப் பதிலாக நரிகள் ஊளையிடும் சப்தம் கேட்கிறது. காவிரி நதி.பின் நீர் ) தகுந்த பாதுகாப்பின்மையால் (கரைகளை உடைத்துக் கொண்டு நீர்ப்பாசனத்திற்கு உதவாமல் வீணாகிறது. யாகங்கள் செய்வதனால் தோன்றும் நறும் புகையும், வேதங்களின் முழக்கமும் பரவிய அக் கிராமங்களில் பசு வதையும், குரானை ஓதும் கொடிய சப்தமும் நடைபெறுகின்றன . மதுரை நகரின் ஆலயத்தைச் சுற்றியிருந்த தென்னை மரங்கள் எல்லாம் வெட்டப் பட்டு, அவற்றிற்குப் பதிலாகக் கூர்மையான மரங்கள் நடப்பட்டு அவற்றின் உச்சியில் மக்களுடைய தலைகள் கோக்கப் பட்டுத் தென்னங் குலைகள் போல் தொங்க விடப்பட்டுள்ளன .தாமிர பரணியில் மக்கள் குளிப்பதால் அவர்கள் அணிந்த சந்தனத்தின் மூலமாக அதன் தண்ணீர் வெண்மை நிறமாக இருப்பது வழக்கம். ஆனால், இப் பொழுது பசுக்களையும், அந்தணர்களையும் கொலை செய்வதால் தாமிரபரணியின் நீர் செந்நிறமாக மாறிவிட்டது..

மேற் கூறப்பெற்றவாறு தமிழ்நாட்டின் நிலைமையை எடுத்துக் கூறித் தமிழன்னை ஒரு வாளையும் அளித்து .அதன் உதவி கொண்டு மதுரையை அண்ட சுல்தானுடைய ஆட்சியை

அழிக்கும்படிகுமாரகம்பணருக்கு அருள் செய்ததாகக் கங்காதேவி கூறி யுள்ளார் .இச் செய்திகள் புராணக் கதை போல இருந்தாலும் தமிழ்நாடும், தமிழ் மக்களும் அக் காலத்தில் அனுபவித்த துன்ப நிலையைத் தெற்றென எடுத்துக்காட்டுகின்றன .சம்புவராய நாட்டைத் தம்வசப்படுத்திய பிறகு குமார கம்பணர் கொங்கு நாட்டையும் விஜயநகர ஆட்சியின்8ழ்க் கொண்டு வந்த செய்தி, மோடஹல்லி, சடையம் பாளையம் என்னும் இரு இடங்களில் கிடைத்துள்ள கல்வெட்டுகளால் உறுஇயாஇன்றது .பின்னர்க் குமார கம்பணர் 1377ஆம் ஆண்டில் மதுரையின்மீது படை யெடுத்தார் ; அப்பொழுது மதுரைச் சுல்தானாக ஆட்சி புரிந்த Sudes Ber pug 7s apr (Fakhruddin Mubarak Shah) sreruaucns & தோற்கடித்தார் . சுல்தானும் போரில் உயிரிழந்தார் .மதுரையும் அதைச் சார்ந்த இடங்களும் இராமேசுவரம் வரையில் விஜயநகர அரசோடு சேர்க்கப்பட்டன.

**குமார கம்பணருடைய அலுவலாளர்கள்**

தமிழ்நாட்டின்மீது படையெடுத்துச் சம்புவராய தாடு, கொங்கு நாடு, மதுரை முதலிய நாடுகளைக் கைப்பற்றி ஆட்டி புரிவதற்குக் குமார கம்பணருக்கு உதவியாகப் பல அலுவலாளர் கள் இருந்தனர் .அவர்களுள் சோமப்பத் தண்டநாயகர், கண்டா ரகுளி மாரய்ய நாயகர், ஆனைகுந்தி விட்டப்பர், சாளுவமங்கு, கோபனாரியா முதலியோர் முக்கிய மானவர்கள் .மதுரை, திரு வரங்கம், திருவானைக்கா, தில்லை முதலிய தலங்களில் நித்திய நைவேத்திய வழிபாடுகளும், இருவிழாக்களும் மீண்டும் நடத்தப் பெற்றன .தமிழ்நாட்டில் கடைத்த பல கல் வெட்டுகள் குமார

கம்பணருடைய ஆட்சி முறையையும், கோவில்களிலும், மடா லயங்களிலும் ஏற்படுத்திய சர்த்திருத்தங்களையும் எடுத்துக் கூறுகின்றன .குமார கம்பணரால் வென்று அடக்கப்பட்ட இராஜகம்பீர ராஜ்யம், பாண்டியராஜ்யம் என்ற இரு ராஜ்யங் களுக்கும் அவர் மகா மண்டலீசுவரராக முதலாம் புக்கரால் நியமிக்கப் பெற்றார், குமார கம்பணர் 7874ஆம் ஆண்டில் முதலாம் புக்கருக்கு முன் உயிரிழந்தார் .திருவண்ணாமலையில் ' கிடைத்த ஒரு கல்வெட்டின்படி குமார கம்பணர் 7374ஆம் ஆண்டு வரையில் உயிரோடு இருந்ததாகத் தெரிகிறது .அவருக்குப் பிறகு அவருடைய மகன் ஜம்மண உடையர் என்பார் தமிழ்நாட்டின் மகாமண்டலீசுவரராகப் பதவி ஏற்றுர்.*

மேற்கூறப் பெற்ற வரலாற்று நிகழ்ச்சிகளுக்குப் பிறகுதான் .முதலாம் புக்கர் இராஜ பரமேஸ்வரன், பூர்வ, பச்சம, சழமுத்இராஇபதி என்ற பட்டங்களைப் புனைந்து கொண்டார் . நூனிஸ் என்பவர், கலிங்க நாட்டையும் முதலாம் புக்கர் கைப்பற்றினார்? என்று கூறியதில் உண்மை யில்லை .7268ஆம் ஆண்டில் மைசூர் நாட்டில் வைணவர்களுக்கும், சமணர்களுக்கும் இடையே தோன்றிய சமய வேறுபாட்டை அமைதியான முறையில் புக்கன் இர்த்து வைத்தார் * .இவ் விரு சமயங்களைப் பின்பற்றியவர்கள் ஒற்றுமையுடன் வாழ வேண்டுமென்றும் ஒரு சமயத்தைச் சேர்ந்த வார்களுக்கு நேர்ந்த துன்பத்தை மற்றொரு சமயத்தவர்களும் தங்களுடைய துன்பமாகக் கரு,த வேண்டும் என்றும் கூறி" அவர் களுடைய வேற்றுமைகளை நீக்கிக் கொள்ளும்படி உத்தரவிட்டார். புக்கனுடைய ஆட்சிக் காலத்தில்

விஜயநகர அரசின் நிலைமை யைப்பற்றிப் பெரிஷ்டாவின் கூற்றுகள் விஜயநகர அரசின் பெருமையை உணர்த்துகின்றன . *அதிகாரத்திலும் .செல்வத் இலும் நிலப்பரப்பிலும் விஜயநகரத்துஅரசார்கள் பாமினிசுல் தான் sara சிறந்து விளங்கொர் .மேலைக் கடற்கரையில் உள்ள கோவா, பெல்காம் முதலிய இடங்கள் அவர்களுக்குச் சொந்த மானவை . துளுநாட்டின் முழுப்பாகமும் அந் நாட்டைச் சேர்ந் இருந்தது . விஜயநகர அரசில் பெருவாரியான மக்கள் வாழ்ந்தனர் .மக்களும் கலகம் செய்யாமல் வாழ்க்கை நடத்தினர் மலையாளம், இலங்கை முதலிய நாட்டரசர்கள் ஆண்டுதோறும் கப்பம் செலுத்தியதும் அன்றித் தங்களுடைய பிரதிநிதிகளை விஜயநகர அரசவையில் நியமித்திருந்தனர்.

## மதுரை நாயக்கர்கள்

**நாயக்கர்** என்னும் சொல் வடசொல்லிலிருந்து வந்தது எனக் கண்டோம். ஆனால் **நாயக்கர்** என்னும் சொல் இந்நாளில் தெலுங்கர்களைக் குறிக்கின்றது. அதுவும் ஒரு இனத்தைக் குறிக்கும் சொல்லாகவே அமைந்துள்ளது. இந்த நாயக்கர்கள் மதுரை, தஞ்சை, செஞ்சி, வேலூர், இக்கேரி, மைசூர் போன்ற இடங்களில் ஆட்சி நடத்தி வந்தனர். முதற்கண் மதுரையில் இருந்து ஆட்சி நடத்தி வந்த மதுரை நாயக்கர்கள் பற்றிப் பார்ப்போம்.

மதுரை நாயக்கர்கள் ஆட்சி கி.பி. 1529இல் **விசுவநாத நாயக்கர்** என்பவரால் தொடங்கப்பட்டுக் கி.பி. 1736இல் **மீனாட்சி அரசி**யுடன் முடிவடைந்துள்ளது. இந்த மதுரை நாயக்கர் பரம்பரை மதுரை நாட்டில் 207 ஆண்டுகள் ஆட்சி புரிந்தது. மீனாட்சி அரசியின் ஆட்சியோடு விசுவநாத நாயக்கர் பரம்பரை மட்டும் முடியவில்லை, விசயநகரப் பேரரசே முடிந்துவிட்டது.

இனி மதுரையை ஆட்சி செய்து வந்த நாயக்க மன்னர்களைப் பற்றி ஒருவர் பின் ஒருவராகக் காண்போம்.

### விசுவநாத நாயக்கர் (கி.பி. 1529 – 1564)

விசயநகரப் பேரரசின் பெருமைக்குரிய மன்னர் **கிருஷ்ணதேவராயர்** ஆவார். இவரது ஆட்சியில் தமிழ்நாட்டைக் கண்காணிக்கும் பொறுப்பை மேற்கொண்டிருந்தவர் **நாகம நாயக்கர்** என்பவர் ஆவார். இவருக்கு வாரிசு இல்லாததால் காசிக்குச் சென்று அங்கு எழுந்தருளியுள்ள விசுவநாதப் பெருமானை வணங்கி மகப்பேறு அருளுமாறு வேண்டினார். காசி விசுவநாதப் பெருமான் திருவருளால் கி.பி.1495இல் நாகம நாயக்கருக்கு ஒரு மகன் பிறந்தான். அம்மகனே **விசுவநாத நாயக்கர்** ஆவார்.



சுவநாத நாயக்கர் ஏறக்குறையப் பதினாறு வயதினராய் இருந்தபோதே கிருஷ்ணதேவராயரிடம் அடைப்பைக்காரராகப் பணியாற்றினார் ) அடைப்பைக்காரர் – அரசருக்கு வெற்றிலை மடித்துக் கொடுக்கும் அரசாங்க ஊழியர் .(இவர் இளமையிலே பல மொழிகளிலும், கணிதத்திலும், போர்ப் பயிற்சியிலும், பிறவற்றிலும் சிறந்து விளங்கினார் .இதன் காரணமாகக் கிருஷ்ணதேவராயர் இவரிடம் மிகவும் அன்பு கொண்டிருந்தார் . எனவே விசுவநாத நாயக்கரை மதுரை நாட்டுக்கு ஆளுநராக நியமித்தார் .கி.பி.1529இல் விசுவநாத நாயக்கர் மதுரையின் ஆட்சியை மேற்கொண்டார் .அவர் மதுரை நாட்டுக்கு வரும்போது **தளவாய் அரியநாதர்** என்பவருடன் வந்தார் . **தளவாய்** என்பது படைத்தலைமைப் பதவியும், அமைச்சர்

பதவியும் சேர்ந்ததாகும் .கிருஷ்ணதேவராயர் கி.பி.1530இல் இறந்ததும் விசுவநாதர் மதுரை நாட்டைச் சீர்திருத்த வேண்டும் எண்ணிச் சீர்படுத்தலானார் .பாண்டிய நாட்டுக்கு உரியதாயிருந்த **வல்லம்** என்னும் ஊரைத் **தஞ்சை நாட்டுடன்** சேர்த்தார் .தஞ்சைக்குச் சொந்தமாயிருந்த **திருச்சிராப்பள்ளி**யை **மதுரை நாட்டுடன்** இணைக்கச் செய்தார் .இவ்வேற்பாட்டினால் தஞ்சை நாட்டிற்கும், மதுரை நாட்டிற்கும் திட்டவட்டமான எல்லை வகுக்கப்பட்டது..

**சீர்த்திருத்தங்கள்**

விசுவநாதர் திருச்சிராப்பள்ளியில் தெப்பக் குளத்தை வெட்டினார். தாயுமானவர் கோயிலைச் செப்பனிட்டார். காவிரி ஆற்றின் இருமருங்கிலும் கள்ளர்களின் உறைவிடமாயிருந்த காடுகளை அழித்துச் சாலைகளை அமைத்துக் கள்ளர் தொல்லைகளை ஒழித்தார். திருவரங்கப் பெருங்கோயிலைச் சீர்திருத்தி அக்கோயிலைச் சுற்றித் தெருக்களை அமைத்து, வீடுகளைக் கட்டி அங்கு மக்களை குடியேற்றினார். இவ்வாறு பல சீர்திருத்தங்களைச் செய்தார். இச்சீர்திருத்தங்களால் மதுரை நாட்டின் வடபகுதியாகிய திருச்சிராப்பள்ளியில் ஒழுங்கும் அமைதியும் நிலவலாயின.



தென்பாண்டி நாட்டில் அமைதியைக் காக்க வேண்டும் என்பதற்காக விசுவநாத நாயக்கரும், தளவாய் அரியநாதரும்

அங்குச் சீர்திருத்தங்களைச் செய்ய முற்பட்டார்கள். தாமிரபரணி ஆற்றின் இருகரைகளிலும் இருந்த காடுகள் அழிக்கப்பட்டுச் சாலைகள் அமைக்கப்பட்டன. இதனால் கள்ளர்களின் தொல்லை ஒழிந்தது. திருநெல்வேலியில் உள்ள நெல்லையப்பர் கோயில் பழுது பார்க்கப்பட்டது. திருநெல்வேலி நகரமும் விரிவாக்கப்பட்டது. நீர்ப்பாசன வசதிகள் செய்யப்பட்டன. பயிர்த்தொழில் இதனால் வளர்ச்சியுற்றது.

**பாளையப்பட்டு முறை**

தற்காலத்தில் உள்ள மதுரை, தேனி, திண்டுக்கல், சிவகங்கை, விருதுநகர், இராமநாதபுரம், தூத்துக்குடி, திருநெல்வேலி, கன்னியாகுமரி, கரூர், திருச்சிராப்பள்ளி, பெரம்பலூர், புதுக்கோட்டை, நாமக்கல், சேலம், தர்மபுரி, கிருஷ்ணகிரி, ஈரோடு, கோயம்புத்தூர் மாவட்டங்களும், கேரளாவில் உள்ள திருவாங்கூரின் ஒரு பகுதியும் விசுவநாதர் ஆட்சிக்கு உட்பட்டு இருந்த மதுரை நாடாகும். இப்பரந்த நாட்டில் செம்மையான ஆட்சி முறையை நிறுவ, கி.பி.1533இல் 72 **பாளையப்பட்டு முறையை** விசுவநாதர் ஏற்படுத்தினார். இந்தப் பாளையப்பட்டு முறை ஒரு வகையில் ஆங்கில நாட்டின் நிலமானிய முறையைச் ( Feudal System) சார்ந்ததாகும். நாட்டில் அமைதியை நிலைநாட்ட வேண்டும், நாட்டின் பாதுகாப்பைப் பலப்படுத்த வேண்டும், பொருளாதாரத்தை மேம்படுத்த வேண்டும் என்ற காரணங்களுக்காக மதுரை நாட்டைப் பல பகுதிகளாகப் ( பாளையங்களாக) பிரித்து, ஒவ்வொரு பகுதிக்கும் ஓர் ஆட்சியாளரை நியமித்தனர். அவரைப் பாளையக்காரர் என

அழைத்தனர். இந்த 72 பாளையக்காரர்களில் சிலர் கன்னடர், சிலர் தெலுங்கர் ஆவர். மேலும் பாண்டியர் பரம்பரையைச் சேர்ந்தவர்களும் சிற்றரசர்களாய் இருந்தவர்களும் பாளையக்காரர்களாக இருந்தார்கள்.

பாளையக்காரர்கள் தாங்கள் ஆளும் பாளையங்களிலிருந்து கிடைக்கும் வருவாயில் மூன்றில் ஒரு பகுதியை மதுரை நாயக்கருக்குக் கொடுக்க வேண்டும். மற்றொரு பகுதியைப் படைவீரர்களுக்குச் செலவிட வேண்டும். இன்னொரு பகுதியைச் சொந்தச் செலவுக்கு எடுத்துக் கொள்ளவேண்டும். இவர்கள் தங்கள் பகுதியைப் பாதுகாக்க வேண்டும். போர்க்காலங்களில் மதுரை நாயக்கர்களுக்குப் படைத்துணை புரிய வேண்டும். இவர்களே தங்கள் பகுதியில் ஏற்படக்கூடிய வழக்குகளை எல்லாம் விசாரித்து நீதியும் வழங்க வேண்டும்.

விசுவநாத நாயக்கர், விசயநகரப் பேரரசர்களாயிருந்த **அச்சுதராயருக்கும்**, **சதாசிவராயருக்கும், அமைச்சர் இராமராயருக்கும்** கீழ்ப்படிந்து, நேர்மை குறையாமல், உண்மை ஊழியராய் இருந்து செங்கோல் ஆட்சி நடத்தி வந்தார். இதனை இவர் காலத்துச் சாசனங்கள் உறுதிப்படுத்துகின்றன. இவர் சுமார் 35 ஆண்டுகள் மாட்சியுடன் ஆட்சி செய்தார். தமது 69ஆம் வயதில் கி.பி.1564இல் மறைந்தார்.

இவரின் மறைவுக்குப் பின் **முதலாம் கிருஷ்ணப்ப நாயக்கர்** (கி.பி.1564-1572), **வீரப்ப நாயக்கர்** (கி.பி.1572-1595), **இரண்டாம் கிருஷ்ணப்ப நாயக்கர்** (கி.பி.1595 – 1601), **முத்துக் கிருஷ்ணப்ப நாயக்கர்** (கி.பி. 1601 – 1609), **முதலாம்**

**முத்துவீரப்ப நாயக்கர்** (கி.பி.1609-1623) ஆகியோர் மதுரையை ஆட்சி புரிந்து வந்தனர்.

**திருமலை நாயக்கர் (கி.பி.1623-1659)**



மதுரை நாயக்க மன்னர்களில் மிகவும் புகழ்பெற்றவர் **திருமலை நாயக்கர்** ஆவார். இவர் முத்துக் கிருஷ்ணப்பருக்கு இரண்டாவது மகனாகப் பிறந்தார். திருமலை நாயக்கரின் முழுப்பெயர் **திருமலை சவுரி நாயுனு அய்யுலுகாரு** என்பதாகும். திருமலை நாயக்கர் முதலில் தம்முடைய அண்ணனான முதலாம் முத்து வீரப்ப நாயக்கர் ஆட்சியில் சில ஆண்டுகள் சின்ன துரையாக இருந்து ஆட்சி புரிந்து வந்தார். முதலாம் முத்து வீரப்ப நாயக்கர் சந்ததியின்றி கி.பி.1623இல் மறைந்தார். வாரிசு ஏதும் இல்லாததால் அவரது உடன்பிறந்தவரான திருமலை நாயக்கர் ஆட்சியை ஏற்றார். திருமலை நாயக்கர் ஆட்சியை ஏற்றபோது அவருக்கு வயது 39 இருக்கும் என்பர்.

திருமலை நாயக்கரின் காலத்தில் மதுரைப் பெருநாடு, திண்டுக்கல், மதுரை, திருநெல்வேலி, திருவனந்தபுரத்தில் ஒரு பகுதி, இராமநாதபுரம், சிவகங்கை, புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி, சேலம், கோயம்புத்தூர் ஆகிய பகுதிகளைக் கொண்ட பெரும் பரப்புடைய நாடாய் இருந்தது.

**தலைநகரம் மாற்றம்**

விசுவநாத நாயக்கர் காலத்தில் மதுரையே மதுரை நாட்டின் தலைநகராய் இருந்தது. முதலாம் முத்து வீரப்ப நாயக்கர்

கி.பி.1616இல் மதுரை நகரிலிருந்து தலைநகரைத் திருச்சிராப்பள்ளிக்கு மாற்றினார். திருமலை நாயக்கரும் தம் தமையனாரைப் போலவே மதுரையில் முடிசூட்டிக் கொண்டு, திருச்சிராப்பள்ளியில் இருந்தே ஆறு அல்லது ஏழு ஆண்டுகள் ஆட்சி புரிந்து வந்தார்.

திருமலை நாயக்கரின் தமையனார் மதுரையைத் தலைநகராகக் கொள்ளாததற்குச் சில காரணங்கள் உள்ளன. மதுரையில் தக்க காவல் நிறைந்த அரண்கள் இல்லை. சோழநாட்டில் பாயும் காவிரி ஆறு போன்று நீர் பெருகி ஓடும் ஆறாக வைகை இல்லை. அடிக்கடி மதுரையில் காய்ச்சல் பரவிக் கொண்டிருந்தது. இக் காரணங்களால் தலைநகரைத் திருச்சிராப்பள்ளிக்கு மாற்றினார்.

கி.பி.1634இல் திருமலை நாயக்கர் திருச்சிராப்பள்ளியில் அமைந்திருந்த தலைநகரை மதுரைக்கு மாற்றினார். ஏனென்றால் ஒரு சமயம் திருமலை நாயக்கருக்குக் கடுமையான நோய் ஏற்பட்டது. பலவகை மருந்துகளை உட்கொண்டும் நோய் தீரவில்லை. அச்சமயத்தில் மதுரையில் மீனாட்சியம்மன் திருக்கோயில் திருவிழா நடந்து கொண்டு இருந்தது. திருமலை நாயக்கர் அத்திருவிழாவைக் காண மதுரைக்குச் சென்று கொண்டிருந்தபோது, நோய் மிகுதியானபடியால் பயணத்தைத் தொடரமுடியாமல், வழியில் திண்டுக்கல்லில் தங்கினார். அன்று இரவு ஒரு சித்தர் அவருடைய கனவில் தோன்றி “அரசே! நீ மதுரையில் நிலையாகத் தங்கி, மீனாட்சி அம்மையாருக்கும், சொக்கநாதப் பெருமானுக்கும் வழிபாடும் திருவிழாவும் நடத்தி

ஆட்சி புரிந்து வந்தால் இந்நோய் நீங்கும்" என்றார். உடனே திருமலை நாயக்கர் அவ்வாறு நீங்குமானால் ஐந்து லட்சம் பொன்னுக்குத் திருப்பணி திருவாபரணம் செய்து வைக்கிறேன் என்று நேர்ந்து கொண்டார். மறுநாள் காலையில் அந்நோய் அவரை விட்டு நீங்கிவிட்டது. பின்பு தலைநகரையும் மதுரைக்கு மாற்றினார். திருமலை நாயக்கர் தலைநகரைத் திருச்சிராப்பள்ளியிலிருந்து மதுரைக்கு மாற்றியதற்குக் காரணமாக இக்கதை கூறப்படுகிறது.

**திருமலை நாயக்கரின் போர்கள்**

திருமலை நாயக்கர் ஆட்சிப் பீடத்தில் ஏறியதும் மதுரை நாட்டைப் பாதுகாக்க வேண்டியவற்றைச் செய்வதில் முற்பட்டு இரண்டு கோட்டைகளைக் கட்டினார். பின்பு சுமார் 20,000 வீரர்களைக் கொண்ட படையைத் திரட்டினார். திருமலை நாயக்கர் ஐந்து பெரும் போர்களை நடத்தினார்.

முதலாவதாக, முந்திய பகைமையாலும், செந்தமிழ் மதுரை நாட்டின் செழிப்பாலும் மைசூர் மன்னர் மதுரை மீது படையெடுத்தார். திருமலை நாயக்கர் அவரை எதிர்த்துப் போராட வேண்டியவரானார்.

இரண்டாவது, திருவாங்கூர் மன்னர் **கேரளவர்மா** என்பவர் கட்ட வேண்டிய கப்பத்தைக் கட்டாததனால் அவர் மீது படையெடுத்துச் சென்று போர் புரியலானார்.

மூன்றாவது, விசயநகரப் பேரரசின் பிடியிலிருந்து விடுபட்டு, முழுவுரிமை மன்னராக விரும்பி, விசயநகரப் பேரரசை எதிர்க்க வேண்டிப் போர் தொடுத்தார்.

நான்காவது, இராமநாதபுரத்தில் அரசுரிமைக் கலகங்கள் ஏற்பட்ட காலத்தில் அவற்றை அடக்கி அமைதியை நிலைநிறுத்த இராமநாதபுரத்தை ஆண்டு வந்த **சேதுபதி**யுடன் போர் செய்தார்.

ஐந்தாவதாக மைசூர் மன்னர் படைகள் மதுரை நாட்டைத் தாக்கி மதுரைக் குடிமக்களின் மூக்குகளை அறுத்து அவமானப்படுத்தியதால், இரண்டாம் முறை பழிக்குப் பழி வாங்க மைசூரின் மீது **மூக்கறுப்புப் போரை** நடத்தினார். திருமலை நாயக்கரின் படைவீரர்கள் மைசூர் நாட்டு எல்லைக்குள் புகுந்து, அங்குள்ள மக்களின் மூக்குகளை அறுத்து மூட்டையாகக் கட்டி மதுரைக்குக் கொண்டுவந்தனர்.

இவ்வாறு திருமலை நாயக்கர் தமது வாழ்நாள் முழுவதும் பெரும்போர் புரிந்துகொண்டே இருக்க வேண்டியவராய் இருந்ததுமின்றி, அப்போர்களுக்காகப் பெரும்பொருள் செலவு செய்ய வேண்டிய நிலையிலும் இருந்து வந்தார். இப்போர்களினால் மதுரை நாட்டு மக்கள் சொல்லொணாத் துன்பத்திற்கு ஆளானார்கள்.

**கலைப் பணிகள்**

திருமலை நாயக்கர் ஒரு தலைசிறந்த கலைப்பிரியர் ஆவார். மதுரையில் அவர் எழுப்பியுள்ள கட்டடங்கள் இன்றும் நின்று அவரை நினைவூட்டிக் கொண்டிருக்கின்றன. **திருமலை நாயக்கர் மகால்** இவர் கட்டிய கட்டடங்களுள் புகழ்பெற்றதும்,

பெரியதுமாகும். ஷாஜகான் பெயர் சொல்லும் தாஜ்மகாலைப் போல, திருமலை நாயக்கரின் பெயர் சொல்லும் வகையில் மகால் அமைந்துள்ளது. இம்மகாலில் உள்ள அற்புதமான வேலைப்பாடு அமைந்த வளைவுகள், வட்டவடிவான மேற்கூரைகள், விரிந்து அகன்ற கூடங்கள், மிகப் பெரிய தூண்கள் காண்போர் கண்ணைப் பறிப்பனவாகும். ஒவ்வொரு தூணும் 40 அடி உயரமும், மூவர் அல்லது நால்வர் சேர்ந்தணைத்தாலும் அணைக்க முடியாத அளவு பருமனும் கொண்டு விளங்குவதை, மகாலின் முற்றத்தில் இன்றும் காணலாம்.





மேலும் திருமலை நாயக்கர் மீனாட்சியம்மன் கோயிலின் கிழக்கே உள்ள பெரிய கோபுரத்தின் எதிரே கட்டிய **புதுமண்டபம், இராய கோபுரம்** மற்றும் மதுரைக்குக் கிழக்கே உள்ள வண்டியூரில் அழகிய



மையமண்டபத்துடன் உருவாக்கிய **தெப்பக்குளம்** ஆகியன அவருடைய புகழை இன்றும் பறைசாற்றிக் கொண்டிருக்கின்றன . இராய கோபுரம் முற்றுப்பெறாத நிலையில் நின்றுவிட்டது . இதைத் திருமலை நாயக்கர் கட்டி முடித்திருப்பாரே என்றால், அதுவே மதுரைக் கோபுரங்களில் மிகவும் உயரமாக அமைந்திருக்கும் என்பர்.

**பொதுநலப் பணிகள்**

திருமலை நாயக்கர் அரிய பெரிய கட்டடங்களைக் கட்டுவதிலும், தெப்பக்குளம் அமைப்பதிலும் கவனம் செலுத்தியதோடு மட்டும் நிற்கவில்லை. பொதுநலத்திற்குரிய சாலைகள் அமைப்பதிலும், சத்திரங்கள் கட்டுவதிலும் அவர் நாட்டம் செலுத்தினார்.

திருமலை நாயக்கர் ஊட்டத்தூர் முதல் கன்னியாகுமரி வரையில் சாலை அமைக்கச் செய்து இடையிடையே பயணிகள் தங்குவதற்குச் சத்திரங்கள் பலவற்றைக் கட்டிவைத்தார். பின்பு

அச்சத்திரங்களில் அன்னதானம் செய்யுமாறும் ஏற்பாடு செய்தார். இதனை மதுரைத் திருப்பணி மாலை என்னும் நூலில் உள்ள ஒரு செய்யுள் பின்வருமாறு குறிப்பிடுகிறது.

முனைவேல் விழிஅங் கயற்கண்ணி சந்நிதிமுன் மடத்துள்
அனைவோர்க்கும் அன்னமும் தோழியம் மாடன் அறைக்கும் அனு
தினம்மே தினியில் நடக்கும் படிக்(கு) ஈந்(து) இசையும் கொண்டான்
புனவேலி தந்தனன் கச்சித் திருமலை பூபதியே.

**கோயில் நலப்பணிகள்**

திருமலை நாயக்கர் கடவுள் பக்தி மிக்கவராய் இருந்ததால் மதுரைக் கோயில்களில் மட்டும் அன்றி, வேறு கோயில்களிலும் திருப்பணிகள் செய்ததாக அறிகிறோம்.

மதுரைக் கோயில் ஆட்சி, **அபிடேக பண்டாரம்** என்பவரிடம் இருந்தது. பண்டாரத்தின் ஆட்சியில் கோயில் சீர்கேடான நிலையில் கிடந்தது. வழிபாட்டு முறைகள் நன்றாக நடைபெறவில்லை. கோயில் வருவாய் முழுவதும் அப்பண்டாரத்தால் கொள்ளையடிக்கப்பட்டு வந்தது. இதனைத் தெரிந்து கொண்ட திருமலை நாயக்கர் அக்கோயில் ஆட்சியைத் தாமே ஏற்றுக்கொண்டு நடத்தினார். மேலும் கோயிலில் அறக்கட்டளைகளை ஏற்படுத்தினார். கோயில் ஆட்சியில் ஒழுங்கு ஏற்பாடுகளைச் செய்தார். மாசி மாதத்தில் நடைபெறும் விழாவைச் சித்திரைக்கு மாற்றினார். பல விழாக்களை எடுத்து

நடத்தினார். சான்று : பிட்டுக்கு மண் சுமந்தது போன்ற திருவிளையாடல் விழாக்கள், தெப்பத் திருவிழா போன்றவை.

**சொக்கநாத நாயக்கர் (கி.பி.1659-1682)**

திருமலை நாயக்கர் இறந்தவுடன் அவரது மகன் **இரண்டாம் முத்துவீரப்ப நாயக்கர்** (கி.பி.1659) ஆட்சிக்கு வந்தார். இவர் சுமார் நான்கு மாதங்களே ஆட்சி புரிந்து உயிர் நீத்தார். அவருக்குப் பின் அவருடைய மகன் **சொக்கநாத நாயக்கர்** ஆட்சிக்கு வந்தார்.

**சதி**

சொக்கநாதர் ஆட்சியை ஏற்றபோது அவர் இளைஞராய் இருந்தார். இதனால் அங்குத் தளவாயாகப் பணிபுரிந்த இலிங்கம நாயக்கனும், பிரதானியாய் இருந்தவனும், இராயசமாகப் பணி செய்தவனும் ஆகிய மூவரும் ஒன்று சேர்ந்து சதித் திட்டம் வகுத்தனர்; பெயரளவில் சொக்கநாதரை அரசராக இருக்க வைத்துவிட்டு, அவரிடமிருந்து அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்டனர்; மன்னருக்கு ஆதரவாக இருந்தவர்களைச் சிறையில் அடைத்தனர். அச்சமயத்தில் செஞ்சி நகரம் பீஜப்பூர் சுல்தான் ஆட்சியில் இருந்தது. பிரதானியும், இராயசமும் மன்னர் சொக்கநாதரின் இசைவைப் பெறாமல் செஞ்சிமீது போர் தொடுப்பதாகச் சொல்லிப் படையை அங்கு நிறுத்தி வைத்துவிட்டு, மதுரையில் உள்ள மக்களிடம் போர்ச் செலவிற்காகப் பெரும்பொருள் வேண்டும் என்று மக்களைத் துன்புறுத்திப் பணத்தை வசூலித்தனர். அதோடு மட்டுமல்லாமல் செஞ்சியைக் கண்காணித்து வந்த சகோசி என்பவரிடமிருந்து

லஞ்சமாகப் பணத்தைப் பெற்றுக் கொண்டனர். இதுபோன்ற சதித் திட்டம் அரண்மனைப் பெண் ஒருத்தி மூலம் சொக்கநாத நாயக்கருக்குத் தெரியவந்தது. உடனடியாகச் சொக்கநாத நாயக்கர் இராயசத்தைக் கொன்று, பிரதானியைக் குருடாக்கினார். பின்பு சொக்கநாத நாயக்கர் தமக்கு ஆதரவாக இருந்தவர்களைச் சேர்த்துக்கொண்டு விரைவில் அதிகாரத்தைக் கைப்பற்றி முழு உரிமையோடு நாடாளத் தொடங்கினார்.

**பஞ்சமும் துன்பமும்**

சொக்கநாதரும் அவர் தந்தையார் முத்துவீரப்பரும் இசுலாமியப் படையெடுப்புகளை இடைவிடாது தடுத்து நிறுத்தினாலும் மதுரைப் பெருநாட்டு மக்களைப் படையெடுப்புகளிலிருந்து பாதுகாத்திருந்தாலும், அந்த இசுலாமியப் படையெடுப்புகளால் நாட்டு மக்களுக்கு மூன்று அல்லது நான்கு ஆண்டுகளுக்கு எல்லையற்ற தொல்லைகள் உண்டாயின. இத்தொல்லைகளோடு பஞ்சம் வேறு வந்துவிட்டது. மக்கள் தங்களின் சொந்த ஊர்களை விட்டுவிட்டு, பற்பல ஊர்களுக்குச் சென்று குடியேறினார்கள். உதாரணமாக, திருச்சியில் இருந்தவர்கள் மதுரையில் குடிபுகுந்தார்கள். கிறிஸ்தவர்களுள் சிலர் நெடுந்தொலைவிலுள்ள சென்னை மயிலாப்பூரில் தஞ்சம் புகுந்தனர். தென்னகத்து நெற்களஞ்சியமான தஞ்சையிலும், திருச்சியிலுமே இப்பஞ்சம் மிகுதியாய் இருந்தது.

பஞ்சத்தால் நாட்டு மக்கள் உணவின்றி வாடிக் கொண்டிருக்கும்போது டச்சு வணிகர்கள் வறுமையில் வாடும்

மக்களுக்கு உணவு, உடை இவைகளைக் கொடுத்து மகிழ்ச்சியூட்டி அவர்களை ஐரோப்பிய நாடுகளுக்கு அடிமைகளாக விற்றனர்.

தஞ்சையில் பஞ்சம் இருந்தபோது அங்கு ஆண்டுவந்த மன்னர் இப்பஞ்சத்தைப் போக்குவதற்கு எந்த வித முயற்சியும் எடுக்கவில்லை. ஆனால் சொக்கநாதரோ பஞ்சத்தில் வாழும் மக்கள் எந்நாட்டவர்களாக இருந்தாலும் சரி, அவர்கள் தஞ்சையைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி, தம் நாட்டைச் சேர்ந்த திருச்சியில் வாழ்பவராக இருந்தாலும் சரி எல்லோருக்கும் உணவுகளை வழங்கினார். இருப்பினும் அவர் அளித்த உணவுப் பொருட்கள் போதுமானதாக இல்லை.

இப்பஞ்சம் மட்டும் அல்லாமல் காடுகளிலிருந்து வனவிலங்குகள் நாட்டில் புகுந்து அதிக சேதத்தை விளைவித்தன. பயிர்கள் அழிக்கப்படலாயின. மதுரையில் உள்ள மக்கள் அதிகமாக நோய்வாய்ப்பட்டு மடிந்தனர். இவ்வாறான பேரின்னல்களைச் சொக்கநாத நாயக்கர் சந்தித்தார்.

சொக்கநாதர் தாம் அரசாட்சியை ஏற்றதிலிருந்து பல துன்பங்களைச் சந்தித்துக் கொண்டிருந்தார். இவர் ஓயாது போர் புரியவேண்டியிருந்தது. இவர் இளைஞராக இருந்த காரணத்தினால் போரில் ஈடுபட்டார். ஒரு சமயம் **வனமியான்** என்பவன் தஞ்சையின் உதவியுடன் திருச்சிக்குப் படையெடுத்து வந்தான். இவ்வனமியான் பீஜப்பூர் சுல்தான் அடில்ஷாவிடம் படைத்தலைவனாக இருந்தான். இவன் திருச்சியின் மீது படையெடுத்து வந்தபோது அங்குள்ள பயிர்களை

எரித்தான். மக்களைத் துன்புறுத்தினான். மக்கள் சொல்லொணாத் துயருக்கு உள்ளானார்கள். மன்னர் சொக்கநாதரிடம் பெரும்படையிருந்தாலும் தன் குடிமக்களுக்குத் தொல்லை நேராமல் இருக்கும் பொருட்டு, வனமியான் நாட்டை விட்டு அகலுவதற்காக அவனுக்குப் பெரும்பொருளைக் கொடுத்து அனுப்பினார்.

### சொக்கநாத நாயக்கர் போர்கள்

சொக்கநாத நாயக்கர் பல போர்களில் ஈடுபட்டிருந்தாலும் அவருடைய வரலாற்றில் மூன்று முக்கியப் போர்களைக் கூறலாம். அவையாவன: தஞ்சை மீது போர் தொடுத்தது, சேதுபதியுடன் போர் புரிந்தது, தஞ்சை மன்னர் விசயராகவ நாயக்கர் பெண் கொடுக்க மறுத்தமைக்காகப் போர் புரிந்தது என்பன.

### தஞ்சை மீது போர்

பெரும்பொருள் கொடுத்து வனமியானை ஒழித்த பின்பு சொக்கநாத நாயக்கர் வெற்றிச் செருக்குற்றுப் பழி வாங்கும் திட்டத்தில் இறங்கி அழிவுப் பாதையில் செல்ல ஆரம்பித்தார். தஞ்சை விசயராகவ நாயக்கர் முன்னர் நடந்த வனமியான் படையெடுப்பில் தமக்கு உதவி புரியாமல் எதிரிகளோடு சேர்ந்து கொண்டதற்காக அவரைப் பழி வாங்கக் கருதித் தஞ்சை மீது கி.பி.1664இல் படையெடுத்துச் சென்று வல்லத்துக் கோட்டையைக் கைப்பற்றினார். தஞ்சை நாயக்கர் வேறொன்றும் செய்யமுடியாது, சொக்கநாத நாயக்கர் சொற்படி நடக்க ஒப்புக்கொண்டார். ஆதலால், சொக்கநாத நாயக்கர் வல்லத்தில்

தமது பாதுகாப்புப் படையை நிறுத்திவிட்டு மதுரைக்குத் திரும்பினார். ஆனால் சிறிது காலம் கழித்து விசயராகவ நாயக்கர் வல்லத்தை மீட்டுக் கொண்டார்.

**சேதுபதியுடன் போர்**

சொக்கநாதர் வல்லத்தைக் கைப்பற்றித் தஞ்சை மன்னரைப் பழிவாங்கியதோடு விடாமல், தம் படை வீரர்களின் போர் ஆர்வம் குறைந்து போவதற்குள், வனமியான் படையெடுப்பில் திருமலைச் சேதுபதி தமக்குப் படையுதவி செய்யாமல் இருந்ததற்காக அவர்மீது போர் தொடுத்தார். முதலில் சொக்கநாத நாயக்கர் சேதுபதி ஆண்டு வந்த மறவர் சீமையில் புகுந்து திருப்பத்தூர், புதுக்கோட்டை, மானாமதுரை, காளையார் கோயில் போன்ற இடங்களைக் கைப்பற்றினார். இதை அறிந்த சேதுபதி சிறிதும் மனம் கலங்கவில்லை. நேர்நின்று எதிர்த்துப் போர் புரிவதைக் கைவிட்டு, மறைந்து தாக்கும் மாயப் போரில் ஈடுபட்டார். இதனால் மதுரையிலிருந்து வந்த சொக்கநாத நாயக்கரின் போர்வீரர்கள் மடியலானார்கள். அச்சமயத்தில் மதுரைத் தலைநகரில் சமயச் சார்பான விழாவை முன்னிருந்து நடத்த வேண்டிய பொறுப்பு இருந்ததால் சொக்கநாத நாயக்கர் மறவர் நாட்டுப் போர்ப் பொறுப்பைத் தம் படைத் தலைவரிடம் ஒப்படைத்துவிட்டு மதுரைக்குத் திரும்பினார்.

**பெண் கொடுக்க மறுத்தமைக்காகப் போர்**

தமிழ்ச் சிற்றிலக்கியங்களில் ஒன்றான **கலம்பகத்தில்** பெண் கொடுக்க மறுத்துப் போர் செய்ததாகக் கூறும் **மறம்** என்னும் துறை இருக்கக் காண்கிறோம்.

தஞ்சை மன்னர் விசயராகவ நாயக்கரிடம் தமக்குப் பெண் கொடுக்குமாறு சொக்கநாத நாயக்கர் கேட்க, அவர் மகளைக் கொடுக்க மறுத்த காரணத்தால் சொக்கநாதர் அத்தஞ்சை மன்னரோடு கி.பி.1673இல் போர் தொடுத்தார். விசயராகவ நாயக்கர் அரசர் வழிவந்தவர், ஆனால் சொக்கநாத நாயக்கரோ அரசாங்க ஊழியராக இருந்த விசுவநாத நாயக்கர் பரம்பரையில் வந்தவர். அரசப் பரம்பரை இல்லாத காரணத்தால் சொக்கநாத நாயக்கருக்கு விசயராகவ நாயக்கர் பெண் கொடுக்கவில்லை. பலமுறை சொக்கநாத நாயக்கர் விசயராகவ நாயக்கருக்குத் தூது அனுப்பியும் பெண் கொடுக்க மறுத்துவிட்டார். கடைசியில் விசயராகவ நாயக்கர் அரண்மனையில் அந்தப்புரத்தை வெடிவைத்து அழிக்குமாறு கட்டளையிட்டு விட்டுப் போர்புரிந்து தம் மகளுடன் உயிர் நீத்தார்.

**மங்கம்மாள் (கி.பி. 1689-1706)**

இவள் சொக்கநாத நாயக்கரின் மனைவி ஆவாள். சொக்கநாத நாயக்கருக்கும் மங்கம்மாளுக்கும் பிறந்த மகன் **மூன்றாம் முத்துவீரப்ப நாயக்கர்** ஆவார். இவர் தன் தந்தை சொக்கநாத நாயக்கரின் மறைவுக்குப் பின் பட்டத்திற்கு வந்து ஏழு ஆண்டுகள் (கி.பி. 1682-1689) ஆட்சி புரிந்தார். இவர் தமது ஆட்சிக் காலத்தில், தம் தந்தையார் இழந்த மதுரை நாட்டின் பகுதிகளை மீட்டார். இவருடைய மகன் **விசயரங்க சொக்கநாதன்** ஆவார். இவர் பிறந்தபோது இவரது தந்தையார் உயிருடன் இல்லை. எனவே மூன்றாம் திங்களிலேயே குழந்தை விசயரங்க சொக்கநாதனுக்குப் பட்டம் சூட்டி,

பாட்டியாகிய **மங்கம்மாள்** அக்குழந்தையின் சார்பாக ஆட்சிப் பொறுப்பை ஏற்று நடத்தலானாள். கி.பி.1689இலிருந்து 1706வரையில் மங்கம்மாளின் சார்பாட்சி மதுரைப் பெருநாட்டில் மாண்புற நடைபெற்றது.

**மங்கம்மாளின் ஆட்சி**

**ஔரங்கசீப்பு** என்னும் மொகலாய அரசன் இந்தியாவின் பெரும்பகுதியை ஆண்டு வந்தான். தென்னகத்திலிருந்து அம்மன்னனை எதிர்த்துக் கொண்டிருந்த **சிவாஜி** என்ற மன்னர் மறைந்து விட்டார். இவரது மறைவின் காரணமாகத் தென்னகத்தில் ஔரங்கசீபின் ஆட்சி ஏற்படலாம் என எண்ணிப் பல அரசர்கள் அவனுடன் உடன்படிக்கை செய்து கொண்டனர். மைசூர் மன்னன் **சிக்கதேவராயன்** ஔரங்கசீபுடன் உடன்படிக்கை செய்து கொண்டான். தஞ்சையை ஆண்டு வந்த மராட்டிய வேந்தன் ஷாஜி என்பவனும் ஔரங்கசீப்புக்குத் தலைவணங்கித் திறை செலுத்த முற்பட்டு விட்டான். இவற்றையெல்லாம் அறிந்து கொண்ட மங்கம்மாளும் காலநிலை, மாற்றான் வலிமை அறிந்து ஔரங்கசீப்புக்குத் திறைப் பணம் செலுத்தி மதுரையைத் தக்கவைத்துக் கொண்டாள்.

மங்கம்மாள் ஔரங்கசீப்புக்குத் திறை செலுத்தி வந்தாலும் அவர்களுடன் நட்புக் கொண்டு அவர்கள் உதவியால் பகைவர்கள் கைப்பற்றிக் கொண்டிருந்த மதுரை நாட்டுப் பகுதிகளை எளிதாக மீட்டுக் கொண்டாள். தஞ்சை மன்னன் மதுரை நாட்டுப் பகுதிகள் சிலவற்றை முன்பே கைப்பற்றி ஆண்டு கொண்டிருந்தான். இருப்பினும் இந்தத் தஞ்சை மன்னன் ஷாஜி ஔரங்கசீப்புக்குத்

திறை செலுத்தி வந்த காரணத்தால் அவனோடு போர் புரிய முடியவில்லை. இருந்தபோதிலும் மொகலாயப் படைத்தலைவன் **சுல்பிர்கான்** கி.பி. 1697இல் தெற்கே வந்தபோது, மங்கம்மாள் அவனுக்கு விலையுயர்ந்த பொருள்களை அன்பளிப்பாகக் கொடுத்து அவனுடைய உதவியால் தஞ்சை மன்னன் பிடித்து வைத்திருந்த அப்பகுதிகளை மீட்டுக் கொண்டாள்.

எனினும் மங்கம்மாளுக்கு மராட்டியர் அடிக்கடி தொல்லைகள் தந்து வந்தனர். அவர்களுக்கு மங்கம்மாள் பல முறை பணம் கொடுத்து அவர்களுடைய தொல்லைகளுக்கு ஓர் எல்லை கட்டி வைத்தாள். மதுரையைக் காக்க மங்கம்மாள் இவ்வாறு எல்லாம் செய்ய வேண்டியதாயிற்று.

**மங்கம்மாள் செய்த போர்கள்**

மங்கம்மாள் மைசூர், தஞ்சை போன்ற இடங்களை ஆண்டு கொண்டிருந்த மன்னர்கள் மீது போர் தொடுத்தாள்; சேதுபதியுடன் போர் புரிந்தாள்; இரவிவர்மன் என்பவனைத் தண்டிக்க வேண்டியும் படையெடுப்பு நடத்தினாள்.

**மைசூர் படையெடுப்பு**

திருச்சிராப்பள்ளியைக் கைப்பற்ற வேண்டி மைசூர் மன்னன் **சிக்கதேவராயன்** தனது படைத்தலைவன் **குமரய்யா** என்பவனை அனுப்பி வைத்தான். அப்படைத் தலைவன் திருச்சிராப்பள்ளியை முற்றுகையிட்டுக் கடும்போர் புரிந்து கொண்டிருந்தான். இச்சமயத்தில் மைசூரை மராட்டியர் தாக்க முற்பட்டனர். இதனை அறிந்த அப்படைத்

தலைவன் குமரய்யா திருச்சிராப்பள்ளி முற்றுகையைக் கைவிட்டு, தன் நாட்டைக் காக்கும் பொருட்டுத் திரும்பினான். இந்தச் சந்தர்ப்பத்தை மங்கம்மாள் நன்றாகப் பயன்படுத்திக் கொண்டு எஞ்சி நின்ற மைசூர்ப் படையை அஞ்சாது தாக்கி வெற்றி பெற்றாள். இதனால் மைசூர்த் தொல்லை ஒழிந்தது.

**தஞ்சைப் போர்**

தஞ்சையை ஆண்டு வந்த **ஷாஜி** (கி.பி.1684-1712) என்பவன் கி.பி.1700இல் தனது படைத்தலைவன் மூலம் மதுரை நாட்டில் அடங்கிய திருச்சிப் பகுதியில் நுழைந்து நாட்டைக் கொள்ளையடித்துக் கொண்டிருந்தான். இதனை அறிந்த மங்கம்மாள் மொகலாயப் பேரரசின் உதவியின்றித் தனது படைத்தலைவன் தளவாய் **நரசப்பய்யா** என்பவனை அக்கொள்ளையைத் தடுக்கும்படி உத்தரவிட்டாள். ( தளவாய்– படைத்தலைவன்.) எவ்வளவு செய்தும் அக்கொள்ளையைத் தடுக்க முடியாமல் போனதும், நரசப்பய்யா ஒருவருக்கும் தெரியாமல் கொள்ளிடத்தில் வெள்ளம் குறைந்தபோது தனது படைவீரர்களுடன் அக்கரைக்குச் சென்று தஞ்சை நாட்டில் உள்ள நகரங்களைக் கொள்ளையடிக்க முற்பட்டான். இதனை அறிந்து கொண்ட தஞ்சை நாட்டுப் படைவீரர்கள் செய்வது அறியாது திகைத்து நின்றனர். இந்நிலையில் தஞ்சை மன்னன் ஷாஜியின் முதல் அமைச்சனாகிய **பாலோஜி** என்பவன் நிறைய பொருள்களைத் தனது நாட்டின் பெரும் வியாபாரிகளிடமிருந்து வாங்கிக் கொண்டும், கஜானாவிலிருந்து எடுத்துக் கொண்டும் போய்க் கொடுத்து நரசப்பய்யாவிடம் ஓர் ஒப்பந்தம் செய்து

கொண்டான். இதன் மூலம் மங்கம்மாளுக்கும், தஞ்சைக்கும் நல்லுறவு ஏற்பட்டது.

**இரவிவர்மன் மீது படையெடுப்பு**

மங்கம்மாளின் சம காலத்தவன் **இரவிவர்மன்** (கி.பி.1684-1718). இவன் திருவாங்கூரை ஆண்டு வந்தான். இந்த இரவிவர்மன் திருமலை நாயக்கர் காலந்தொட்டு மதுரைக்குச் செலுத்தி வந்த திறைப்பணத்தை நிறுத்திவிட்டான். இதனையறிந்த மதுரைநாட்டு வீரர்கள் திருவாங்கூர் மீது படையெடுத்தனர். அவ்வமயம் இரவிவர்மனின் நாட்டு அமைச்சர்கள் **எட்டுவீட்டுப் பிள்ளைமார்கள்** ஆவர். இவர்கள் இரவிவர்மனுக்குத் தொல்லை கொடுத்து வந்தனர். இவர்களை ஒழிக்க வேண்டும் என்று எண்ணி இரவிவர்மன் சூழ்ச்சி செய்தான். மதுரைப் படையினரை அணுகி எட்டுவீட்டுப் பிள்ளைமார்களை நாட்டைவிட்டு ஒழித்துக் கட்டினால் திருவாங்கூரில் பாதியைத் தருவதாக ஒப்புக் கொண்டான். இதை நம்பிய மதுரைப்படையினர் எட்டுவீட்டுப் பிள்ளைமார்களைத் தாக்கி ஒழித்தனர். ஆனால் ஒப்பந்தப்படி இரவிவர்மன் நடந்து கொள்ளவில்லை. அதற்கு மாறாக மதுரைப் படையினரைத் தாக்கி அழிக்கலானான். மதுரைப் படையினர் தப்பி ஓடி இச்செய்தியை மங்கம்மாளிடம் கூறினார்கள். இதுகேட்ட மங்கம்மாள் பொங்கி எழுந்தாள். கி.பி.1697இல் தளவாய் நரசப்பய்யா தலைமையில் ஒரு பெரும்படையைத் திருவாங்கூருக்கு அனுப்பினாள். தளவாய் நரசப்பய்யா கடும்போர் நடத்தி வெற்றி பெற்றான். திருவாங்கூர் மன்னன் வெகுநாள்

வரைக்கும் கட்டாமல் இருந்த திறைப்பணம் முழுவதையும் பெற்றுக் கொண்டு மதுரை திரும்பினான்.

**சேதுபதியுடன் போர்**

மறவர் சீமை எனப்படும் சேதுநாட்டை ஆண்டுவந்த சேதுபதி, மங்கம்மாளின் ஆட்சிக் காலத்தில் கி.பி.1698இல் மதுரையைக் கைப்பற்றிச் சில காலம் ஆண்டு வந்தான். மங்கம்மாளின் ஆணைக்கு ஏற்பத் தளவாய் நரசப்பய்யா, மதுரையின் மீது படையெடுத்துச் சென்று வென்று, சேதுபதியை அங்கிருந்து சேதுநாட்டிற்கு விரட்டியடித்தான். ஆனால் மங்கம்மாள் சேதுபதியை அப்படியே விட்டுவிடவில்லை. கி.பி.1702இல் சேதுநாட்டின் மீது படையெடுத்துச் செல்லுமாறு தளவாய் நரசப்பய்யாவுக்கு ஆணையிட்டாள். அப்போது தஞ்சை மன்னன் ஷாஜி மங்கம்மாளுடன் கொண்டிருந்த நட்புறவைக் கைவிட்டுச் சேதுபதியோடு சேர்ந்து கொண்டான். போரில் நரசப்பய்யா கொல்லப்பட்டான். நரசப்பய்யா தலைமையில் சென்ற மதுரைப் படையும் தோல்வி அடைந்தது. அதன் பின்னர் சேதுபதியை மங்கம்மாளால் அடக்க முடியவில்லை. அவள் இறக்கும் முன்னரே சேதுநாடு முழுவுரிமை நாடாயிற்று. ( சேது நாடு என்பது தமிழ்நாட்டில் தற்போது உள்ள இராமநாதபுரம், சிவகங்கை ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கியிருந்த ஒரு நாடு ஆகும்.)

இவ்வாறாக மங்கம்மாள் பல போர்களைச் செய்து வெற்றியையும் தோல்வியையும் சந்தித்தாள்.

**சௌராஷ்டிர சாசனம்**

**சௌராஷ்டிரர்** என்பவர்கள் ஆரிய இனத்தைச் சார்ந்தவர்கள் **சௌராஷ்டிரர்** என்னும் சொல்லுக்குக் **கதிரவனை வழிபடுவோர்** என்பது பொருள். இவர்களின் முன்னோர்கள் கத்தியவார் என்று சொல்லப்படும் சௌராஷ்டிரா நாட்டைச் சேர்ந்தவர்களாதலால் சௌராஷ்டிரர் எனப்படுவர். இவர்களின் முன்னோர்கள் கத்தியவாரில் பட்டுநூல் நெசவுத் தொழிலில் ஈடுபட்டிருந்தனர். இவர்கள் கி.பி.5ஆம் நூற்றாண்டில் **குமார குப்தன்** என்ற குப்த மன்னன் விருப்பப்படி மேற்கு மாளவ நாட்டிலுள்ள மந்தகோர் என்ற நகரத்தில் குடியேறினர். அங்குக் கிடைக்கும் கல்வெட்டுகள் சௌராஷ்டிரர்களைப் **பட்டவாயகர்** என்று குறிப்பிடுகின்றன. இதற்கு நேரான தமிழ் மொழிபெயர்ப்பு **பட்டுநூல்காரர்** என்பதாகும். இன்றும் மதுரை நகரில் வாழும் சௌராஷ்டிரரைப் பட்டுநூல்காரர் என்றே அழைக்கின்றனர்.

இவர்கள் கஜினி முகமது படையெடுப்பால் மந்தகோரை விட்டுத் தேவகிரியை அடைந்து அங்கு வசித்தார்கள். அந்தத் தேவகிரி மீது மாலிக்காபூர் படையெடுத்தபோது இவர்கள் விசயநகரத்தை அடைந்து வாழ்ந்து வந்தனர். பின்பு விசயநகரம் தலைக்கோட்டைப் போரில் இசுலாமியரால் அழிக்கப்பட்டபோது சௌராஷ்டிரர்கள் விசயநகரத்தை விட்டு மதுரையை நோக்கி வரலாயினர். திருமலை நாயக்கர் காலத்தில் அவருடைய ஜரிகை வேலைப்பாடமைந்த துணிகளை நெய்வதற்காக மதுரைக்கு வந்து குடியேறி, அவரது அரண்மனையைச் சுற்றியுள்ள இடங்களில் வாழ்ந்து வரலானார்கள்.

மதுரையில் வந்து குடியேறிய சௌராஷ்டிரர்கள் பிராமணர்களுடைய ஆசாரங்கள் சிலவற்றை ( பூணூல் அணிதல் போன்றவற்றை) மேற்கொண்டனர். இதற்குப் பிராமண குலத்தைச் சார்ந்தவர்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர். எனவே, மங்கம்மாள் 'சௌராஷ்டிரர்கள் பிராமணரது ஆச்சாரங்களுக்கு உரியவர்களா அல்லரா' என்பதைச் சாத்திர வல்லுநர்களைக் கூட்டி ஆராய்ந்து, அவர்கள் கூறிய முடிவுப்படி 'சௌராஷ்டிரர்கள் பிராமணரது ஆச்சாரங்களுக்கு உரியவர்களே' என்று தீர்மானம் செய்தாள். அதைக் கி.பி.1705இல் பனை ஓலையில் ஒரு சாசனமாக அரசாங்க முத்திரையுடன் எழுதிக் கொடுத்தாள். இதனையே **சௌராஷ்டிர சாசனம்** என்பர்.

**மங்கம்மாளும் கிறிஸ்தவமும்**

மதுரை நாட்டின் அண்டை நாடான மறவர் நாடும், தஞ்சையும் கிறிஸ்தவ சமயத்திற்கு எதிர்ப்பு தெரிவித்தன. இவ்வெதிர்ப்பின் காரணமாக ஜான்-டி-பிரிட்டோ என்ற பாதிரியாரின் உடல் கண்டதுண்டமாக வெட்டப்பட்டுக் கழுகுகளுக்கு இரையாக்கப்பட்டது. மேலும் மறவர் நாட்டில் கிறித்தவ சமய ஊழியர்கள் துன்புறுத்தப்பட்டார்கள். பெர்னார்டு பாதிரியார் என்பவரின் பற்கள் உடைக்கப்பட்டன. அவரைப் பின்பற்றியவர்களுக்குச் சவுக்கடி கொடுக்கப்பட்டது. மறவர் நாட்டில் எதிர்ப்பு தெரிவித்தது போல் தஞ்சையிலும் பல எதிர்ப்புகள் கிளம்பின. கிறித்தவ சமயம் பரவினால் நாட்டிற்கு ஆபத்து ஏற்படும் என்று மங்கம்மாளுக்கு அண்டை நாட்டினர் கடிதம் எழுதினர். ஆனால் அதற்கு மாறாக மதுரையை ஆண்ட

மங்கம்மாள் கிறித்தவ சமயத்தைப் போதித்தவர்களுக்கும், அச்சமயத்தைத் தழுவியர்களுக்கும் பாதுகாப்பளித்தாள்; அவர்கள் மீது பரிவு காட்டினாள். மறவர் நாட்டுச் சிறையில் அடைபட்டுச் சாவை எதிர்பார்த்துக் கொண்டிருந்த மெல்லோ பாதிரியாரை விடுதலையடையும்படி செய்தாள்.

**மங்கம்மாளும் இசுலாமும்**

மங்கம்மாள் இசுலாமியரின் பள்ளிவாசல் மற்றும் தர்க்கா கட்டுவதற்கு நிலத்தைத் தானமாகக் கொடுத்ததைச் செப்பேட்டுச் சாசனங்கள் தெரிவிக்கின்றன. கி.பி.1692ஆம் ஆண்டுச் செப்புச் சாசனம் ஒன்று பள்ளிவாசலின் பாதுகாப்புக்காக, தன் பேரன் விசயரங்க சொக்கநாதர் பெயரால் நிலம் கொடுத்ததைக் கூறுகிறது. கி.பி.1701ஆம் ஆண்டுத் தெலுங்குச் சாசனம் ஒன்று, தர்க்காவுக்காகத் திருச்சிக்கு அருகில் இருக்கும் சில கிராமங்களை விட்டுக் கொடுத்ததைக் குறிப்பிடுகின்றது.

**மங்கம்மாள் செய்த அறச் செயல்கள்**

மங்கம்மாள் நாட்டு மக்களுக்குச் செய்து கொடுத்த வசதிகளும், சமய வேறுபாடு இல்லாமல் எல்லாச் சமயத்தார்க்கும் செய்த அறங்களும் இன்றும் மதுரைவாழ் மக்களால் பாராட்டப்படுகின்றன. மங்கம்மாள் கோயிலைக் கட்டி, குளங்களை வெட்டிக் கால்வாய்களைச் செப்பனிட்டுச் சாலைகளையும், சோலைகளையும் அமைத்து, சத்திரங்களையும் சாவடிகளையும் கட்டி, வழிப்போக்கர்களுக்குத் தண்ணீர்ப் பந்தல்களையும் ஏற்படுத்தினாள். கி.பி.1701ஆம் ஆண்டுச் சாசனம் ஒன்று, மங்கம்மாள் அன்ன சத்திரங்களுக்கு நிலங்களைக்

கொடுத்ததைக் கூறுகிறது. மதுரையில் புகைவண்டி சந்திப்பிற்கு எதிரே உள்ள **மங்கம்மாள் சத்திரம்** மங்கம்மாள் கட்டியதாகச் சொல்லப்படுகிறது.

**மீனாட்சி அரசி (கி.பி. 1732-1736)**

மங்கம்மாளுக்குப் பிறகு அவருடைய பேரன் **விசயரங்க சொக்கநாத நாயக்கர்** ஆட்சிக்கு வந்தார். இவர் கி.பி.1706 முதல் 1732 வரை ஆட்சியை நடத்தி வந்தார். இவருடைய மனைவி **மீனாட்சி அரசி** ஆவாள். இவர்களுக்குக் குழந்தைப் பேறு இல்லை. மீனாட்சி அரசி மங்கம்மாளைப் போல நாடாளும் ஆசை கொண்டாள். எனவே தன் கணவர் இறந்ததும் திருமலை நாயக்கரின் தம்பி **குமாரமுத்து**வின் வழிவந்த **பங்காரு திருமலை**யின் மகனாகிய **விசயகுமாரன்** என்பவனை மகன்மை செய்துகொண்டு ( சுவிகாரம் எடுத்துக்கொண்டு), கி.பி. 1732இல் மதுரை நாட்டின் ஆட்சியை மேற்கொண்டாள்.

மீனாட்சி அரசிக்கு நாடாளும் ஆசையிருந்தாலும், மங்கம்மாளுக்கு இருந்தது போன்ற ஆற்றல் இல்லை; அரசியல் அறிவும் இல்லை; உலக அனுபவமும் இல்லை. சூழ்ச்சிகளும் வீழ்ச்சிகளும் நிறைந்த அக்கால அரச வாழ்வுக்கு அவள் ஏற்றவளாக இல்லை. இதனால் அவள் அரசியல் வாழ்க்கை குறுகிய காலத்திலேயே முடிந்துவிட்டது.

மீனாட்சி அரசி மகன்மை செய்து கொண்ட விசயகுமாரனின் தந்தை பங்காரு திருமலைக்கு மதுரை நாட்டு மன்னனாகும் ஆசை மனத்தில் புகுந்தது. **தளவாய் வேங்கடாசாரி**யும் அவனது ஆசைக்கு ஆதரவு தந்தான்.

இருவரும் ஒன்று சேர்ந்து மீனாட்சி அரசியைக் கவிழ்க்க முயற்சி எடுத்தனர். முதலில் திருச்சிக் கோட்டைக்குள் நுழைந்து, மீனாட்சி அரசியை அரசபீடத்திலிருந்து அகற்றிவிட முயன்றனர். இம்முதல் முயற்சி கைகூடாமல் போயிற்று. எனினும் இருவரும் முயற்சியைக் கைவிடாமல் கலகம் செய்து கொண்டிருந்தனர்.

அப்போது ஆர்க்காட்டை **நவாப் தோஸ்து அலிகான்** என்பவன் ஆண்டு வந்தான். இவன் மதுரை நாட்டில் நடந்துவரும் கலகத்தை அறிந்தான். மதுரை நாட்டைக் கைப்பற்றிக் கப்பம் வாங்கி வரும்படி தன் மகன் **சப்தர் அலிகான்**, மருமகன் **சந்தாசாகிபு** ஆகிய இருவர் தலைமையில் மதுரைக்குப் படையை அனுப்பினான். இப்படையெடுப்பு கி.பி.1734இல் நிகழ்ந்தது.



**சந்தாசாகிபு**

ஆர்க்காட்டு நவாப் படை திருச்சியை வந்து அடைந்தது. இதை அறிந்த பங்காரு திருமலை சப்தர் அலிகானை நேரில் கண்டு, திருச்சியைக் கைப்பற்றித் தனக்கு அளித்தால் முப்பது இலட்சம் ரூபாய் அளிப்பதாகக் கூறி, அவனோடு ஓர்

உடன்படிக்கை செய்து கொண்டான். சப்தர் அலிகான் அப்பணத்தை வாங்கிவருமாறு சந்தாசாகிபுவைப் படையுடன் நிறுத்திவிட்டு ஆர்க்காடு திரும்பினான்.

இதனைக் கேள்விப்பட்ட மீனாட்சி சந்தாசாகிபுவிடம் ஒரு கோடி ரூபாய் தருவதாகக் கூறி, பங்காருவுடன் செய்து கொண்ட உடன்படிக்கையைக் கைவிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டாள். அதற்குக் குரான் மீது சத்தியம் செய்து தருமாறும் வற்புறுத்தினாள். சந்தாசாகிபு குரான் மேல் கைவைத்துச் சத்தியம் செய்து கொடுத்தான். இதற்கிடையில் பங்காருவுடனும் மீனாட்சி சமாதானம் செய்து கொண்டாள். பங்காரு திண்டுக்கல் பகுதியை ஆட்சி செய்யலானான். எனவே சந்தாசாகிபு இனி இவர்களை மோதவிட்டு இலாபம் பெற இயலாது என அறிந்து ஆர்க்காடு திரும்பினான்.

ஆனால் சந்தாசாகிபு கி.பி.1736இல் மீண்டும் மதுரையைக் கைப்பற்றும் திட்டத்தோடு திருச்சிக்கு வந்தான். மீனாட்சியோடு சாதுர்யமாகப் பேசி ஆட்சிப் பொறுப்பையும், படைப் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டான். திருச்சிக் கோட்டையை வலுப்படுத்தினான். பங்காரு வசம் இருந்த திண்டுக்கல்லை ஒரு பெரும்படை ஒன்றை அனுப்பிக் கைப்பற்றினான். பங்காரு தன் மகன் விசயகுமாரனுடன் சிவகங்கை ஓடி ஒளிந்து கொண்டான். பின்பு மதுரையை முழுக்கத் தன் வசமாக்கிக் கொண்ட சந்தாசாகிபு திருச்சி சென்று மீனாட்சி அரசியைச் சிறை செய்தான். மீனாட்சிக்கு அப்போதுதான் சந்தாசாகிபுவின் வஞ்சகம் தெரிந்தது. வஞ்சகனால் கொலையுண்டு சாவதைவிட, நஞ்சுண்டு இறப்பதே

மேல் என்றெண்ணி, நஞ்சு குடித்து உயிர் துறந்தாள். மீனாட்சி அரசியோடு மதுரை நாயக்கர் பரம்பரை மறைந்தது.

1738ல் சந்தாசாகிப் , தனது வாக்குறுதிகளால் மீனாக்ஷியைக் காப்பதாக நம்பவைத்து , மதுரை அரசின் ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டார் ம்னம் உடைந்த பங்காரு . இருமலை, சிவகங்கையில் தஞ்சம் புகுந்தார் . மதுரைநாயக்கர் ஆட்சியை முடிவிற்குக் கொண்டுவந்த பெருமை, சந்தாசாகிப்பைச் சாரும் - இவர் மீனாக்ஷியைச் சிறை . யிலடைத்துவிட்டு, ஆட்சியைத் தானே கைப்பற்றிக் கொண்டார். மனம் உடைந்த மீனாக்ஷி, சிறைச்சாலையில் நஞ்சுண்டு மாண்-டார் என்று பேராிரியர் ந . சத்தியநா தய்யர் கூறுகிறார் . ஆனால் "துசுகி வாலாஜா"? என்னும் முகமதிய நூல் , மீனாக்ஷி இந்துக்களின், வழக்கப்படி, தீக்குளித்து மாண்டார் என்று கூறுகிறதுஏனைய . சான்றுகள் எல்லாம் , மீனாக்ஷியின் இறுதியாண்டு 1736 என்று கூற , "*மதுரைத் தல வரலாறு "? மீனாக்ஷியின் இறுதி ஆட்சி 1739 வரை நீடித்தது எனத் தெளிவாகக் குறிப்பிட்டுள்ள து . தமிழக வரலாற்றில் ஆட்சிப்பொறுப்பில் அரசமகளிர்களின் பங்குபற்றி ஆராய்வது சாலப்பொருத்தமுடையது சங்ககாலத்தில் ., பெண்பாற் புலவர்கள் லர் இருந்தார்கள் இருண்ட காலமாகிய . களப்பிரர்களின் சா லத்தில் பெண்களின் நிலை வீழ்ச்சியுற்றது . -பின் னர், பல்லவார்சளின் காலத்தில், காரைக்கால் அம்மையார் போன்ற வர்சளை, சமயத்துறையில் காணுகிறோம் .

- தஞ்சையைத் தலை நகராகக் கொண்ட் பிற்காலச்

சோழர்களின் காலத்தில்கூட , அரச அலுவல்களில் தலையிடாது, தங்கள் செல்வங்களைக் கற்கோயில்கள் பல கட்டுவதில் செலவழித்து , தீவிரமான சமயப்பணியாற்றியதை அறிகிறோம் செம்பியன் சோழமாதேவியும் ., பாண்டியராணி 'மங்கை யர்க்கரசியும், எத்தளவிற்குச் சைவமதத்தில் பற்றுதல் கொண்டிருந் கார்கள் என்பதை நாடறியும் பின்னர் விசயநகரப் . பேரரசில் கூட் அரசமகளிர்கள் ஆட்சிப்பொறுப்பில் இருந்ததை அறியமுடியவில்லை. ஆனால், மதுரை நாயக்கர்களின் வரலாற்றில், இராணி மங்கம்மா , இராணி மீனாக்ஷி ஆகிய அரசமகளிர்கள், வழக்கத்திற்கு மாறாக , ஆட்சி பிட்த்தில் அமர்ந்து ஆட்சி செய்ததை அறிகிறோம்.

**சுய மதிப்பிட்டு கேள்வி**

- விஜயநகர ஆட்சியின் தாக்கம் பற்றி கூறுக
- குமார் கம்பனின் படையெடுப்பு பற்றி விவரிக்க
- மதுரை நாயக்கர்கள் சமுக பொருளாதார முறைகளை விவரிக

# அலகு - மூன்று

தஞ்சை நாயக்கர்கள் நாயக்கர் - செஞ்சி நாயக்கர்கள் - பொலிகாரி - ஆட்சியாளர்களிடையே உள்நாட்டுப் போர் - நிர்வாகம் - அமைப்பு சமூக மற்றும் பொருளாதார நிலைமைகள் கோவில் கலை மற்றும் கட்டிடக்கலை - மதம் -

**நோக்கங்கள்**

- தஞ்சை நாயக்கர்கள் தோற்றம்
- செஞ்சி நாயக்கர்கள் நிர்வாகம் சமூக மற்றும் - பொருளாதார
- தஞ்சை நாயக்கர்கள் கலை மற்றும் கட்டிடக்கலை

**தஞ்சை நாயக்கர்கள்**

தஞ்சை நாயக்கர்களின் கால வரிசை முறைப்பட்டியல்

- சேவப்ப நாயக்கர் )1532-1560)
- அச்சுதப்ப நாயக்கர் )1560-1600)
- இரகுநாத நாயக்கர் )1606-1622)
- விசயராக நாயக்கர் )1639-1672) | | = -
- மன்னார்தாஸ் செங்கமலதாஸ் )1675)

**ஆரம்ப காலத்திய தஞ்சை நாயக்கர்கள்**

**சேவப்பநாயக்கரும் அவரது மகன் அச்சுதப்பநாயக்கரும்**

தஞ்சை நாயக்கர் நாடானது, 18:8ல் சளுவதரசிங்க செல்.-லப்பன் தோற்கடிக்கப்பட்ட பிறகு , தோற்றுலிக்கப்பட்டதாகும். விசயநகரப் பேரரசர் அச்சுதராயரின் காலத்திலும், அதற்குப்பின்-னும், சேவப்பநாயக்கரும், அவரது மகன் அச்சுதப்பநாயக்கரும் , தஞ்சை நாயக்கார்களாக ஆட்சி செய்து வந்தார்கள் .' சேவப்ப

நாயக்கரின் குடும்பத்தினர் , விசயநகரப் பேரரூற்கு உண்மைபுட்ன் ஊழியம் செய்தார்கள் இவரது தந்ைத . திம்மப்ப நாயக்கர், கிருஷ்ணதேவராயரிடம் வாயில்காப்பவராகவும், அவரது ரெய்சூர்ப் படையெடுப்பில் துணை நின்றவராகவும்., பணியா ற்றி - யுள்ளார் . சேவப்பநாயக்கர், அஅச்சுதராயரின் அடைப்பமாகப் பணி - யாற்றும் மதிப்பைப் பெற்றவர் மேலும் சேவப்பநாயக்கரின் . மனைவி மூர்திமான்பா என்பவர் , அச்சுதராயரின் பட்டத்தரச வரதாம்பா- வின் சகோதரியாவாள் தஞ்சாவூரி சரிதம்", தஞ்சாவூரி ஆந்திர ராஜீய சரிதம் '* ஆகிய தெலுங்கு நூல்கள் , சேவப்பதாயக்கர், பேரரசிடமிருந்து, தஞ்சையைத் தனது மனைவியின் தனமாகப் பெற்றார் என்று கூறுகின்றன ஆனால் .

மற்றொரு நூலாகிய"*சாஇத்யரத்னகாரா?" சேவப்பநாயக்கர் தஞ்சையைப் படைவலிமை கொண்டு பெற்றார் என்று கூறுகின்றது. சேவப்பநாயக்கர், விசயநகரப் பேரரசர் அச்சுதராயரைக் கௌரவிப்பதற்காகத் தனது மகனுக்கு அச்சுதப்பா எனப் பெயரிட் . - டார் .1541 முதல் 580 வரை கிடைத்துள்ள பல பட்டயங்களில் , சேவப்பநாயக்கர், தஞ்சை நாயக்கராய் விளங்கியுள்ள செய்திகள் இடம் பெற்றுள்ளன .

என்றாலும்1560ல் சேவப்பநாயக்கர் , தனது மகன் அச்சுதப்ப நாயக்கருக்காகத் தஞ்சை நாயக்கர் பதவியை விட்டுக் கொடுத்தார் என்று சொல்லப்படுகிறது .1580 வரை சேவப்பநாயக்கர் உயிருடனிருந்ததால் , தந்தையம்மகனும், நாயக்க* ராகவும் இருந்து வந்தார்கள்.

1565ம் ஆண்டு தலைக்கோட்டைப்போரில் , தஞ்சை நாயக்கரார்- கள், விசயநகரப் பேரரசிற்கு ஆதரவாகக் கலந்து கொண்டார்கள் என்பதற்குரிய நேரடியான பொறிப்புச் சான்றுகளோ அல்லது இலக் கியச் சான்றுகளோ கிட்டவில்லைஎன்றாலும் ., ஆரம்பமுதல் விசய நகர அரடிற்கு விசுவாசமாக உழைத்த தஞ்சை நாயக்கர்கள் , அவ்- வரசிற்கு 1565ல் ஏற்பட்ட நெருச்சடியின்போது , ஏனைய நாயக்கர்- களைப் போலவே நிச்சயமாக உதவியிருக்க வேண்டுமென்று ; பேரா- சிரியார் விருத்தகிரீசன் அவர்கள் கருதுவது அநியாயமானதேயாகும்.

மேலும் 1565ல் தலைக்கோட்டைப் போரில் விசயநகரப் பேரரசு படுதோல்வியடைந்தாலும் , தஞ்சை நாயக்கர்கள் அதன் மீது வைத்திருந்த விசுவாசம் குறையவில்லை எனத் தெரிகிறது. 1567ம் ஆண்டைச் சேர்ந்த திருவண்ணாமலைப் பொரற்ீப்பிலிருந்து, அச்சுதப்ப நாயக்கர் , தலைக்கோட்டைப் போரில் தோல்வியுற்ற விசயநகர மன்னர் சதாசிவத்தைத் தனது மன்னராக ஏற்றுக் கொண்ட செய்தி தெரிய வருகிறது .” எனவே தஞ்சை நாயக்கர்கள் ஆரம்ப முதல் இறுதி வரை , விசயநகர அரசிடம் விசுவாசமாகவே இருந்து வந்தார்கள் எனக் கூறலாம். தி .பி.1600-ம் அண்டுவாக்கில் , அச்சுதப்ப நாயக்கருக்குப் பிறகு அவரது மகன் இரகுநாத நாயக்கர் , தஞ்சையின் பொறுப்பை ஏற்றா.

**இரகுநாத நாயக்கர் )1600-1633)**

தஞ்சை இரகுநாத நாயக்கரும் விசய நகரம் பேரரசும் ;- விசய நகரப் பேரரசர் ம் வெங்கடனின் காலத்தில்], 1590ல், கோல்கொண்டாவிலிருந்து வந்த மூசமதியப்படைகள் , பேனு5 கொண்டாவை மூற்றுகையிட்டன எனவே .1ம் வெங்கடன் தஞ்சை தாயக்கர்களிடம் உதவி கோர , அப்பொழுதுயுவநாயக்கராக இருந்த | இரகுநாத நாயக்கர், படை நடத்திச் சென்று, பேனு கொண்டா- விலிருந்து, கோல்கொண்டாப் படைகளைத் துரத்தி அடித்தார். இரகுநாத நாயக்கர் விசயநகரப் பேரரசை எவ்வாறு தக்கசமயத்தில் காத்தருளினார் என்பதை '*இரகுநாதப்யுதயம்"' விரிவாகக் கூறி- யுள்ளது.

இரண்டாவது முறையாக 1ம் வெங்கடனுக்கு உதவி செய்ய இரகுநாத நாயக்கருக்கு வாய்ப்புக் இட்டியது .

விசயநகரப் பேரரஇற்கு உட்பட்டுக் கப்பம் செலுத்திவந்த முராசுகள் என்னும் இன த் - தவர், 1ம்வெங்கடன் பேணுகொண்டாப் பகுதியில் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கும் பொழுது , தங்களை விடுவித்துக் கொண்டு, கப்பம் கட்டாமல் இருந்து வந்தார்கள் .இவர்களுக்குத் . தலைவராகத் இம்மணகவுடர் என்பவர் இருந்துவந்தார் . இரகுநாத நாயக்கர், 1591ல் திம்மணகவுடரை வெற்றிகண்டு , விசயநகரப் பேரரசிற்கு அடங்கிக் கப்பம் கட்டி வரச் செய்தார் . இதனால் பனwipes 1ம் வெங்கடன், இரகுநா தநாயக்கருக்குப் பல வெகுமதி- களையும், பாராட்டுக்களையும் நல்கினார்..

1ம் வெங்கடனுக்கும் , இரகுநாதநாயக்கருக்கும் உள்ள இந்த நல்லுறவு 1614ல் 1ம் வெங்கடன் இறக்கும் வரை

நீடித்ததா? என்- பதில் கருத்து வேறுபாடு உள்ளது பொறிப்புச் சான்றுகளிலிருந்து, இந்த நல்லுறவு நீடித்திருந்ததாகத் தெரிகிறதுஆனால் ., மறைத்திரு ஹீராஸ் அவர்கள் இந்த நல்லுறவு பற்றிச் சந்தேகம் கொள்கிறார் . 7610ம் ஆண்டு , 1ம் வெங்கடன் சாந்தோம் நகரை முற்றுகையிட்டு , போர்ச்சுகசியர்களுடன் சண்டையிடும்பொழுது , இரகுநாததாயக்- கார், பேரரசருச்கு எதிராசப் போர்ச்சுசியர்களுக்குத் துணைபுரிந் - தார் என்று இவர் கூறுகிறார்.

**66ம் ஆண்டு தோப்பூர் போரும் தஞ்சை இரகுநாத நாயக்கரும்**

7616ம் ஆண்டு நடைபெற்ற தோப்பூர் போரில் , தஞ்சை இரகுநாத நாயக்கர் , பேரரசர் இராமதேவரையும் , அவருக்குத் . துணைபுரியும் எச்சமநாயக்கரையும் ஆகரிச் தார் .39 இரகுநாத நாயக்கரும் விசயநகரப்பேரரசர் ||ம் வெங்கடனும் : இராமதேவராயர் 1630ம்ஆண்டு மே 24ந்தேதி இறந்த பிறகு, 11ம் வெங்கடன் விசயநகரப் பேரரசரானார் , இவரது ஆட்சிக்காலத் இல், விசய நகர அரற்கும் , தமிழக நாயக்கர்களுக்கும் நல்ல அமைதி- யான உறவு முறையே இருந்து வந்தது பேராசிரியர் .

ஈரிசன் அவர்கள்-விருத்த .ப, 11ம் வெங்கடனுக்கும் திம்மராசனுக்கும் வாரிசு உரிமைப் போட்டி ஏற்பட்டிருக்கும் பொழுது, தஞ்சை நாயக்கர் , வழக்கப்படி 11ம் வெங்சடனுக்கே ஆதரவு நல்கினார் என்று கூறுகிறார் *0 அனால் மறைத்திரு பெரோ மெச்சிகா மி), எ0 140102) அவர்- களின் 1684ம் ஆண்டு செப்டம்பர் 5ந் தேதிக் கடிதத்தை அடிப்படை . யாகக் கொண்டு ,

மறைத்திரு ஹீராய் அவர்கள் , 11ம் வெங்கடன் , குஞ்சை சென்று, அங்குள்ள நாயக்கரை நீக்கிவிட்டு , தன் மகனை ஆட்சியிலமர்த்தத் தட்டமிட்டிருந்தார் என்று கூறுகிறார் !*. தஞ்சை இரகுநாத நாயக்கர் 11ம் வெங்கடனுக்கு எதிராகத் திம்மராசனை ஆதரித்ததால் தான் ]11ம் வெங்கடன் இவ்வாறு திட்டமிட்டிருக்கலாம் என்று பேராசியர் &. இருஷ்ணசாமி கூறுகிறார்.

**தஞ்சைநாயக்கரும் மதுரைநாயக்கரும்**

மதுரை முத்துவீரப்ப நாயக்கர் ஆட்சிக்கு வந்ததிலிருந்து, குஞ்சைக் கும் மதுரைக்கும் இடையேயான நல்லுறவு சீர் கெடலாயிற்று . 1616ல் முத்துவீரப்ப நாயக்கர் தனது தலைநகரை மதுரையிலிருந்து இருச்சிக்கு மாற்றியது , தங்கள்மீது போர் தொடுக்கவேதான் எனத் தஞ்சை நாயக்கர் எண்ணினார் .1617ல் தஞ்சை இரகுநாத நாயக் - கார், மதுரை முத்துவீரப்ப நாயக்கரின் மகளைத் திருமணம் செய்து கொண்ட பிறகும் கூட எதிர்பார்த்த நல்லுறவு ஏற்படவில்லை,

**தஞ்சை நாயக்கரும் போர்சுககீசியரும்**

போர்ச்சுக்சியர்கள் யாழ்பாணத்து மன்னரை ஆட்சியி - லிருந்து துரத்திவிட்டு, அப்பகுதியில் செல்வாக்குப் பெந்ரூர்கள் . ஆட்சியைப் பறிகொடுத்த யாழ்பாணத்து மன்னர், குஞ்சை இரகு நாதநாயக்கரிடம் உதவி கோரினார் குஞ்சைப்படைகள் ., மன்னார் வளைகுடாவைச் கடந்து , போர்சுக்சியர்களைத் தோற்கடித்து யாழ் - பாணத்து மன்னரின் அரசை மீட்டுத் தந்தார்கள்என்றாலும் ., மீண்டும் போர்சு8சியர்கள் யாழ்பாணத்து

அரசைக் கைப்பற்றிக் கொண்டார்கள் .இரண்டாவது முறையாகத் தஞ்சைப் படைகள் யாழ்பாணத்திற்கு விரைந்த . ஆனால் இம்முறை, தஞ்சைப்படை- கள் போர்சுக்சசியர்களிடம் தோல்வியுற்றுத் இரும்பின.

**தஞ்சை நாயக்கரும் ஐரோப்பிய வாணியர்களும்**

இரகுநாதநாயக்கரின் காலத்தில் , ஐரோப்பிய நாட்டு வாணி- பார்கள், சோழ மண்டலக் கடற்கரைப் பகுதியில் செல்வாக்குப் ரொற்று, வாணிபப் போட்டிகளில் ஈடுபட்டிருந்தார்கள்ஐரோப்பிய . தாட்டு வாணிபர்களுக்குள் ஏற்பட்ட போட்டி இரகுநாத நாயக் - கருக்கு நன்மையையே தந்தது ஏனைய பன்னர்களைப் போலவே ., இரகுநா தநாயக்கரும் தமிழகத்தில் ஐரோப்பியர்களின் -செல்வாக் இனைத் தடுக்காது இருந்து விட்டார் தமிழச மன்னர்களின் . -இச் செயலுக்கு நான்கு காரணங்களைக் கூறலாம் .1) வளர்ந்து வரும் ஐரோப்பியார்களின் மேலாண்மையை , துமிழகத்து மன்னர்கள் 'உணராதிருந்தார்கள் .2) இம்மன்னர்கள், வலிமையற்றிருந்ததால், ஐரோப்பியர்களின் செல்வாக்கைக் தடுத்து நிறுத்தும் வலிமை இல் - லாதவர்களாக இருந்தார்கள் . 8) இம்மன்னர்கள், தங்களின் நேரத் - தையும், ஆற்றலையும், தங்களுக்குள் சண்டையிட்டுக் கொள்வதி- லேயே கழித்தார்கள் . 4) ஐரோப்பிய வாணிபர்கள் , தமிழக மன் - ன்ர்களின் குறைபாடுகளை /சரியாக எடைபோட்டு, அதற்குந் தகுந்- தவாறு, தங்களது நடவடிக்கைகக £த் திறமையாக அமைத்துக் கொண்டு, தமிழகத்தில் சிறிது சிறிதாகக் காலூன் றினார்கள் .

தஞ்சைநாயக்கரில் தலைசிறந்கலராகக் கருதப்படும் இரகுநாத நாயக்கர் 1693ம் ஆண்டு மரணமடைந்தார்.

**விசயராகவ நாயக்கர் )1633. [673]**

தஞ்சை இரகுநாத நாயக்கருக்குப் பின் , அவரது மகன் விசய ராகவ் நாயக்கர், 7639ம் ஆண்டு தஞ்சை மன்னரானார் . மறைத்திரு பிரோயென்சா அவர்களின் கூற்றிலிருந்து , இவர், ஆட்சியைத் தகாத முறையில் கைப்பற்றியிருக்கிறார் என அறிகிறோம்இவர் ., இவரது இரு மூத்த சகோதரர்களின் கண்களைக் குருடாக்கி விட்டதாகச் சொல்லப்படுகிறது ஆனால் நாயக்கர்களிடையே, ஒருவர் ஆட்சியை மற்றொருவர் கைப்பற்றுவது என்பது நடக்கக் கூடியதல்ல என்பது இலக்கியச் சான்றுகளிலிருந்து தெரிய வருகிறது என்று பேராசிரியர் விரித£ரீசன் அவர்கள் கருத்துத் தெரிவித்துள்ளார்கள் . இதற்குக் காரணம், நமது நாட்டு அறிஞர்கள் உண்மை . - வரலாற்றை அடிப் படையாகக் கொண்டு இலக்சயம் படைக்காமல், மன்னர்களின் துதி பாடியே இலக்கியம் படைத்ததேயாகும் ஆட்சியைக் கைப்பற்றுவது . என்பது, பல்வேறு பகுதஇாளிலுள்ள மன்னர்களிடையே இருந்துவந்த பழக்கமேயாகும்- எனவே அரசர்களின் அவைக்களத்துப் புலவர் . _களின் படைப்புகளை அப்படியே உண்மை என்று ஏற்றுக் கொள்ளத் தேவையில்லை.

தஞ்சை நாயக்கர்களுக்கும் , மதுரை நாயக்கரார்களுக்கும் , ஆண் டாண்டு காலமாக இருந்துவரும் பகையைத் தொடரவும் , தஞ்சை நாயக்கர்களுக்கும், விசயநாரஅரசிற்கும் இருந்துவரும்

நல்லுறவைத் 'தொடரவும், விசயராகவநாயக்கர் விரு .பினார் .

விசயநகர அரசின் இறுதிமன்னர் 11ம் சீரங்கன் , தமிழகத்து நாயக்கர்களைத் தன் கீழ் பணியவைப்பதற்காகத் தமிழகத்தின் மீது படையெடுத்து வரும் பொழுது , செஞ்ச, தஞ்சை, மதுரை நாயக்கர்கள் அனைவரும் இணைந்து கூட்டணி அமைத்தார்கள் .

ஆனால் திடீரென்று., தஞ்சை நாயக்கர், இந்த முக்கூட்டணியிலிருந்து விலகியது மட்டுமில்லாது , மதுரை நாயக்கரின் சதித்திட்டத்தையும், விசயநகர அரசருக்குக் காட்டிக் கொடுத்தார்மே .லும் இப்படையெடுப்பில் தஞ்சை நாயக் கர், 11ம் ரங்கனை ஆதரித்ததால், மதுரை திருமலைநாயக்கர், கோல் கொண்டாப் படையினரின் உதவியை நாடவேண்டியிருந்தது . இத் திருப்பம் விசயநகர அரசின் அழிவிற்கும் , தஞ்சை அரசின் அழிவிற்- கும் வழிவகுத்தது மூகமதியப் படைகளின .ஃ ஓயாத படையெடுப்பு, தஞ்சைக்கு மீளமுடியாத் துயரை நல்கியது .1662 முதல் 1664 வரை இரண்டு ஆண்டுகளுக்கு தஞ்சை முகமதியர்களின் &ழ் இருந்து வர நேரிட்டது.

என்றாலும் 1664ல் தனது அரசை மீண்டும் திரும்பப் பெற்ற விசயராகவநாயக்கர், மதுரை சொக்கநாதநாயக்கருடன் தீராத பகையே கொண்டிருந்தார் இதனால் .1673ல் மதுரைக்கும் தஞ்சைக்- கும் மீண்டும் போர் ஏற்பட்டது தஞ்சாவூரி ** . ஆந்ரராசுலு சரிதம்"? குஞ்சை விசயராக நாயக்கர் , தன் மகளை மதுரை சொக்கநா தநாயக் - கருக்குத் திருமணம் செய்துகொடுக்க மறுத்ததே , இப்போருக்குக் காரணம் என்று கூறுகிறது மதுரை நாயக்கரின் தளவாய் வெங்கட - -

திருஷ்ணப்பன், இப்போரில் தஞ்சைப் படைகளைத் தோற்கடித்து, 'கஞ்சை அரசை மதுரை அரசோடு இணைத்தார் . இவ்வெற்றிக்குப் பிறகு, மதுரை சொக்கப்பநாயக்கர் , அழகிரி நாயக்கர் என்பவரைத் குஞ்சைக்குக் தனது ஆளுநராக நியமித்தார் அழகிரி நாயக்கர் . 2674ம் ஆண்டில் , ஒராண்டே தஞ்சையை ஆள முடிந்தது.

குஞ்சையில் மதுரைநாயக்கரை மதிக்காமல் அழகிரிதாயக்கர் ஆட்சி செய்து வரும் பொழுது , தஞ்சை அரசியல் உலகில் திரை மறைவுத் திட்டங்களில் புகழ்பெற்ற வெங்கண்ணன் என்னும் பிரா - மணர், உயிர்தப்பி, நாகபட்டினத்தில் வளர்ந்து வரம் தஞ்சை அரசின் வாரிசு , செங்கமலதாசு என்பவரைப் பீஜப்பூர் சுல்தானின் உதவியுடன் , அழகி-நாயக்கரை விரட்டிவிட்டு தஞ்சை மன்னர் ஆக்கி !னார் . என்றாலும், செங்கமலதாசிடம், தான் எதிர்பார்த்த பதவி .- யும் பாராட்டும் கட்டாததால் , வெங்கண்ணன், பீஜப்பூர் படைத் - குளபதி வெங்கோஜிக்கு அழைப்பு விடுத்து , செங்கமலதாசிடமிருந்து தஞ்சை அரசைக் கைப்பற்றிக் கொள்ள, வெங்கோஜிக்கு உதவினார் . குஞ்சை அரசைக் கைப்பற்றிக் கொண்ட வெங்கோஜி , வஞ்சகத் திட்டத்தில் திறமை பெற்ற வெங்கண்ணனைப் பதவிநீக்கம் செய்து நாட்டை .இவ்வாறு . விட்டே ஓடச் செய்தார்.1538ல் சேவப்பநாயக்கரின் காலத்தில் உருவான தஞ்சை நாயக்கர் ஆட்சி 1675ம் ஆண்டு, செங்கமலதாசோடு அழிவுற்றது.

**செஞ்சி நாயக்கர்கள்**

- வையப்ப நாயக்கர் /)526--41)
- பெத்த கிருஷ்ணப்ப நாயக்கர் )1541-44)
- சூரப்ப நாயக்கர் )1544—67)
- நீம் கிருஷ்ணப்ப — (156 7-78) .
- வையப்ப கிருஷ்ணப்ப கொண்டம நாயக்கர் )1580-1594)
- இரண்டாம் கிருஷ்ணப்ப நாயக்கர்

**செஞ்சி நாயக்கர்கள்**

பேராசிரியர் 0.5. சனிவாச்சாரி அவர்கள் , தனது நாலில் செஞ்சிக் கோட்டை , பல நாயக்கர்களால் ஆளப்பட்ட பெருமை - யைப் பெற்றது என்றும் , அதன் ஆட்டப் பரப்பு துபாகு கிருஷ்ணப்ப நாயக்கரே, செஞ்சியின் முதல் நாயக்கர் என்பதைப் பேராசிரியர் 0.8. சீனிவாசசாரியாரும், மறைத்திரு -ஹீராசம் ஒத்துக் கொண்டுள்ளனர் பொறிப்புச் சான்றுகள் ., வையப்ப நாயக்கரே கிருஷ்ணதேவராயரின் காலத்தில் செஞ்ிசப் : பொறுப்பை ஏற்றவரென்றும் , அவரது மகன் பெத்த கிருஷ்ணப்பன் தான் துபாகு கிருஷ்ணப்ப நாயக்கர் என அறியப்படுகிருர் என்றும் கூறுகின்றன. வடக்கே பாலாறு வரையும், தெற்கே கொள்ளிடம் வரையும் , கிழக்கேயும் மேற்கேயும் கட்ற்சரைகள் வரையும் பரவி இருந்தது என்று கூறுகிறார்.

துபாகு கிருஷ்ணப்ப நாயக்கரே , செஞ்சியின் முதல் நாயக்கர் என்பதைப் பேராசிரியர் 0.8. சீனிவாசசாரியாரும், மறைத்திரு -ஹீராசம் ஒத்துக் கொண்டுள்ளனர் பொறிப்புச் . சான்றுகள், வையப்ப நாயக்கரே கிருஷ்ணதேவராயரின் :

காலத்தில் செஞ்சிப் பொறுப்பை ஏற்றவரென்றும் , அவரது மகன் பெத்த கிருஷ்ணப்பன் தான் துபாகு கிருஷ்ணப்ப நாயக்கர் என அறியப்படுகிருர் என்றும் கூறுகின்றன.

திருப்பரங்குன்றத்திலுள்ள இரண்டு வரலாற்றுச் சான்றுகள், செஞ்சி நாயக்கர்களின் வரிசை முறையைத் தந்துள்ளன .செஞ்சிப் பகுதியில் கிடைத்துள்ள 8 பொறிப்புச் சான்றுகள், 1586 முதல் 1541 வரை வையப்ப நாயக்கர் , செஞ்சி நாயக்கராய் விளங்கினார் என்று கூறுகின்றன இவருக்குப் . - பிறகு பெத்த கிருஷ்ணப்ப நாயக் கரும், அவருக்குப் பிறகு சூரப்ப நாயக்கரும் , செஞ்சி நாயக்கர் - . களாகப் பதவி வகித்தார்கள். சூரப்ப நாயக்சருக்குப் பிறகு செஞ்சி . . தாயக்கரானவர் 1|ம் கிருஷ்ணப்ப நாயக்கர்.

**குரப்ப நாயக்கருக்கும் |ம் கிருஷ்ணப்ப நாயக்கருக்கும் இடையே உறவு**

1541 முதல் 1544 வரை செஞ்சியை ஆண்ட பெத்த இருஷணப்ப நாயக்கருக்கு , லக்கம்பா, வெங்கலம்பா என்று இரண்டு மனை வியார்கள் இருந்தார்கள் மூத்த குடியாள் . மகன். லக்கம்பாவின் கிருஷ்ணப்ப நாயக்கன் என்பவன் சிறுவனாய் இருந்ததினால் , இரண்- டாவது குடியாளின் முதல் மகன் சூரப் நாயக்கர் தந்தைக்குப் பிறகு செஞ்சி நாயக்கரானார் . இவர்1544 முதல் 567 வரை செஞ்சி நாயக்கராய் ஆட்சி செய்தார் இவரது அவைக்களத்திலிருந்த . இசத்தினகேது சீனிவாசதீச்சிதர் என்னும் புலவர் பவன புருடோத்** குமம்"" என்னும் நாடகத்தை இயற்றி , டச் செஞ்சி நாயக்கருக்குச்

சமர்ப்பித்தார் இவர் தலைக்கோட்டைப் போரில் . இராமராயருக்கு உதவியதால் அதற்குரிய விருதுப்பெயரையும் பெற்றார்மேலும் . தலைக்கோட்டைப் போருக்குப் பிறகு , சூரப்பநாயக்கர், விசய நகர மன்னர்களாகய, திருமலையிடமும், 1ம் சீரங்கனிட்டமும் உண்மை - யுட்ன் இருந்து வற்தார் என்று பேராசிரியர் 0.8. €னிவாசசாரி கூறுகிறார்.

**முதலாம் கிருஷ்ணப்ப நாயக்கர் )1567-1578)**

சூரப்ப நாயக்கருக்குப் பின் லக்காம்பாவின் மகன் ம்[ கிருஷ்ணப்ப நாயக்கர் செஞ்சி நாயக்கரானார் .1546ம் ஆண்டிற்கும் 1575ம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலத்திய . கல்வெட்டுக்களில்Ib இருஷ்ணப்ப நாயக்கர் குறிப்பிடப்படுகிறார்இவர் விசய நகரப் . பேரரசர் 1ம் சரங்கனின் மேலாண்மையை ஏற்றுக் கொண்ட்வர் என் பதைப் பொறிப்புச் சான்றுகள் விளக்கியுள்ளன.

**கொண்டம நாயக்கர் )1580-1593)**

பேராசிரியர் 0.5. €னிவாசசாரியார் அவர்கள், தனது நூலில் கொண்டம நாயக்கரைப் பற்றி எழுதாமலேயே விட்டு விட்டார், இந்த நாயக்கர் /580-1594ம் ஆண்டிற்கு இடைப்பட்ட பொறிப்புச் சான்றுகளில் வையப்ப கிருஷ்ணப்ப கொண்ட்ம நாயக்கர் என்றும், 1ம இருஷ்ணப்ப நாயக்கரின் மகன் என்றும் குறிப்பிட்டுள்ளார். இவர் விசயநகர மன்னர்களாகிய 1ம் சீரங்கன், 1ம் வெங்கடன் ஆகி - யோர்களின் மேலாண்மையை ஏற்றுக்கொண்டவர், என்பதையும் பொறிப்புச் சான்றுகளிலிருந்து அறிகி3ராம்- இவர் சிதம்பரம் கோ . விலுக்கு ஏழு

கிராமங்களையும், மிளகு வாணிபத்தில் வரும் ஆதா -
யத்தையும் மானியமாக நல்ஏனார் எனக் கல்வெட்டுகள் கூறு -
இன்றன.,45 இதேபோன்று விருத்தாச்சலத்திலுள்ள
கோவிலுக்கும் இவர் மானியங்களை நல்கினார்.

கொண்டம நாயக்கர் எவ்வளவு காலத்திற்குச் செஞ்சியை ஆண்டார் எனச் சரியாகத் தெரியவில்லை ஆனால் . இடருச்குப் பிறகு ஆட்சிக்கு வந்த செஞ்சி மூத்து கிருஷ்ணப்ப நாயக்கர் )11ம் கிருஷ்- ணப்ப நாயக்கர் .பி.இ (1597ம் ஆண்டைச் சேர்ந்த கல்வெட்டுக்- களில் குறிப்பிடப்படுகிறார்.

**இரண்டாம் கிருஷ்ணப்பநாய .க்கர்**

இரண்டாம் கிருஷ்ணப்ப நாயக்கர் -, கொண்ட்ம நாயக்கரின் மசன் இவர் . கல்வெட்டுக்களில் வெங்கடப்ப நாயக்கர் என்றும் , பாதிரியார்களின் கடிதங்களிலும், தெலுங்கு இலக்கியங்களிலும் கிருஷ்ணப்பநாயக்கர் அல்லது முத்துக் கிருஷ்ணப்ப நாயக்கர் என்றும் குறிப்பிடப்பட்டுள் - ளார் . - இவரைப் பற்றிய பொறிப்புச் சான்றுகள் அதிச மில்லையா யினும், வெளி நாட்டவரின் குறிப்புகள் அதிகமாகக் இடை. த்துள்ளன.

**மறைத்திரு நிகலாஸ் பிமெண்டா**

][ம் திருஷ்ண்ப்ப நாயக்கரைப் பற்றிய வெளிநாட்டவர் குறிப் புகளில், அவரை நேரில் பார்த்த மறைத்திரு நிகலாஸ் பிமெண்ட ஈர வின் குறிப்புகள் முக்கியமா னவைகளாகக் சுருகுப்படுகின் றன -டப் . பாதிரியார் 1598ம் ஆண்டு கொச்சியிலிருந்து, கன்னியாகுமரி, தூத்- -துக்குடி, தலைமன்னார்,

நாகப்பட்டினம், தரங்கம்பாடி, சிதம்பரம் வழியாகச் செஞ்சிச்கு வந்தார் இவர் சிதம்பரத்தை .““மூடநம்பிக்- கைகளின் தாயகம்”? என்று குறிப்பிட்டுள்ளார் இப்பாதிரியார் . சிதம்பரத்திலிருக்கும் போது, தனது எல்கைக்கு உட்பட்டிருந்த சிதம்பரம் கோவிந்தராசர் கோவில் திருப்பணியை மேற்பார்வையிட வந்திருந்த 11ம் கிருஷ்ணப்ப நாயக்கரைக் காணும் வாய்ப்பு கிட்டி- யது அதுசமயம் இம்மன்னர் நீண்ட தங்கச் சங்கிலியை . அணிந்து கொண்டு, பட்டு மெத்தையில், இரண்டு திண்டு ளின்- மீது சாய்ந்து கொண்டிருந்ததை இப்பாதிரியார் குறிப்பிட்டுள்ளார் .Iho Away ணப்ப நாயக்கர் இப்பாதிரியாருக்குப் பல வெகுமதிகள் நல்கி, தான் கட்டி வரும் புதிய நகருக்கு ஒரு கிறிக்துவப் பாதிரியாரை அனுப்பி வைக்கும்படிக் கேட்டுக் கொண்டாராம்.

சிதம்பரத்திலிருந்து செஞ்சிக்குச் சென்ற பிறகு , அங்கும் இரண்டாவது முறையாக 11ம் இருஷ்ணப்ப நாயக்கரைச் சந்திக்கும் வாய்ப்பு, மறைத்திரு நிகலாஸ் பிமெண்டாவிற்குக் கிட்டியது. செஞ்சிக்கோட்டைவனப்பிலும் ., வலிமையிலும், போர்ச்சுக்கல்லில் உள்ள, (லிஸ்பன் நகர் தவிர ம (ற்ற நகரங்களை விட்ச் சிறந்து விளங் - குகின்றது என்று இவர் குறிப்பிட்டுள்ளார்- இப்பாதிரியாரின் கூற் . திலிருந்து, வெள்ளாற்றங் கரையில் , இம்மன்னர் தனது பெயரில் , **இருஷ்ணப்ப பட்டினம்” என்னும் நகரை அமைத்தார் என்றும் , வேலூர் நாயக்கர்களும் , தீவுக்சோட்டை நாயக்கர்களும் இவருக்கு அடிபணிந்திருந்தார்கள் என்றும் அறிகிறோம்.

**இரண்டாம்கிருஷ்ணப்ப நாயக்கரும் ,விசயநகரம் பேரரசும்**

[[ம் கிருஷ்ணப்ப 'நாயக்கார், 1599-ம் ஆண்டில், விசயநகரப் பேரரசர் 1ம் வெங்கடனிடம் விசுவாசமாக இருந்து வந்தார் என்று மறைத்திரு பிமெண்டோ கூறியுள்ளார் . பேராசிரியர் 0. 8. சனிவாசசாரியும், மறைத்திரு ஹீராஸ் அவர்களும், 11ம் கிருஷ்ணப்ப நாயக்கர் , ஆட்சிக்கு வந்தவுடனேயே 1586-87ம் ஆண்டு வாக்கில் விசய நகர அரசிற்கு எதிராகக் கிளர்ச்சி செய்ததால், கைது செய்யப்பட்டுப் பின்னர் விடுவிக்கப்பட்டார் என்று கூறியுள்ளார்கள் இரகுநாதபியுதயம் ** .””' என்னும் நூல் குஞ்சை மன்னர் இரகுநாத நாயக்கரின் செல்வாக்கினால் செஞ்சி மன்னர் இருஷ்ணப்ப நாயக்கர் , சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டார் என்று கூறுகிறது . ஆனால் பேராசிரியர் &. இருஷ்ணசாமி அவர்கள் , 1600ம் ஆண்டிற்கு முன்பாக 11ம் கிருஷ்ணப்ப நாயக்கர் , விசயநகர அரசிற்கு எதிராகக் கலகத்தில் ஈடுபட்டிருக்க முடியாது என்று வாதிடு - கருர் . இவரின் கருத்துப்படி, செஞ்சி கிருஷ்ணப்ப நாயக்கரும் , வேலுர் லிங்கம நாயக்கரும் சேர்ந்து , படைகளைத் திரட்டினார்கள் என்றம், 'இப்படைகளுக்குத் தாளுவ பாப்பா நாயுடு என்பவர் தலைமை தாங்கிச் சென்று , விசய நகரப் பேரரசர் 1ம் வெங்கடனையும் அவரது ஆதரவாளர் எச்சம நாயக்கரையும் எதிர்த்து, 1601ம் ஆண்டு மே 81ந் தேதி உத்திரமேரூர் கோட்டையை முற்றுகையிட் - டார் என்றும் , அனால் தோல்வியுற்று, இந்தத் தாளுவபாப்பா : நாயுடு கொல்லப்பட்டார் என்றும் அறிகிறோம்.பி. அதன்பின் கி * *. 7604-ல் Sas நாயக்கரின்

வேலூர் கோட்டை முற்றுகையிட .ப்பட்டுக் கைப்பற்றப்பட் டது. - லிங்கம நாயக்கர் கைது செய்யப்பட் டார் வேலூர் அதுமுதல் . விசயநகர அரசினரின் முக்கிய உறைவிடர மானதால் , **ராய வேலூர்'' என .அழைக்கப்பட்டது.

**செஞ்சிக் கோட்டையின் வீழ்ச்சி 1608**

உத்திரமேரூர் வெற்றிக்குப் பிறகு , எச்சமநாயக்கரின் தலைமை யில் 1ம் வெங்கடன் , திறை செலுத்த மறுக்கும் செஞ்சி நாயக்கார் மீது படையெடுக்கச் செய்தார் அதுசமயம் ., தனது பிரபுக்களின் சதியினால் நஞ்சு ஊட்டப்பட்ட 11ம் கிருஷ்ணப்ப நாயக்கர் , மன நோயுற்றிருந்தார்இதனால் ., இரக்கம் கொண்ட விசயநகர அரசர் Ib வெங்கடன், தனது படையெடுப்பைத் தவிரப் படுத்தாமல் இருந்தார் ஆனால் மன . நோயுற்றிருந்த செஞ்சி நாயக்கர், குணமான பிறகும் கூட திறை செலுத்தாமல் இருப்பதை அறிந்து , 1ம் வெங்கடன், எச்சமநாயக்கரின் தலை . யில் படைகளை அனுப்பினார் . செஞ்ச? நாயக்கர், தனது கோட்டைக்குள்ளேயே இருந்து சண்ஃ டயிட்டிருந்தால், ஒரு வேளை எச்சம நாயக்கர் இவரை வெற்றி கொள்ள முடியாமல் போயிருக்கலாம் ஆனால் செஞ்சி . நாயக்கர், மிக்க தன்னம் பிச்கையுடன் கோட்டையை விட்டு வெளி வந்து போ - ரிட்ட்தினால், எச்சம நாயக்கர் எளிதில் இவரை வெற்றி கொண்டு , 7608ம் ஆண்டு சனவரி மாதம் செஞ்சிக் கோட்டையைக் கைப்பந் - Der. வெற்றிச் செய்தி கேட்டு, விசய நார அரசர் 1ம் வெங்கடன் வேலூரிலிருந்து செஞ்சிக்கு வந்தார் தோல்வியுற்ற செஞ்சி .11ம் கிருஷ்ணப்ப நாயக்கர் , 1ம்

வெங்கடனின் காலில் விமுந்து தன்னைக் கொல்லாதிருக்குமாறு வேண்ட , 1ம் வெங்கடன் தனது மனைவியின் ஓபாரிசை ஏற்றுக் இிருஷ்ணப்ப நாயக்சரை விடுவித்தார்தஞ்சை . இரகுநாதநாயக்கர் செஞ்சி கிருஷ்ணநாயக்கரைச் சிறையிலிருந்து விடுவிக்கச் செய்தது இச்சமயத்தில் தான் என்று A. இருஷ்ணசாமி கருதுகிறார் .

தஞ்சை நாயக்கரின் உதவிக்கு நன்றியாகச் செஞ்சி இருஷ்ணப்ப நாயக்கர் , தனது மகளைத் தஞ்சை இரகுநாதநாயக்- கருக்கு மணம் செய்து கொடுத்தார் என்று செபல்லப்படுகிறது. ஆனால் பேரா◌ூ◌ிரியர் விருதகிரீசன் அவர்கள் இச்செய்தி உண்மை-யல்ல என்று மறுத்துள்ளார்.

**இரண்டாம் - தோம்பூர் போரும் - கிருஷ்ணப்ப நாயக்கரும் 1616:**

1ம் வெங்கடன் 1614ல் இறந்த பிறகு , வேலூர் அரசியலில் குழப்பம் ஏற்பட்டது இந்த வாய்ப்பைச் செஞ்சி .11ம் கிருஷ்ணப்ப | நாயக்கர் பயன்படுத்திக் கொண்டு , தன்னை விசயநகரத்திலிருந்து விடுவித்துக் கொண்டு , உள்நாட்டுப் போரில், எச்சமநாயக்கருக்கு எதிராகச், ஜக்கராயரை ஆகரித்தார் . 1408ல் தன்னை எச்சமநாயக் - கர் தோற்கடித்து , இழிவுபடுத்தியதைச் செஞ்சி நாயக்கர் மறக்கவே யில்லை . மேலும் . எனவே இவர் ஜக்கராயருக்கு ஆதரவு தரலானார் குனது அதிகாரத்திற்குட்பட்ட் தீவுக்கோட்டை நாயக்கரையும் , எச்சம நாயக்கருக்கு எதிராக இவர் தாண்டினார் என்றாலும் . -தோப் பூர் போர்க்களத்தில் செஞ்சி நாயக்கர்

தோற்கடிக்கப்பட்டார். இருஷ்ணப்ப நாயக்கருக்குப் பின்வந்த , வரதப்ப நாயக்கர் , அய்யப்ப நாயக்கர் போன்றோர் , திறமையற்றவர்களாக விளங்கினார்கள் .

**இரண்டாம் கிருஷ்ணப்ப நாயக்கரும் ஐரோப்பிய வாணிபர்களும்**

செஞ்சி கிருஷ்ணப்ப நாயக்கரின் காலத்தில் , போர்ச்சுக்9-யர்களுக்கும், டச்சுக்காரர்களுக்கும் கடுமையான வாணிபப்போட்டி இருந்தது செஞ்சி நாயக்கர் . டச்சுக்காரர்களுக்கு ஆதரவு நல்க, அவர்களுக்குக் கடலூரில் கோட்டையைக் (செயிண்ட் டேவிட்) கட்டிக் கொள்ள அனுமதி நல்கினார்- ஆனால் போர்ச்சுக்கசியர் . களுக்கு அது சமயத்தில் விஜய நகரமன்னன் 1ம் வெங்கடனின் செல் - வாக்கு இருந்ததினால், டச்சுக்காரார்கள் ஆரம்பத்தில் தொல்லைக்குள் - ளானார்கள் ஆனால் பின்னர் டச்சுக்காரர்கள் ., விஜயநகர அரசிடம் நட்பு கொண்டு செல்வாக்குப் பெறலாஞார்கள்.

**இரண்டாம் கிருஷ்ணப்ப நாயக்கரின் பிற பணிகள்**

இவர் பல நகரங்களைக் குடிமக்களின் தேவைக்கு ஏற்ப மாற்றி அமைத்து நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்கினார் . கிருஷ்ணபட்டினம் என்னும் நகரம் இவரால் புதிதாக வெள்ளாற்றங்கரையில் அமைக் - சப்பட்। து இவர் எல்லா . மதங்களுக்கும் சம உரிமை நல்கினார். சமணர்காளுக்குச் சித்தனூரில் கோவில் கட்டிக் கொள்ளவும் , சைவர்- களுக்குத் திண்டிவனத்தில் கோவில் கட்டிக்கொள்ளவும் இவர் அனு - மதித்தார் அதே நேரத்தில் ., இவர் வைணவ மதத்தைத்

தீவிரமாக ஆகரித்தார் திருமி கண்ட சோழன்*: .” எனப்பட்ட 11ம் குலோத்- துங்க சோழன் )1/36-1150) சிதம்பரம் நடராஜர் கோவிலுள்ள கோவிந்தராஜப் பெருமாள் சிலையைக் கடலில் எறிந்ததை, இந்த செஞ்சி நாயக்கர் மீட்டு , கடுமையான எதிர்ப்புக்களிடையே, எதிர்த்தவார்சகளை வெட்டிக் கொன்று விட்டு மீண்டும் இதம்பரம் நட்ராஜர் கோவிவில் நிறுவச் செய்தார் சைவ வைணவ மதச் . சண்டையில் இரத்தம் சிந்தப்பட்டதை இந்த நாயக்கரின் காலத்தில் காணுகிறோம் . திருபலை தாதாச் சாரியார் என்னும் அறிஞர், இந்த நாயக்கரால், போற்றிப் பாராட்டப்பட்டவராவார்.

**செஞ்சி அரசின் வீழ்ச்சி**

ஒடுக்க முயன்றார் இதற்காக இவர் .1845ம் ஆண்டு செஞ்சி மீது படையெடுத்தார் இந்நிலையில் ., மதுரை திருமலை நாயக்கர், தங்களுக்கு உதவுமாறு , கோல்கொண்டாப்படைகளுக்கும், பீஜப்பூர் படைகளுக்கும் வேண்டுகோள் விடுத்தார் அதன் பயனாய் .1646ல் மீர்ஜும்லா என்பவர் உதயகிரி , பூந்தமல்லி, காஞ்சிபுரம், செங்கல்- பட்டு ஆகியபகுதிகளை வென்று விரைவாக முன்னேறிவந்தார் . 1648ல் மீர்ஜீம்லாவின் தலைமையிலுள்ள கோல்கொண்டாப் படைகள் செஞ்சியைக் தாக்கின செஞ்சியைக் காக்க ., மதுரைப் படைகளும், பீஜப்பூர் படைகளும் விரைத்தன ஆனால் இரு . - மு.ஃமதிய அரசுகளா யெ கோல்கொண்டாவும் , பீஜப்பூரும் தங்களுக்குள் உடன்படிக்கை - களை செய்து கொள்ள , பீஜப்பூர் படைகள், செஞ்சியை முற்றுகை- யிட்டு, 1649ம் ஆண்டு அதைக்

கைப்பற்றிக் கொண்டன இத்தோடு . செஞ்சி நாயக்கர் அரசு முடிவுற்றது..

**பாளையங்களும் பாளையக்காரர்களும்**

1284 முதல் 1564 வரை மதுரையில் அதிகாரம் செலுத்தி வந்த விசுவநாதநாயக்கரே , தமிழகத்தில் ; பாளையம் முறையைப்" புகுத்தியவராவார் இவருக்கு இச் செயலில் .

உறுதுணையாய் இருந்தவர் இவரது திறமைமிகு தளவாய் இவர்கள் . அரியநாதர் ஆவார், மதுரைப் பகுதியை 78 பாளையங்களாகத் பிரித்து , அப்பாளையங்களை அப்பகுதியில் செல்வாக்குப் பெற்று விளங்கியவர்களிடம் ஒப்படைத்து , அவர்களின் ஆதரவையும் , ஒத்துழைப்பையும் பெற்றார் - கள் . . பாளையத்தின் தலைவர்பாளையக்காரர் என அழைக்கப்பட்டார் பாளையத்தின் அமைதிக்கும் ஓழுங்கிற்கும் பாளையக்காரரே பொறுப் பாவார் நாயக்கர்கள் உள்நாட்டிலுள்ள* மதுரை . தயிழகத்துத் தலைவர்களைப் பாளையக்காரார்களாக நியமனம். செய்ததால், அவர்- களின் வெறுப்பிற்கு ஆளாகாமல் , அவர்களின் ஆதரவையும் பெற முடிந்தது .

பாளையக்காரர்களுக்கு அதிகாரமும், பெ- றுப்பும் நல்கப். பட்டதால், அவர்கள் மனம் மகிழ்ந்து , மதுரை மன்னருக்கு ஒத்து- ழைப்பும், ஆதரவும் நல்க இடமேற்பட்டது.

பாளையக்காரர்கள் தங்கள் பாளையத்திலிருந்து வரும் வருமா- னத்தில் மூன்றில் ஒரு பங்கினை , தங்கள் பாளையத்தில் ஓழுங்கையும் அமைதியையும் ஏற்படுத்தும் ஆட்சிமுறைச் செலவிற்குப் பயன்படுத் இனார்கள் மற்றொரு .

பங்கனைக் கொண்டு, படைபலத்தை நிர்வூத் - துக் கொண்டார்கள் இப்படைகளைத் தங்கள் நாயக்க மன்னார் . கேட்கும் பொழுது கொடுத்துதவும் பொறுப்பிற்கும் பாளையக்காரர் கள் ஆளாகியிருந்தார்கள் எஞ்சிய மற்று . -பங்கினைப் பாளையக் காரார்கள் தங்கள் செலவிற்கு வைத்துக் கொண்டார்கள்.

அக்கால சூழ்நிலைக்கு ஏற்றதாகவும் , அக்காலத் தேவைக்கு ஏற்றதாகவும் "இப்பாளையம்முறை' இருந்து வந்தது . வட்டாரத் தலைவர்களாக விளங்கிய பாளையத்தலைவர்களின் செல்வாக்கினால், அப்பகுதிகளில் ஒழுங்கு நிலை நிலைநிறுத்தப்பட்டதால்,வேளாண்மைத் தொழில் மேம்பட்டு விளங்கியதுமேலும் இம்முறை வெளிநாட்டுப் . படையெடுப்பை முறியடிக்கும் சிறந்த சாதனமாகவும் விளங்கியது . படைகளை பராமரித்து வரும் செலவு பரவலாக் ப்பட்ட்தினால்-, மிகச் சிரமமில்லாமல் மிகக் குறுகிய காலத்தில் பெரும் படைகளை ஒன்று திரட்ட முடிந்தது.

1801ம் ஆண்டு , ஆங்கிலேயரின் அதிகாரம் செயல்படுத்தப்- படும்வரை, இந்தப் 'பாளையம் முறை ' நல்ல விளைவுகளே பெற்றுத் தந்தன என்று கால்டுவெல் அவர்கள் கருத்து தெரிவித்துள்ளார் . என்றாலும், இப்பாளையக் காரர்கள் தங்கள் மத்திய நாயக்க அரசு - டனோ அல்லது தங்களுக்குள்ளோ அடிக்கடி சண்டையிட்டுக் கொண்டே இருந்தார்கள் என்ற கருத்தையும் இவர் தெரிவிக்கத் குவறவில்லை..

உள்நாட்டு அமைதிக்கும் , வெளிநாட்டுப் படையெடுப்புகளி- லிருந்து பாதுகாத்துக் கொள்ளவும் இந்தப் . பாளையம் முறை பயனுடையதாகவே இருந்தது என்று ஸ்டூவர்டு அவர்கள் கூறியுள்ளார் கள்54 தெலுங்கு மன்னர்களும், தமிழ்த் தலைவர்களும் ஒன்று சேரு வதற்குரிய வாய்ப்பை இப்பாளையம் முறை நல்கியதோடு மட்டு மல்லாது, வெளிதாட்ட்வரின் தாக்குதலைச் சமாளிக்கும் திறனையும் இது நல்கியது என்று மறைத்திரு ஹீராஸ் அவர்கள் தெரிவித் - துள்ளார்கள்.

பாளையம் முறையானது , பாளையக்காரர்களிடையேப் பேரா- சையை உண்டுபண்ணி மதுரைநாயக்கரின் அதிகாரத்தைப் பலவீனப் படுத்தியது என்பது உண்மை என்றாலும், இப்பாளையம் மூறையா- னது சரியான முறையில் . அமைக்கப்பட்டு, மன்னருக்குக் கட்டுப்பட டிருக்கும்படி செய்யப்பட்டிருந்தால், மதுரை நாயக்கர் MTA DS வந்த பல சிக்கல்கள் வராமலே தடுக்கப்பட்டிருக்கலாம் என்றும் மறைத்திரு ஹீராஸ் கருதுகிறார் .55 மதுரை நாயக்கருக்குப்பாளையம் முறை எப்படியோ அப்படித்தான் விசயநகரப் பேரரசிற்கு நாயன் - காரர்முறையாகும் என்றும் , பாளையம் முறைக்குச் சொல்லப்பட்ட கருத்துக்கள் அனைத்தும், நாயன்காரர் முறைக்கும் பொருந்தும் என்றும் பேராசிரியர் 7.17. மகாலிங்கம் கூறியுள்ளார்.

பாளையக்காரர்கள் பற்றி டாக்டர் ந இராசய்யனின் . சருத்து இங்கு நோக்கத்தக்கது ஆங்கில ஆட்சியாளர்கள் .,

இப்பாளையக்- காரர்களைச் சட்ட்திட்டத்தை மதிக்காத கொள்ளையர்கள் என்றே கருதினார்கள் ஆனால் உண்மையில் . இப்பாளையக்காரர்கள் தங்கள் பகுதிகளைத் திறமையுடன் ஆட்சி செய்பவர்களாகவும் , தங்கள் படைகளின் தளபதிகளாசவும், தங்கள் மன்னரின் நலம் நாடுபவராகவுமே விளங்கினார்கள் தங்கள் குடிமக்களின் நலன் பேணுவது . மட்டுமின்றி, தவறு செய்பவர்களைத் தண்டித்து , நாட்டில் நீதியை நிலை நிறுத்துபவர்களாகவும் இப்பாளையக்காரர்கள் விளங்கினார்கள்.

பாளையங்கள் அனைத்தும் ஒரே பரப்பைக் கொண்டிருக்கவில்லை இராமதாதபுரம் ., சிவகங்கை போன்ற பாளையங்கள் பெரிய பரப்புடையவைகளாவும், மணியாட்ச, ஏழாயிரம் பண்ணை போன்ற பாளையங்கள் சிறிய பரப்புடையவைகளாகவும் விளங்கின -ஓவ் . வொரு பாளையமும், கோவில் நிலங்களையும், பொது நிலங்களையும் தனியார் நிலங்களையும் கொண்டிருந்தன ஒரு பாளையத்தின் . சிறந்த நிலங்கள், அப்பாளையக்காரருக்கே சொந்தமாக இருந்தனஇப் . பாளையக்காரர்கள், காடுகளை வெட்டி , கழனிகளை அமைத்து , நீர்ப்- பாசனத்திற்குக்கண்மாய்களையும் வெட்டினார்கள் என்று பேராசிரியர் 7. *. மகாலிங்கம் கூறியுள்ளார்விசுவநாதநாயக .ாகரின் காலத்தில் , மதுரை அரசில் 72 பாளையங்கள் இருந்தன - ஆனால் இந்த எண்ணிக் . கை பிறகு கூடியது மட்டுமல்லாது தமிழகத்தின் பிற பகுதிகளிலும் இப்பாளையம் முறை நடைமுறைக்கு வந்தது .

பாளையக்காரர்கள் தெலுங்கர்களாகவோ, (வடுகர் அல்லது (
மற்றவர்களாகவோதான் இருந்து வந்தார்கள்.

பாளையக்காரர்கள் தங்களின் கடமைகளிலும் , உரிமைகளிலும், மன்னர்களைப் போன்றே விளங்கஇனார்கள் . மன்னர்கள் வலிமை குன்றும் பொழுது, இப்பாளையக்காரார்கள் தன்னிச்சையாகச் சுதந்- திர ஆட்சி நடத்தவே விழைந்தார்கள் . இதே போன்றுதான், நாயக்கர் மன்னர்கள் , விசயநகரப்பேரரசர் வலிமை குன்றியிருக்கும் பொழுது, தன்னிச்சையாகச் சதந்திர ஆட்சி நடத்த விழைந்தார்கள்.

பாளையக்காரார்களின் முக்கிய வருவாயாக நிலவரி விளங்கி- யதுஅத்தோடு ., தங்களின் தனி நிலங்களிலிருந்து வரும் விளைச்சஓம், சுங்க வரியும், காவல் வரியும் கூடுதல் -வருமானங்களாக விளங்ி கின வரிவரசூலில் திட்டவட்டமான . - நெறிமுறைகள் கடைப்பிடிக் கப்படவில்லை பொதுவாக . - அளவிற்கு அதிகமாகவே வரிகள் வசூ லிக்கப்பட்டன . குறிப்பாக, மன்னர் அதிகப்படியான கிஸ்தியையோ அல்லது படைப்பிரிவுகளையோக் கேட்கும் பொழுது , ஏறத்தாழ கொள்ளையடிப்பது போன்றே மக்களிடமிருந்து வரிகள் வசூலிக்கப்- பட்டன இதனால் மக்கள் ., பாளையக்காரர்கள் மீது வெறுப்புக் கொண்டிருந்தார்கள் எனவேதான் கிழக்கிந்தியக் . கம்பெனியார், சென்னை மாநிலத்தின் ஆட்சிப் பொறுப்பைக் கைப்பற்றிக் கொள்- ளும் பொழுது மக்கள் எந்தவித எதிர்ப்பும் தெரிவிக்காமல், அதை வரவேற்கவே செய்தார்கள்.

**பாலயக்காரர்களின் போர் முறை**

பாளையக்காரர்கள் மலைகள் மீதும் ,
பருத்திக்காடுகளிலும் மண்கோட்டைகளைக் கட்டினார்கள் .

உள்நாட்டு மக்களுக்கு இக் கோட்டைகள் பாதுகாப்புக் கோட்டைகளாக விளங்கினாலும் , உண்- மையில் அக்கோட்டைகள் பீரங்கிக் குண்டுகளுக்குத் தாக்குப் பிடிக்க முடியாததாக இருந்தன கத்தி ., ஈட்டி, எறிபந்தம், வில் அம்பு , சவன்கல், குத்துவாள், சிறுரக பீரங்கிக்குண்டுகள் முதலியன பாளை- யக்காரார்களின் ஆயுதங்களாக விளங்கின . வளைத்தடி**"" என்று சொல்லக் கூடிய விநோதமான கருவியைக்கள்ளார் படையினர் பயன் படுத்தினார்கள் .

கடினமான மரத்தாலோ அல்லது இரும்பாலோ செய்யப்பட்ட இக்கருவி, வெளிப் பக்கத்தில் 24 அங்குல நீளமும் , உள்பக்கத்தில் 18 அங்குல நீளமும் கொண்டு வளைந்திருக்கும் . இதைத் தனித்திறமையுடன் சுழற்றி வீசினால் அது பகைவர்களைப் பயங்கரமாகத் தாக்கும் அப்படித் காக்காது . போனால், சுழற்சியின் வேகத்தில் அது மீண்டும் வீசியவரின் கைக்கே வந்து சேரும் இந்த . வளைத்தடியைப் பயன்படுத்தித்தொலைவிலுள்ள பகைவர்களைத்தாக்க முடியாது மனிதனால் வீசி எறியக்கூடிய . தொலைவிலுள்ள பகைவர்களையே இதனால் தாக்க முடியும் .

வலிமையான பகைவர்கள் தாக்கவரும் பொழுது , பாளையக்காரர்கள், அடர்ந்த காடுகளில் பதுங்கி - யிருந்து, கொரில்லா முறையில் பகைவர்களைத் தாக்கினார்கள் -தங் . களுக்கிருக்கக் கூடிய குறைந்த வசதியைக் கொண்டு ,

பகைவர்களைப் பதுங்கியிருந்துத் தாக்குவதில் இவர்கள் சிறந்து விளங்கினார்கள் . குறிப்பாக, விசயநகரப் பேரரசு வலிமை குன்றிய பிறகு , தமிழகத்- இல் இப்பாளையக்காரர்களின் கெடுபிடிகளேக் கூடுதலாக இருந்து வந்தன.

பாளையக்காரர்கள் ஆட்சிமுறை , ஆங்கில ஆட்சிமுறை விரி- வாவதற்குப் பெரும் சவாலாகவே விளங்கியது எனலாம் . நாயக்கர் ஆட்சியை முழுமையாக ஆங்கிலேயர்கள் வீழ்த்திய போதிலும், பாளையக்காரர் ஆட்சி முறையால் , நாயக்கர் பேரரசின் பெரும்பகுதி கள், பாளையக்காரர்கள் வசமே தொடர்ந்து இருந்தன ஆங்கிலேயர் . ஆட்சியை எதிர்த்து , சுதந்திரக் குரல் கொடுத்த பாளையக்காரர் - களுள், நெற்கட்டும் செவ்வல் பாளையக்காரர் பூலித்தேவரும், பாஞ்- சாலக் குறிச்சிப் பாளையக்காரர் வீரபாண்டியக் கட்டபொம் னும் முக்கியமானவர்கள் .

**நாயக்கர்கள் ஆட்சிமுறை , சமுதாய நிலை , மற்றும் கலைத்துறைச் சாதனைகள்**

**நாயக்கர்கள் ஆட்சிமுறை**

விசய நகரத்து மன்னர்கள் தங்களின் படை வலிமையால் துமிழகத்தைக் கைக்கொண்டு , அதன் ம நிலப் பகுதிகளில் நாயன் காரர் ஆட்சிமுறையைக் கொண்டு வந்தார்கள் விஜய நகரத்து . மன்னர்கள், தங்களின் அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்களையே , இம் மாநிலங்களுக்குத் தலைவர்களாக நியமித்தார்கள் - இந்த நாயக்கர் . கள், தங்கள் பகுதிசளில் வரி வசூலித்து , ஆண்டுதோறும், விசயநகர

அரூற்குக் கப்பம் கட்டி வந்தார்கள் - தங்கள் பகுதியின் அமை . இக்கும், பாதுகாப்பிற்கும், நீதிக்கும், நாயக்கர்களே பொறுப்புடை - யவர்களாக இருந்தார்கள் இந்த நாயக்கர்கள் தங்களுக்கென்று ., ஒரு தனிப்படையை வைத்திருந்தது மட்டுமின்றி விசயநகர அரூற்- குப் போர்க் காலங்களில் , தங்கள் படைகளையும் கொடுத்து உதவி வந்தார்கள்மேலும் ., விசயநகரப் பேரரசர்களின் பிறந்தநாள் விழாக் காலங்களிலும் , ஏனைய முக்கிய வைபவங்களிலும் , இந்த நாயக்கர்கள், பல வெகுமதிகளையும், பரிசுப்பொருள்களையும் பணிந் - தனுப்பி வைத்தார்கள்.

நாட்டு நிர்வாகத்திலும் , அரசியல் அதிகாரத்திலும் , இந்த நாயக்கர்களுக்கும், விசயநகரப் பேரரசின் சார்பிலிருந்த மகா - மண்ட்லேசுவரர்களுக்கும் இருந்த பொறுப்பு யாது என்பதனை , 1.7. மகாலிங்கம் அவர்கள் விளக்கியுள்ளார்கள் .48 மகாமண்டலே- சுவரர்கள் பேரரசின் சார்பில் , மாநிலங்களில் ஆட்சிமுறை செவ்வனே நடைபெற்று வருகிறதா எனக் கண்காணித்து வந்தார்கள். ஆனால் நாயக்கர்கள், தங்கள் தங்கள் பகுதிகளில் முழு அதிகாரம் கொண்டு ஆட் ? செய்து வந்தார் .

பொதுவாக நாயக்கர்களின் இத் தனி அதிகாரத்தில், விசய நகரப் பேரரசர் தலையிடுவதில்லை மேலும் மகாமண்டலேசுவரர்கள் ஓரிடத்திலிருந்து வேறிடத்திற்கு மாற்றப் பட்டார்கள் ஆனால் நாயக்கர்களின் நிலை அவ்வாறு . இல்லை, ஆரம்- பத்தில் அரச குடும்பத்தைச் சேர்ந்த தனி மனிதருக்கு நாயக்கர் ப தவி கொடுக்கப்பட்டாலும்.,

காலப்போக்கில்,' அது பரம்பரைப் பதவியாக மாறியது இந்த . நாயக்கர்கள், மத்திய அரற்குக்கட்டுப் - பட்டு ஆட்சி செய்து வந்தாலும் மத்திய அரசு வலுவிழக்கும் பொழுது, தங்களை விடுவித்துக் கொண்டு தனியாட் ? செலுத்தும் வாய்ப்புக்களையே விரும்பி வந்தார்கள் நாயக்கர்களின் சார்பில் . இரண்டு அதிகாரிகள், பேரரசரின் தலைநகரில் இருந்து கொண்டு பணியாற்றி வந்தார்கள் ஒருவர் நாயக்கரின் இராணுவ முறை . அலுவல்களையும், மற்றவர் உள்ளாட்சி முறை அலுவல்களையும் கவனித்து வந்தார்கள்.

**ரோம்பாவின் பிரடிதத்துவ முறையோடு ஓபமீடு**

1.7. மகாலிங்கம் அவர்கள் , விசயநகர அரசின் , நாயன்காரார் முறையையும், ஐரேப்பாவில் இடைக் காலத்தில் நிலவிய பிரபுதத் - துவ முறையையும் ஒப்பிட்டு எழுதியுள்ளார்கள் .ஐரோப்பாவில், மன்னர்களிடமிருந்து . பிரபுக்களின் நிலங்களில் . பிரபுக்கள் பாதுகாப்பைப் பெற்றார்கள் - குடியானவர்கள் உழைத்துப் பிழைத்து வந் தார்கள் .

குடியானவர்களின் நலன்சளைப் பாதுகாப்பது பிரபுக்களின் கட்மையாக இருந்து வந்தது இதே போன்றே தமிழகத்தின் . நாயக் கர்கள், விசய நகர மன்னரிடமிருந்து நிலவுரிமைகளைப் பெற்று, அதற்கு மாறாக ஆண்டு தோறும் குறிப்பிட்ட . மேலும் இந்த . தொகையைக் கப்பமாகக் கட்டி வந்தார்கள் நிலங்களை, இந்த நாயக் - கார்கள், சறுவிவசாயிசளின் உபயோகத்திற்கு நல்கினார்கள் ஆனால் . இந்த ஒப்புமையை பர்டன் ஸ்டெய்ன் அவர்கள் மறுக்கிறார்கள் *.5 இவர்,

இந்தியாவிலோ அல்லது துமிழகத்திலோ நிலவியபிரபுதத்துவ முறையானது ஐரோப்பிய பிரபுதத்துவ முறையினின்றும் ஐப்பானிய பிரபு தத்துவ முறையினின்றும் மாறுபட்டது என்ற கருத்தை விளக்கியுள்ளார்.

விசயநகரத்து மன்னர்கள் , நாயக்கர்களுக்கு, நிலங்களையும், ஆட செய்யப் பரப்புகளையும் விட்டுக்கொடுத்து அதற்குப் பதிலாக , அவர்கள் நாயக்கர்களிட் மிருந்து பணத்தையும், படையையும் பெற்று "வந்தார்கள் ஆனால் . .

மத்திய கால ஐரோப்பாவில், நிலப்பிரபுக்கள் மன்னருக்கு நிலங்களை விட்டுக் கொடுத்து , அதற்கு பதிலாக மன் - னரின் பாதுகாப்பைப் பெற்று வந்தார்கள்.

நாயக்கர் முறையில் , நாயக்கர்கள் மன்னரிடம் விசுவாசம் வைத்திருக்கவேண்டுமென்று முச்சியமாக எதிர்பாக்கப்பட்டார்கள் . ஆனால் ஐரோப்பாவில் , பிரபுக்கள் அனைவரும் சேர்ந்து , மன்னரைப் பாதுகாக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்பட்டார்கள்.

மத்தியகால ஐரோப்பாவில் , முழுச் சமுதாயமும் பிரபுக்களின் ழ் பணிபுரியும் குடியானவர்களாக விளங்கினார்கள்ஆனால் . நாயக்கர் ஆட்சியில் முழுச் சமுதாய மக்களும் உள்ளடக்கப்படவில்லை . நாயன்காரர் ஆட்சிமுறையினால், விசயநகரமன்னர்கள் பரந்த பரப்பை ஆட்சி செய்ய முடிந்தது திறமை மிக்க நாயக்கர்களும் ., காடுகளை வெட்டி, நிலங்களைப் பெருக்கி , நீர்ப்பாசன வசதிகளைச் செய்துகொடுத்து நாடு நகரங்களை வளப்படுத்தினார்கள் .

என்றாலும், இந்த நாயக்கர்கள் தங்களுக்குள் சண்டையிட்டுக் கொண்டு, விசய 'நகர அரசின் அழிவிற்குக் காரணமானார்கள்.

**மன்னரும் அமைச்சர்களும்**

**தளவாய்**

நாயக்கர்களின் ஆட்சி முறையில் , தளவாய் என்பவர் முக்கியமான அதிகாரியாகவிளங்கினார் -இராணுவத்துறை . யின் கட்டுப்பாடும் , ஆட்சி முறையின் அதிகாரங்களும் இவரிடம் பொதிந்திருந்தன பழங்கால இந்து ஆட்சி முறையில் . இருந்த முதல் அமைச்சர் பதவியும் சேனாதிபதிப் பதவியும், நாயக்கர் ஆட்சியில் கடைபிடிக்கப்படவில்லை இவ்விருவரின் . அதிகாரங்களும் தளவாய் ப . தவியிலேயே அடங்கியிருந்தன.

இந்த முறையானது, அக்காலச் சூழ்நிலைக்குத் தேவையானதாகவே இருந்தது என்று பேராசிரியர் ஈ . உள்நாட்டில் தீய எதிர்ப்புச் . சத்தியநாதய்யர் கூறியுள்ளார் சக்திகளை, ஒடுக்கி, நல்லாட்சி ஏற்படுத்த , இவ்வாறு இராணுவ அஇகாரமும், சிவில் அதிகாரமும் இணைந்த தளவாய்ப் பதவி அவசியமானதாகவே இருந்தது இவைகள் இவ்வாறு . இணைக்கப்படாமல், தனிப்படுத்தப்பட்டிருந்தால், அவைகள் குழப்பத்திலேயே முடி வடைந்திருக்கும் இந்தியாவை ஆண்ட . ஆங்கிலேயர்கள் கூட், இவ்- வாறு இவ்விரு அதிகாரங்களும் இணைந்த அதிகாரிகளையே நியமித் - இருந்தார்கள் என்பது இங்கு நினைவு கூறத்தக்கது - தளவாயின் இவ் . வதிகாரங்கள், மன்னர்களாகவேபார்த்து நல்கப்பட்டதால் தேவைப் படும் பொழுது இவ்வதிகாரங்களைத் தளவாயிட்மிருந்து நீக்கிக்

கொள்ளவும் மன்னர்களால் முடிந்தது தமிழகத்து . நாயக்கர்களின் ஆட்சி காலத்தில் , அரியநாத முதலியார் , இராமப்பய்யன், நரசப்- பய்யன் ஆகியோர் புகழ்மிக்க தளவாய்களாகத் திகழ்ந்தார்கள்.

**பிரதாணி**

அடுத்து மிக முக்கியமான அல் மச்சராக விளங் - கயவர் பிரதானி என்பவராவார் - ஆட்சியின் நிதிப் பொறுப்பை . யும், வரவு செலவு கணக்குகளையும் இவர் கவனித்துக்கொண்டாலும் நாட்டின் ஆட்சிப் பொறுப்பில் இவரும் மிக முக்கியமான இடக். தைப் பெற்றிருந்தார் வெளி . அரசப் போர்களில், களவாய் படை - களை நடத்திச் சென்றிருக்கும் பொழுது, உள்நாட்டு நிர்வாகத்தில், பிரதானியின் பொறுப்பு, மிக அதிகமாகியது.

**இராயாசம்**

அடுத்து மிக முக்கியமானவராகவும் ஆட்ச 9- யின் செயலர் போன்றும் விளங்கக்கூடிப அமைச்சர் இராயாசம் என அழைக்சப்பட்டார் இவர் ஆட்சிப் பொறுப்பில் ., மக்களோடு நேரடித் தொடர்பு கொண்டவராக விளங்குகினார் . இம்மூன்று அமைச்சர்கள்போக, கணக்கன், ஸ்தனபதி வெளி) அரசுச்செயலர் ( ஒலைநாயகம் போன்ற அமைச்சர்களும் இருந்து வந் தார்கள் . இந்த அமைச்சர்களின் €ழ் பல அலுவலர்கள் பணிபுரிந்து வந்தார்கள் இந்த அலுவலர்களை நியமிக்கவும் ., நீக்கவும், அந்தந்த துறை அமைச்சர்களுக்கு அதிகாரம் இருந்தது . இவ்வாறு பல அமைச்சர்கள் செயல்பட்டு வந்தாலும் , நாயக்க

மன்னரே முழு அதிகாரம் கொண்ட்வராக விளங்கினார் . என்றாலும், பழைய மரபுவழி முறைகளுக்கும் பொது மக்களின் கருத்திற்கும், அமைச்சர் குழுவினரின் ஆலோசனைகளுக்கும் மன்னர் முக்கியத்துவம் அளிக்கவே செய்தார்.

**நாயக்கர் அரசின் உள் ஆட்சி முறை**

தஞ்யைத் தலை நகராகக் கொண்ட சோழர்களின் காலத்தில் உள்ளாட்சி முறையா - னது உன்னதமான நிலையை எட்டியிருந்ததுஆனால் ., நாயக்கர்களின் ஆட்சி காலத்தில் , கிராம சுய ஆட்சிமுறை இருந்து வந்தாலும் அது . சோழர்களின் காலத்தின் சிறப்பைப் பெற்றிருக்கவில்லை . -நாயக்கர் களின் உள்ளாட்சி முறையில், பாளையங்களும், அதன் பொறுப்பா- ளர்களாகய, பாளையக்காரர்களும், சிறந்த இடத்தைப் பெற்றிருந்- தார்கள் இப்பாளையக்காரர்களின் . ஆட்சிமுறையைப் பின்னர் - உள்ள பகுதியில் விரிவாகக் காணலாம் நாயக்கர்களின் காலத்தில் ., கடலோரப் பகுதிகள் , போர்ச்சுக்கசியர்கள் மற்றும் டச்சுக்காரர் களின் வசம் இருந்து வந்தன.

நாயக்கர் காலத்திய நீதித்துறை

நாயக்கர்களின், மைய அரசு விரிவான நீதித்துறையை அமைத்துச் செயல் படுத்தி வரவில்லை . உள்பகுஇகளில் வழக்குகளை, சிராமத்தலைவர்களே விசாரித்து நீதி வழங்கி வந்தார்கள்சமுதாயம் ., மற்றும் சமயம் சம்மந்தப்பட்ட பெரும் வழக்குகளையே பன்னர்சளும் அவர்களது பெரும் அதிகாரி - களும் கவனித்து வந்தார்கள் .

**நீதித்துறை**

நாயக்கர்களின் காலத்தில் , கிராம வருவாய் அதி - காரி, *மணியகாரன்' என்றும் அறியப்பட்டிருந்தார் கிறித்துவ . பாதிரியார்களின் குறிப்புகளிலிருந்து , மொத்த விளைச்சலில் சரிபாதி, நிலவரியாக வரூலிக்கப்பட்டது என அறிகிறோம் . நிலவரி பற்றி இரு சருத்துக்கள் நிலவுகின்றன நெல்சன் . அவர்கள் நிலவரியானது மொத்த விளைச்சலில் சரிபாதி என்று கூற, சத்திய நாத அய்யர் அவர்கள், செலவு நீக்கிய இறுதியான நிகர லாபத்தில் சரிபாதி என்று கூறியுள்ளார் இந் .த நிலவரியைப் பாளைக்காரர்கள் வசூல் செய்து, அதில் மூன்றில் ஒரு பங்கினையும் , இதர வெகுமதிகளையும் , வேண்டியபடை உதவிகளையும் நாயக்கர் மன்னர்களுக்குக் கொடுத்து வந்தார்கள் மன்னர்கள் வலுகுன்றியிருக்கும் போது ., பாளையங்- களிடமிருந்து, சரியாகப் பணம் வருவதில்லையா தலால், அதற்காகச் சண்டைகளும் நடந்துள்ளன நிலவரி போக ., ஏற்றுமதிவரி, இறக்- குமதி வரி போன்ற பல வருமானங்களும் இருந்து வந்தன -முத்துக் . குளிப்பும், மீன் வளமும் நல்ல வருமானத்தை தந்தன.

நாயக்கர்கள், இந்த வருமானத்தை எப்படிச் செலவு செய்- தார்கள் என்கின்ற தகவல்களைப் பேராசிரியர் &. இராசய்யன் அவர்கள் தனது நூலில் குறிப்பிட்டுள்ளார்கள் வரிகளை . வசூலிப்பதில் கடுமை காட்டப்பட்டாலும் அப்பணத்தை செலவு செய்வதில் தாராள மனப்பான்மையே இருந்து வந்தது . இப்பணம், அரண்மனை அந்தப்புரங்களில் அழகு

மங்கையர்களைத் திரட்டி வைக்கவும் , அந்தணர்களுக்கு அக்ரகாரங்களை அமைத்து கொடுக்கவும் , இறையவர்- களுக்கு கோவில்கள் கட்டுவதிலும் செலவழிக்கப்பட்டது விசய . நகரப்பேரரசுக்குக் கப்பம் கட்டியதுபோக எஞ்சிய வருமானம் படை களை நிர்வகிப்பதிலும் மக்கள் நலம் பேணும் பொதுச் . சேவைகளி- லும் செலவழிக்கப்பட்டன இவ்வாறெல்லாம் ., அரசுப்பணம் செலவழிக்கப்பட்டாலும் அதற்காக முன் கூட்டியே வரவு -செலவுத்திட்- டம் தயாரிப்பது என்பது கடை பிடிக்கப்படாமல் இருந்து வந்தது.

**படைத்துறை**

விசயநகரப் பேரரசர்கள் வேண்டும் பொழுது, நாயக்கர் மன்னர்கள் படைகளைக் கொடுத்து உ தவவேண் - டியிருந்தது .

நாயக்கர்களுக்கு அவர்களின் பாளையக்காரர்கள் படை கொடுத்து உதவினார்கள் நாயக்கர்கள் வசம் ., தீரம்மிகுந்ததளவாய் பலர் பணியாற்றி , வெற்றிகளைத் தேடித்சந்துள்ளார்சள்என்றா .” Ob, சசடற்படையில் நாயக்கர்கள் நாட்டம் காட்டவிள்லை இதனால் . வாணிபர்களாக வந்த பேலை நாட்டவரின் மேலாதிக்கத்தை இவர் - களால் தடுத்த நிறுத்த முடியாமல் போய்விட்டது - மேலும் நாயக் . கார்களின் படைகள் பழைய மரபுப்படியே எந்தவித முன்னேற்றமும் இல்லாமல், மண்கோட்டை கொத்தளங்களையே நம்பி இருந்தன ஐரோப்பியர்களின் பிரங்கிப்படைகளுக்கு , ஈடு கொடுக்க முடியாமல் மன்னர்களின் மண்கோட்டைகள் தரைமட்டமாயின.

**சமூதாய நிலை**

நாயக்கர்களின் ஆட்சி என்பது , தமிழர்- களின் ஆட்சி என்பதை விஉ ,, தெலுங்கர்களின் ஆட்சி என்று கூறு - வதே பொருத்தமானதாகும்.. நாடககர்கள் முக்கிய அரசுப்பொறுப் . புகளில் தெலுங்கர்களையே நியமித்தார்கள் இதனால் தமிழ் . இனத்து மக்களிடையே பனக்குறை இருந்து வந்தது . இதைப்போக்க, நாயக்- கர் பன்னர்கள் , பல்வேறு தமிழ்வீரர்களைப் பாளையக்காரர்களாக நியமித்ததனால், இவர்களால் நாட்டின் பல்வேறு பகுதிகளைச் சிறப் - புடன் நிர்வகித்து வரமுடிந்தது . பழங்கால இந்து மன்னர்களைப் போன்றே, நாயக்கர் மன்னர் - களும், பிராமணர்களைப் போற்றி ஆதரித்து, அவர்களுக்கு அக்ரகா- ரங்கள் அமைப்பதற்குப் பெரும் பணம் செலவு செய்தார்கள் குடி . மக்களிடையே பிராமணர்கள் உயர்ந்த இடத்தைப் பெற்றுச் சலு - கைகளை அநுபவித்து வரும்பொழுது, சூத்திரர்கள் என்றும் , தீண்- டத்தகாதவர்கள், என்றும் ஒதுக்கப்பட்ட மக்களிடையே , கிறித்துவ மதக் கோட்பாடுகள் பெரும் புகழைப் பெற்றன.

ஆனால் இந்த வேளாண்மை, பருவ மழையை நம்பியிருக்ச, பல சமயங்களில் , பருவமழை பொய்த்ததினால் , நாட்டில் பஞ்சம் அடிக்கடி ஏற்பட்டது நாயக்கர் மன்னர்கள் ஒரு . சில குளங்களை மட்டும் வெட்டினாரகளேயொழிய , வேளாண்மையை மேம்படுத்த நீர்ப்பாசன வசதியைப் பெருக்கவில்லை- இந்நிலையில் இந்து மன்னர் . கள் நீர்ப்பாசனத் துறைக்கு என்று தனி அமைச்சகத்தை நிறுவிச்

செயல்பட்ட செய்தியை அறிய முடியவில்லை என்றும் 8. ஸ்டெயின் அவர்களின் கூற்று இங்கு குறிப்பிடத்தக்கது . மதுரை, செஞ்சி, தஞ்சை, திருச்ச போன்ற நகரங்கள் , நாயக்கர் மன்னர்களின் ஆட்சி காலத்தில் வளத்தோடு இருந்து வந்தாலும், ஏனைய கிரதமப்பகுதி - கள் அனைத்தும் , வறுமையிலேயே வாடி வந்தன . நாட்டு மக் ஞக்குக் குடிசைத் தொழில்களும் கூடுதல் வருமா - னத்தைத் தந்தன என்றாலும் ., மேலை நாட்டவரின் வாணிபத்தின் வளர்ச்சியையும், மேலாண்மையையும் நாயக்கர்கள் முறைப் படுத் இக் சட்டுப்படுத்தாததால், உள்நாட்டுத் தொழில் நடுந்தது மட்டு மின்றிப் பின்னர் , இவ்வாணிபர்களே, இந்த நாட்டை அடிமைப் படுத்தி ஆளும் அதிகாரத்தையும் பெற்றார்கள்.

இன்று முன்னேறியிருக்கும் அளவிற்கு , நாயக்கர் காலத்தில் பெண்கள் முன்னேறியிருக்கவில்லை உயர்ந்த . குடும்பத்தைச் சேர்ந்த பெண்கள் ஆடை அணிகலன்சளுடன் சுகவாழ்வு வாழ , தாழ்ந்த குடும்பத்தைச் சேர்ந்த பெண்கள் , கல்வி அறிவின்றிக் sro marr say tb உழைக்க வேண்டியிருந்தது . சதி, பலதாரக் திருமணம் , பொது மகளிர் முறை முதலியன அக்காலத்தில் சமுதாயக் கொடுமைகளாசு விளங்கின .

வடமொழிக் கல்வியும் வேதப்பாடசாலைகளும் , மன்னர்களின் ஆதரவைப் பெற்றன .' தெலுங்கு மற்றும் தமிழ்க் கவிஞர்களும் போற்றி ஆதரிக்கப்பட்டார்கள் நாயக்க . மன்னர்கள், வைணவ மதத்தில் ஈடுபாடு கொண்டிருந்தாலும் . கிறித்துவமதம், இசுலாமிய மதம் உட்பட எல்லா மதங் ளும் -

வளர்ச்சி பெற இவர்கள் தடை யாக விளங்கவில்லை .

கிராமமக்கள் தங்கள் பரபு வழச்கப்படி, கிராம தேவதைகளை வணங்கி வந்தார்கள் - கராமத் தெய்வங்களுக் . குப் பெரும் கோவில்கள் எதுவும் கட்டப்படவில்லை-இந்து உயர் . குலத்துத் தெய்வங்களுக்கே பெரும் கோவில்கள் கட்ட்ப்பட்டன.

**நாயக்கர் மன்னர்காலத்திய கலைதீதுறையும்**

**கட்டிடக்கலையும்**

பாரம்பரியமாக வரக்கூடிய தமிழகச் கலைத்துறையின் மாண்- புகளை நாயக்கர் மன்னர்களும் பாதுகாத்துப் பெருமைப்படுத்திஞர்- கள் கலைத்துறையின் அடிப்படைத் . தன்மைகளும், கருத்துகளும், காலவோட்டத்தை எதிர்த்து மாருது நின்றாலும் , அவ்வப்பொழுது, புதிய சாதனைகள் , இத்துறையில் ஏற்பட்வே செய்தன இவ்வாறு . நாயக்கர்களின் பெருமை மிக்கச் சாசனையாக விளங்கி நிற்பது மதுரை மீனாக்ஷிஅம்மன் கோவில் அமைப்ப இக்கோவில் .கும்-17ம் நூற்றாண்டின் திராவிடக் கட்டிடக்கலைக்குச் சான்று கூறி- நிற்கிறது என்று பேராசிரியர் மகாலிங்கம் கருதுகிறார் . இக்கோவில் உயர்ந்த கோபுரங்களையும் , கூம்புகளோ அல்லது வளைவுகளோ இல் - லாத சமதளத்தைக் சொண்ட மேற்கூரைகளையும், எண்ணிறந்த சிற்ப வேலைப்பாடுகளைக் கொண்ட தூண்களையும் கொண்டு விளங்கு - கிறது நீண்ட . சதுரவடிவைக்கொண்ட் இக்கோவில் , வடக்குத் தெற்காக 720 அடிகளையும், கிழக்கு மேற்காக 8384 அடிகளையும் , கொண்டு விளங்குகிறது- மண்டபங்களுக்குப் புகழ்பெற்ற இக் . கோவிலில்,

ஆயிரம்கால் மண்டபம் தனிச் சிறப்புப் பெற்று விளங்கு கிறது . இக்கோவிலின் கிழக்குப் பகுதியில், 330 அடி நீளமும் , 105 அடி அகலமும் கொண்ட புதுமண்டபம்::" திருமலை நாயக்கரால் கட்டப்பெற்று, அழகிய சிற்பவேலைகள் கொண்ட தூண்கள்ப் பெற்று விளங்குகிறது.

மதுரை நாயக்கர்கள் , திருவரங்கத்திலுள்ள ரெங்கநாதர் ஆலயத்திலும் கவனம் செலுத்தி , தென்னகத்தின் மிகப் பெரிய கோவில் என்னும் நிலைக்கு அதை உயர்த்தினார்கள் . இக்கோவிலின் வெளிப் பிரகாரம் , 2880 அடி நீளத்தையும் , 8475 அடி-அகலத்தை . யும் கொண்டு விளங்குகிறது மத்தியிலுள்ள . மூலவரைச் சுற்றி ஏழு பிரகாரங்களை இக்கோவிலில் காணலாம்.

இதே போன்று , தூண் நிறைந்த நீண்ட தாழ்வாரங்களுக்குப் புகழ் பெற்ற இராமேசுவரம் கோவிலும் மற்றும், சிதம்பரம், ஸ்ரீவில்லிபுத்தூர் கோவில்களும் , நாயக்கார் மன்னர்களின் கட்டிடக் - கலைக்கும், சமயப் பணிக்கும் சான்றுகள் கூறி நிற்கின்றன.

இத்தியாவில், ஆதாரப்பூர்வமான முழு உருவச்சிலைகளைக் காணு வது அரிது என்ருலும் , தென்னகத்தில், பழங்காலம் தொட்டே, குறிப்பாக நாயக்கர்களின் காலத்தில், பல உருவச் சிலைகளைக் கோவில்களில் காணமுடிகிறது என்று வரலாற்றறிஞர் வின்செண்ட் ஸ்மித் அவர்கள் கருத்துத் தெரிவித்துள்ளார்கள் ."" தஞ்சை நாயக்க மன்னரின் அவைக்களத்தில் சிறந்து விளங்கிய அறிஞர்

கோவிந்த இட்டுதர் அவர்களின் உருவச்சிலை ; கும்பகோணம் கும்பேசுவரர் கோவிலிலும், பட்டீசுவரம் சிவன் கோவிலிலும் அமைக்கப்பட்டிருக்- றது மேலும் பட்டீசுவரம் கோவிலில் .

தஞ்சை நாயக்கர் அரச வமிசத்தினரின் உருவங்களைக் காணலாம் இதே போன்ம்று கும்பகோண . இராமசாமிகோவிலில், இரகுநாத நாயக்கரின் முழுஉருவச் சிலையைக் காணமுடிகிறது இருவரங்கம் கோவிலில் ., சில மதுரை நாயக்கர்களின் உருவச்சிலைகளைக் காணமுடிகிறது . - எல்லாக் கோ வில்களையும் விட் , மதுரை மீனாக்ஷி அம்மன் கோவிலிலும், புதுமண்டபத்தில், பெரும் அளவிலான உருவச் சிலைகள் இடம் பெற்றுள்ளன . குறிப்பாகப் புதுமண்டபத்தில் , மதுரை நாயக்கர் அரச வமிசத்தைச் சேர்ந்த, பத்து மன்னர்களின் உருவச்சிலைகளை நாம் காணலாம்.

நாயக்கர் மன்னர்கள் கட்டிய பெரும் அரண்மனைகள் பல இன்றும் நமக்கு காட்சிப் பொருள்களாக விளங்குகின்றன .

இந்தியஇசுலாமியக் கட்டிடக் கலையின் பாணியில், மேலைநாட்டுக் கட்டிட்க் கலையின் பாணியும் விரவிக் கட்டப்பட்ட மதுரை திருமலைநாயக்கர் மகால் இதற்குச் சிறந்த உதாரணமாகத் திகழுகிறது வட இந்தி .யாலில் தாஜ்மகால் எவ்வாறு புகழ்பெற்று விளங்குகிறகோ, அதே போன்று, ஏறத்தாழ அதேகாலத்தில் கட்டப்பட்ட மதுரை திருமலை நாயக்கர் மகால் தென்னகத்தில் புகழ் பெற்று விளங்குகிறது.

நாயக்க மன்னார்கள் கட்டிய பாதுகாப்புக் கோட்டைகளும், இவர்களின் கலைத்திறமைக்குச் சான்றுகளாக

விளங்குகின்றன. செஞ்சிக் கோட்டை , திருச்சிக் கோட்டை , இண்டுக்கல் கோட்டை , இருமயம் கோட்டை , நாமக்கல் கோட்டை முதலியனவும் , மதுரை தெப்பக்குளமும் நாயக்கர்களின் கட்டுமானக் இறனுக்குச் சான்று - களாக விளங்குகின்றன இம்மன்னார்கள் இசைக்கலையையும் ., ஓவியக் கலையையும் ஆதரித்து வளர்த்து வந்தார்கள் . நாயக்கர் காலத்திய ஒவியக்கலையை, மதுரை மீனாகஷி அம்மன் கோவிலிலும், மகாலிலும் இன்றும் காணலாம்.

நாயக்கர் மன்னர்களின் காலத்தில் , வடமொழியும், தெலுங்கு மொழியும் பெற்ற ஆதரவைத் தமிழ்மொழி பெறவில்லைதஞ்சை . இரகுநாதநாயக்கர் எழுதிய '*பாரிஜாத அபஹறரணம்"", கோவிந்த இட்சிதர் எழுதிய "சங்கீத சுதா ", விசயராகவநாயக்கர் எழுதிய "-ரகுநாதாப்யுதயம்"', குமரகுருபரர் எழுதிய மீனாட்சியம்மை-: பிள்ளைத் தமிழ் "", சிவப்பிரகாச சுவாமிகள் எழுதிய பிரபுலிங்க * லீலை", ராமபத்ர தீட்சிதர் எழுதிய *'ஜான பரிணயம் "' முதலிய இலக்கிய படைப்புகள் இம்மன்னர்களின் காலத்திய இலக்கியச் சாதனைகளாக விளங்குகின்றன.

**சுய மதிப்பிட்டு கேள்வி**

- தஞ்சை நாயக்கர்கள் ஆட்சி நிர்வாகம் பற்றி விவரிக
- செஞ்சி நாயக்கர்கள் சமூக மற்றும் பொருளாதார நிலைமைகள் – மதம் பற்றி கூறுக
- தஞ்சை நாயக்கர்கள் ஆட்சி தஞ்சை நாயக்கர்கள் ஆட்சி விவரிக

## அலகு - நான்கு

தமிழ் நாட்டின் மராத்தியர்கள் – செர்போஜி II – நிர்வாகம் – தமிழ் கலாச்சாரத்திற்கு மராட்டியரின் பங்களிப்பு – சரஸ்வதி மஹால் நூலகம் – ராம்நாட்டின் சேதுபதிகள் – சமூகம் – பொருளாதாரம் – மதம் மற்றும் கலாச்சாரம்

**நோக்கங்கள்**

- தமிழ் நாட்டின் மராத்தியர்கள் நிர்வாகம்
- தமிழ் கலாச்சாரத்திற்கு மராட்டியரின் பங்களிப்பு
- ராம்நாட்டின் சேதுபதிகள் சமூகம் – பொருளாதாரம்

### தஞ்சை மராட்டியர்கள்

1678ம் ஆண்டு , மதுரை சொக்கநாத நாயக்கர் , தஞ்சை 'விசயராகவ நாயக்கரைத் தோற்கடித்துத் தஞ்சையில் அழகிரி நாயக்கரைத் தனது ஆளுநராக நியமித்தார்தஞ்சையின் ஆட்டிப் . பொறுப்பை ஏற்றவுடன் அழகிரி, மதுரை அரசை மதிக்காமல் , தன்னிச்சையாகத் தனியாட்சி புரியலாளார் இந்நிலையில் ., அழிந்து- பட்ட விசயராகவ நாயக்கரின் குடும்ப வாரிசு , செங்£;மலதாசு என்னும் இளவரசர், நாகைப்பட்டணத்தில் ஒரு வளமான வாணி- பரிடம் வளர்ந்து வருகிறார் என்பதை அறிந்த தஞ்சை அமைச்சர் வெங்கண்ணா, பீஜப்பூர் சுல்தான் அடில்ஷாவிட்ம் செங்கமலதாசைப் பதவியிலமர்த்த உதவிகோரினார் தக்க சமயத்தை எதிர்பார்த்துக் .

கொண்டிருந்தஅடில்ஷா, தனதுதளபதி வெங்கோஜி என்று அழைக்- கப்படும் ஏகோஜியைப் படை யுடன் தஞ்சைக்கு. .அனுப்பிவைத்தார்

**இரண்டாம் சரபோஜி (கி.பி. 1798-1832)**

துல்ஜாஜி கி.பி.1787இல் வாரிசு இன்றி மறைந்தார் . இவர் தாம் இறக்கும் முன்பு சரபோஜி என்பவரைத் தத்து எடுத்துக் கொண்டார் .சரபோஜி இளம்வயதினராக இருந்ததால், துல்ஜாஜியின் ஒன்றுவிட்ட சகோதரர் அமர்சிங் என்பவர் அவருக்குக் காப்பாளராக இருந்து கி.பி.1787 முதல் 1798 வரை தஞ்சையை அரசாண்டு வந்தார் .அமர்சிங் சுதந்திரத் தன்னாட்சி வேட்கை கொண்டவர் .எனவே இவர் ஆங்கிலேயர்களைத் தஞ்சைப் பகுதியிலிருந்து விரட்ட விரும்பினார் .அதனால் இவர் ஆட்சிக் காலத்தில் ஆங்கிலேயர் இவருக்குத் தொல்லைகள் பல கொடுத்தனர் .இறுதியில் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியார் இவர் மீது குற்றங்கள் பல சாட்டி இவரைப் பதவிநீக்கம் செய்து, தஞ்சை அரியணையில் துல்ஜாஜியால் தத்து எடுக்கப்பட்ட சரபோஜியைக் கி.பி.1798இல் அமர்த்தினர் . இவரே இரண்டாம் சரபோஜி என்று அழைக்கப்படுகிறார்.

இரண்டாம் சரபோஜி ஸ்வார்ட்ஸ் பாதிரியார் என்பவரால் வளர்க்கப்பட்டு அவர் மூலம்

ஆங்கிலத்தை நன்கு கற்றறிந்தார் .மேலும் இவர் தமிழ், தெலுங்கு, உருது, வடமொழி, பிரெஞ்சு, ஜெர்மன், டேனிஷ், கிரேக்கம், லத்தீன், டச்சு ஆகிய மொழிகளிலும் புலமை பெற்றிருந்தார்.

இரண்டாம் சரபோஜி கி.பி.1798 முதல் 1832 வரை தஞ்சையை ஆட்சி புரிந்தார் .ஆங்கிலேயருடன் நல்லுறவு வைத்திருந்தார் .இவர் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதும், அப்போது இந்தியாவின் கவர்னர் ஜெனரலாக இருந்த வெல்லெஸ்லி பிரபு (கி.பி.1798-1805) என்பவருடன் ஓர் உடன்படிக்கை செய்துகொண்டார் .அதன்படி தான் வாழ்ந்து வந்த தஞ்சைக் கோட்டையையும், அதைச்சூழ்ந்த சில பகுதிகளையும் மட்டும் தான் வைத்துக் கொண்டு ஏனைய தஞ்சை மராட்டிய நாடு முழுவதையும் ஆங்கிலேயர்க்கு அளித்துவிட்டார்.

இரண்டாம் சரபோஜி தஞ்சை மராட்டிய மரபின் பழைய வரலாற்றையும், கி.பி .1803ஆம் ஆண்டுவரை தஞ்சையில் நடைபெற்ற நிகழ்ச்சிகளையும் ஆண்டு, தேதி வாரியாக எழுதி அவற்றைத் தஞ்சைப் பிரகதீசுவரர் கோயிலின் தெற்கில் உள்ள மீக நீளமான கல்சுவர் முழுவதிலும் வெட்டச் செய்தார் .இதுவே உலகில் உள்ள மீக நீளமான கல்வெட்டு என்று கருதப்படுகிறது.

உலகின் தலைசிறந்த சிற்பி பிளாக்ஸ்மேன் (Flaksman) என்பவரைக் கொண்டு தம் உருவச் சிலையையும், சுவார்ட்ஸ் பாதிரியாருக்கு நினைவுச் சின்னத்தையும் வெண்பளிங்குக் கற்களில் செதுக்குமாறு செய்தார் .சிற்ப உலகில் சிறந்து விளங்கும் அச்சிற்பங்கள் தஞ்சையில் இன்றும் நின்று நிலவிக் காண்போர் கருத்துக்கும் கண்களுக்கும் நல்ல விருந்தாக அமைந்துள்ளன.

தஞ்சாவூரில் மராட்டிய மன்னர்களால் தொடங்கப்பட்ட சரசுவதிமகால் நூலகத்தில் இரண்டாம் சரபோஜியும், ஸ்வார்ட்ஸ் பாதிரியாரும் வடமொழி, தெலுங்கு, தமிழ் ஆகிய பல்வேறு மொழிகளில் இலக்கியம், இசை, மருத்துவம் போன்ற துறைகளைச் சார்ந்த ஓலைச்சுவடிகள், அச்சில் இடப்பட்ட நூல்கள் ஆகியவற்றை இடம்பெறச் செய்தனர் .மேலும் இரண்டாம் சரபோஜி உலகின் பல்வேறு பாகங்களில் இருந்து ஏறத்தாழ 4000 புத்தகங்களை வாங்கிச் சரசுவதி மகால் நூலகத்தில் இடம்பெறச் செய்தார்.

இரண்டாம் சரபோஜி தமிழ்ப் புலவர்கள் பலரைத் தம் அவையில் உரிய சிறப்புகள் செய்து ஆதரித்தார். கொட்டையூர்ச் சிவக்கொழுந்து தேசிகர் இவருடைய அவையில் தலைமைப் புலவராக வீற்றிருந்தார் .இப்புலவர் பெருமான் இரண்டாம்

சரபோஜி மீது சரபேந்திர பூபாலக் குறவஞ்சி என்னும் நூலைப் பாடியுள்ளார் .தமிழில் உள்ள குறவஞ்சி நூல்களில் திரிகூடராசப்பக்

கவிராயர் எழுதிய திருக்குற்றாலக் குறவஞ்சிக்கு அடுத்தபடியாக, சிறந்து விளங்குவது சரபேந்திர பூபாலக் குறவஞ்சியாகும்.

**மராட்டிய நிர்வாகம்**

மராட்டிய நிர்வாகத்தை மூன்று தலைப்புகளின் கீழ் படிக்கலாம்நிர்வாகம் மத்திய -; வருவாய் நிர்வாகம்; மற்றும் இராணுவ நிர்வாகம் முறை நிர்வாக மராட்டியத்தின் . நிர்வாக மாநிலங்களின் தக்காண பெரும்பாலும் .வாங்கப்பட்டது கடன் நடைமுறைகளிலிருந்து

மராட்டிய மாநிலம் இந்துக்களை உயர் பதவியில் நியமித்து, பாரசீக மொழிக்குப் பதிலாக *மராத்தியை* ஆட்சி மொழியாக ஆக்கியது மாநில சொந்த தங்கள் அவர்கள் . அதாவது அகராதியை கைவினை '*ராஜா வியாகரன் கோஷ்*' அதிகாரப்பூர்வ பயன்பாட்டிற்காக தயார் செய்கிறார்கள் மூன்று நிர்வாகத்தை மராட்டிய . -படிக்கலாம் கீழ் தலைப்புகளின் *மத்திய நிர்வாகம்; வருவாய் நிர்வாகம்; மற்றும் இராணுவ நிர்வாகம்*.

**மத்திய நிர்வாகம்**

- இது தக்காண நிர்வாக பாணியிலிருந்து பெரிதும் ஈர்க்கப்பட்ட ஒலி நிர்வாகத்திற்காக சிவாஜியால் நிறுவப்பட்டது. பெரும்பாலான நிர்வாக

சீர்திருத்தங்கள் அகமதுநகரில் உள்ள மாலிக் பர் சீர்திருத்தங்களிலிருந்து ஈர்க்கப்பட்டன .

- 'அஷ்டபிரதான்' என்று அழைக்கப்படும் எட்டு அமைச்சர்கள் கொண்ட குழுவால் உதவி செய்யப்பட்ட மிக உயர்ந்த மாநிலத் தலைவராக மன்னர் இருந்தார்
- துறை சார்ந்த பணிகள் தவிர, மூன்று அமைச்சர்கள்- பேஷ்வாக்கள், ஷிவா மற்றும் மந்திரி ஆகியோருக்கு விரிவான மாகாணங்களின் பொறுப்பும் வழங்கப்பட்டது.
- பண்டிதராவ் மற்றும் நியாயாதிஷ் தவிர அனைத்து அமைச்சர்களும் தேவைப்படும் போதெல்லாம் போரில் பணியாற்ற வேண்டியிருந்தது.
- சிவாஜி முழு நிலப்பரப்பையும் மூன்று மாகாணங்களாகப் பிரித்தார், ஒவ்வொன்றும் ஒரு வைஸ்ராயின் கீழ். அவர் மேலும் மாகாணங்களை பிராண்ட்ஸ் பின்னர் பர்கானா மற்று ம் தாரஃப்ஸ் எனப் பிரித்தார் . அதன் தலைவர் அல்லது படேல் தலைமையில் இருந்த கிராமம் மிகக் குறைந்த அலகு .

## வருவாய் நிர்வாகம்

- சிவாஜி ஜாகிர்தாரி முறையை ஒழித்துவிட்டு, ரியோத்வாரி முறையைக் கொண்டு வந்தார் , மேலும் தேஷ்முக்ஸ், தேஷ்பாண்டே, பாட்டீல்கள் மற்றும் குல்கர்னிஸ் என்று பிரபலமாக அறியப்பட்ட பரம்பரை வருவாய் அதிகாரிகளின் பதவியில் மாற்றங்களை ஏற்படுத்தினார் .
- நிலத்தில் பரம்பரை உரிமை பெற்ற மிராஸ்தர்களை சிவாஜி கண்டிப்பாகக் கண்காணித்தார் .
- வருவாய் அமைப்பு மாலிக் அம்பர் கதி முறையில் வடிவமைக்கப்பட்டது. இந்த முறையின்படி, ஒவ்வொரு நிலமும் ராட் அல்லது கதி மூலம் அளவிடப்படுகிறது.
- சௌத் மற்றும் சர்தேஷ்முகி ஆகியவை மற்ற வருமான ஆதாரங்களாக இருந்தன: மராட்டியம் அல்லாத பகுதிகளை சிவாஜியின் படைகள் சூறையாடுவதற்கு அல்லது தாக்குவதற்கு எதிராக மராட்டியர்களுக்கு வழங்கப்பட்ட தரத்தில் 1/4 வது பங்கு சௌத் ஆகும் . சர்தேஷ்முகி ராஜ்யத்திற்கு வெளியே உள்ள பகுதிகளில் இருந்து 10 சதவீதம் கூடுதல் வரி விதிக்கப்பட்டது.

## இராணுவ நிர்வாகம்

சிவாஜி ஒரு ஒழுக்கமான மற்றும் திறமையான இராணுவத்தை ஏற்பாடு செய்தார். சாதாரண சிப்பாய்களுக்கு பணமாக வழங்கப்பட்டது, ஆனால் பெரிய தலைவர் மற்றும் இராணுவ தளபதி ஜாகிர் மானியம் (சரஞ்சம் அல்லது மொகாசா) மூலம் ஊதியம் பெற்றார்கள்.

இராணுவத்தில் *காலாட்படை அதாவது மாவலி காலாட்படை வீரர்கள் உள்ளனர்; குதிரைப்படை அதாவது குதிரை சவாரி செய்பவர்கள் மற்றும் உபகரணங்கள் வைத்திருப்பவர்கள்; கடற்படை.*

இராணுவம் மராட்டிய அரசின் கொள்கைகளின் பயனுள்ள கருவியாக இருந்தது, அங்கு விரைவான இயக்கம் மிக முக்கியமான காரணிகளாக இருந்தது. மழைக்காலத்தில் மட்டுமே ராணுவம் ஓய்வெடுக்கிறது, இல்லையெனில் ஆண்டு முழுவதும் பயணங்களில் ஈடுபட்டது.

25% போர்ச் செல்வமான "*பால்-பட்டி*"சேகரிக்க அனுமதிக்கப்பட்ட இராணுவத்துடன் பிண்டரிகள் அனுமதிக்கப்பட்டனர் .

**கலாச்சார அம்சங்கள்**

18 ஆம் நூற்றாண்டு பொருள் வாழ்வில் பொதுவான வீழ்ச்சியைக் கண்டது என்று சில சமயங்களில் பராமரிக்கப்பட்டாலும், அந்தக் காலத்தின் கலாச்சார வாழ்க்கையும் பெரும்பாலும் இழிவுபடுத்தப்பட்டுள்ளது .

உண்மையில், இத்தகைய போக்குகளின் சித்தரிப்புக்கு மிகக் குறைவான நியாயம் இருப்பதாகத் தோன்றுகிறது. கூடடெல்லி, அதன் பொருளாதார நிலை சந்தேகத்திற்கு இடமின்றி சரிந்தது, இந்த சகாப்தத்தில் பல முக்கிய கவிஞர்கள், தத்துவவாதிகள் மற்றும் சிந்தனையாளர்களை உள்ளடக்கியது, ஷா வாலி அல்லாஹ் முதல் மிர் தாகி மிர் வரை. மேலும், பிராந்திய நீதிமன்றங்கள் முக்கியத்துவம் பெறுகையில், அவை இசை, காட்சிக் கலை அல்லது இலக்கியம் என எதுவாக இருந்தாலும், உயர் கலாச்சாரத்தின் முக்கிய புரவலர்களின் செயல்பாட்டை எடுத்துக் கொள்ள முனைகின்றன. அவாத் முதல் பிகானர் மற்றும் லாகூர் வரையிலான ஒப்பீட்டளவில் சிதறடிக்கப்பட்ட மையங்களிலும் இது உள்ளது.தஞ்சாவூர், கலாச்சாரத்தின் நீதிமன்ற மரபுகள் நிலைத்திருப்பதைக் காணலாம். தமிழ், தெலுங்கு, சமஸ்கிருதம் மற்றும் மராத்தி ஆகிய மொழிகளில் உயர்தர இலக்கிய உற்பத்தி தொடர்ந்தது, மராட்டிய ஆட்சியாளர்களில் சிலர் குறிப்பிடத்தக்க நேரடி பங்கைக் கொண்ட கலாச்சார மலர்ச்சிக்கு மராட்டியர்களின் கீழ் உள்ள தஞ்சாவூர் ஒரு சிறந்த எடுத்துக்காட்டு. இதேபோல், 18 ஆம் நூற்றாண்டு தஞ்சாவூரில் தான் இன்று இந்திய பாரம்பரிய இசையின் கர்நாடக பாரம்பரியம் என்று

அழைக்கப்படும் முக்கிய இசையமைப்புகள் தியாகராஜர், முத்துசுவாமி தீட்சிதர் மற்றும் சியாமா சாஸ்திரி போன்றவர்களால் எழுதப்பட்டன. இறுதியாக, அந்த காலகட்டம் தஞ்சாவூரில் ஒரு தனித்துவமான ஓவிய பாணியை உருவாக்கியது, வடக்கிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட கூறுகளை பழைய உள்ளூர் ஜவுளி ஓவியங்களுடன் இணைக்கிறது.

இந்த உயிர்ச்சக்தி முற்றிலும் உயரடுக்கு கலாச்சாரத்துடன் கட்டுப்படுத்தப்படவில்லை. தொடங்குவதற்கு, பல நாடக மற்றும் இசை மரபுகள், அதே போல் அந்தக் காலத்தின் முறையான இலக்கிய வகைகள், நாட்டுப்புற தாக்கங்களை எடுத்து இணைத்தன. அதே நேரத்தில், பிரபலமான இந்து மதம் மற்றும் இஸ்லாம் ஆகியவற்றின் கலவையானது புனித யாத்திரைகள் மற்றும் பண்டிகைகளுடன் தொடர்புடைய கலாச்சார தயாரிப்புகளுக்கு ஒரு குறிப்பிட்ட சுவையை அளித்தது. முந்தைய நூற்றாண்டுகளைக் காட்டிலும், வாரணாசியிலிருந்து ராமேஸ்வரம் வரையிலான முக்கிய மையங்களுக்கு நீண்ட தூர யாத்திரைகளின் பாரம்பரியம் அதிகரித்தது மற்றும் இயக்கம் அதிகரிக்கும்

பொதுவான போக்குடன் பொருந்துவதைக் காணலாம். மொகலாயருக்குப் பிந்தைய அரசுகள் கூலிப்படை வீரர்களையும் இறக்குமதி செய்யப்பட்ட எழுத்தர்களையும் எழுத்தர்களையும் பணியமர்த்துவது வழக்கம். எடுத்துக்காட்டாக, 18ஆம் நூற்றாண்டு ஹைதராபாத்தில், வடக்கிலிருந்து கயஸ்தர்கள் அதிகாரத்துவத்தில் அதிக எண்ணிக்கையில் பணியமர்த்தப்பட்டனர், அதே சமயம் மைசூரில் மகாராஷ்டிர பிராமணர்களுக்கு 1720 களின் முற்பகுதியில் நிதி அலுவலகங்கள் வழங்கப்பட்டன. இசைக்கலைஞர்கள், எழுத்துக்கள் மற்றும் கலைஞர்களின் இயக்கம் இந்த எழுத்தர் வகுப்புகளை விட குறைவாக இல்லை என்பது வெளிப்படையானது. ஒரு பெரிய புதிய அரசியல் மையம் உருவானபோது, அது திறமையாளர்களை வெகுவேகமாக ஈர்த்தது, ரஞ்சித் சிங்கின் சான்று லாகூர். இங்கே, உயர்தர பாரசீக இலக்கியம் தயாரிக்கப்பட்டது, ஆனால் பஞ்சாபியில் இலக்கிய வெளியீட்டின் விலையில் அல்ல. அதே நேரத்தில், கட்டிடக்கலை மற்றும் ஓவியம் ஆகிய துறைகளில் புதிய முன்னேற்றங்கள் காணப்பட்டன. வடக்கே, காங்க்ராவின் சமஸ்தானம் ஒரு முக்கியமான புதிய ஓவியப் பள்ளியை வளர்த்தது, இது பெரும்பாலும் வைஷ்ணவக் கருப்பொருள்களுக்கு அர்ப்பணிக்கப்பட்டது.

உண்மையில், இந்தியாவின் பாரம்பரிய கலாச்சாரத்தின் ஒரு பகுதியாக இன்று புரிந்து கொள்ளப்பட்டவற்றின் எஞ்சியிருக்கும் கார்பஸின் வியக்கத்தக்க பெரிய விகிதம் 17 மற்றும் 18 ஆம் நூற்றாண்டுகளுக்குக் காரணம்.

**சரஸ்வதி மகால் நூலகம்**

வரலாற்றுப் பெருமை கொண்ட சரஸ்வதி மகால் நூலகம் உலகில் பழமை வாய்ந்த நூலகங்களில் முதன்மையான வாட்டிகன் நூலகத்திற்கு அடுத்தபடியாக இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளது இந்நூலகம் .13, 14ஆம் நூற்றாண்டுகளிலேயே இருந்துள்ளது என்று டாக்டர் பர்னல் , வவேணுகோபாலன்., பி கிரி.எஸ்.பி. .போன்ற சரித்திர ஆய்வாளர்கள் கருதுகின்றனர்

அதாவது, முத்தரையர் காலத்திலேயே காலூன்றிய விசயாலய சோழன் புதல்வன் ஆதித்தசோழன் காலத்தில் நிலைபெற்று, பராந்தக சோழன் காலத்தில் பல கிளைகளோடு நூலகம் வளர்ந்து விளங்கியுள்ளது . இதன்பிறகு தஞ்சையில் ஆட்சி செய்த பிற்காலச் சோழர்களும், நாயக்க மன்னர்களும், மராட்டிய மன்னர்களும் இந்நூலக வளர்ச்சிக்குப் பெரிதும் துணைநின்றுள்ளனர்.

சோழர் காலத்தில் தமிழகக் கோயில்களைச் சார்ந்தே சரஸ்வதி பண்டாரங்கள் ) நூலகங்கள் (அமைந்திருந்தன .

இதன் காரணமாக அக்காலத்தில் நூலகங்கள் சரஸ்வதி பாண்டார் என்று அழைக்கப்பட்டது .இந்நூலகம் பல நூறு ஆண்டுகளுக்கு முந்தியது என்றாலும் மிக அதிகமாக விரிவுபடுத்தி சிறப்புறச் செய்த பெருமை தஞ்சை இரண்டாம் சரபோஜி) 1798-1832) மன்னரையே சாரும்.

இம்மன்னருக்குப் பின் பட்டம் பெற்ற அவர் மகன் சிவாஜி இறந்ததும் அவருக்கு மகப்பேறு இல்லாத காரணத்தால் அவருடைய மனைவி காமாட்சிபாய் தஞ்சை ஆட்சியை ஏற்றுக் கொண்டார் .இந்நிலையில் வாரிசுக்காகக் காமாட்சி பாய் எடுத்துக் கொண்ட சுவிகார புத்திரனை ஆங்கில அரசு ஏற்றுக் கொள்ளாததால் சரஸ்வதி மஹால் உட்பட அரண்மனை சொத்துக்கள் கி.பி.1861 டிசம்பரில் மாவட்ட ஆட்சியர் நிர்வாகத்திற்குட்பட்டன.

பிறகு காமாட்சிபாய் நார்டன் என்னும் வழக்குரைஞர் மூலம் கவர்னர் ஜெனரலுக்கும் பின், பிரிவி கவுன்சிலுக்கும், பாராளுமன்றத்திற்கும் விண்ணப்பம் செய்ததன் விளைவாக அரசு சொத்துக்கள் விக்டோரியா மகாராணியின் ஆணையின் காரணமாகத் திரும்பிக் கிடைக்கப் பெற்றன .கடைசி ராணியின் மறைவிற்குப் பின் அரண்மனைவாசிகளால் சரஸ்வதி மஹால் நூலகம் அரசு தொடர்புடைய ஒரு காப்புக் குழுவிடம் 1918இல் ஒப்படைக்கப்பட்டது .நிர்வாகத்தினை ஏற்றுக் கொண்ட குழு

இந்நூலகத்தைப் போற்றி வளர்த்த இரண்டாம் சரபோஜி மன்னரைப் போற்றும் விதமாக இந்நூலகத்திற்குத் தஞ்சை மன்னர் சரபோஜி சரஸ்வதி மஹால் நூலகம் எனப் பெயரிட்டது .இதை நினைவு கூரும் விதமாக இவ்வாண்டு இந்நூலகம் தனது நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுகிறது .1988இல் ஒரு லட்ச ரூபாய் வைப்பு நிதியோடு கூடியதாக இந்நூலகத்தில் காப்புக்குழு அமைக்கப்பட்டது .இவ்வாறு நிலைய வைப்பு நிதியுடன் தமிழக, இந்திய அரசாலும் அளிக்கப்படும் மானியங்களையும் பயன்படுத்தி சுவடிகளைப் பாதுகாத்தும், அரிய சுவடிகளை நூல்களாகப் பதிப்பித்தும் வெளியிட்டு நூலகம் வளர்ச்சியுறுகிறது .இது ஒரு பொது நூலகம் போல் அல்லாது ஓர் ஆய்வு நூலகமாகவே திகழ்கிறது.

**நூலகத்தில் உள்ள நூல்கள் எவ்வளவு?**

இந்நூலகத்தில் உள்நாட்டு மொழிகள் மட்டுமின்றி வெளிநாட்டு மொழிகளான ஆங்கிலம், பிரெஞ்சு, ஜெர்மன் போன்ற மொழிகளில் சுமார் 4500 நூல்களை மன்னர் சரபோஜி சேகரித்து வைத்துள்ளார் .பல நூல்களில் இவர் கையப்பங்களுடன், அந்நூல்களில் வாங்கிய குறிப்புகள் உள்ளன .இவரால் படிக்கும்போது சிறப்புச் செய்திகளின் பக்கத்தில் கோடிட்டுக் குறிப்புகளும் எழுதப்பட்டுள்ளன .

சரபோஜி காசி யாத்திரை சென்றபோது அங்கிருந்து சமஸ்கிருதச் சுவடிகளைக் கொண்டு வந்துள்ளார்.

இம்மன்னர் அரசாண்ட காலத்தில் எழுதப்பட்ட ஆவணங்களில் தஞ்சாவூரைப் பற்றியும், இங்குள்ள சமூகப்பொருளாதாரச் சூழ்நிலைகளைப் பற்றியும் தெளிவாக அறிந்து கொள்ளமுடிகிறது .சரஸ்வதி மஹால் நூலகத்தில் ஓலையிலும் காகிதத்திலும் எழுதப்பட்ட சுவடிகள் சுமார் 47,000 மேல் உள்ளன .அதில் வடமொழிச் சுவடிகள் 39,000, தமிழ்ச் சுவடிகள் 4,200, மராத்தி ஓலைச் சுவடிகள் 3000, தெலுங்குச் சுவடிகள் 800 போன்றவை குறிப்பிடத்தக்கன .பல மொழிகளில் உள்ள இச்சுவடிகளை இடையீடின்றி படியெடுக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு, தொகுக்கப்பட்ட சுவடிகளை எளிதாகக் கையாள அனைத்துச் சுவடிகளுக்கும் உரிய அட்டவணை சரபோஜி காலத்தில்தான் முதல் முதலாகத் தயாரிக்கப்பட்டுள்ளது.

ஓலைச் சுவடிகளுக்கான அட்டவணை ஓலைச்சுவடியில் தெலுங்கு மற்றும் தமிழ் எழுத்துக்களிலும் காகிதச் சுவடிகளுக்கான அட்டவணை, தேவநாகரி எழுத்துக்களில் காகித நோட்டுப் புத்தகத்திலும் எழுதப்பட்டுள்ளது .இத்துடன் கல்லால் ஆன தேவநாகரி எழுத்துக்களைப் பயன்படுத்தியும், மரத்தாலான படங்களைக் கொண்டும் நூல்கள் அச்சிடப்பட்டுள்ளன .

இதில் அச்சான நூல்களில் சில குமார சம்பவ சம்பூ, தர்க்க சங்கிரஹம், முக்தாவளி, அமரகோசம் போன்றவையாகும் . இவை இந்நூலகத்தில் காணக்கிடைக்கின்றன.

நூலகச் சுவடிகளில் சித்த மருத்துவம், யுனானி, ஆயுர்வேதம், அலோபதி போன்ற மருத்துவ முறைகளைக் கூறும் சுவடிகளும் அடங்கும் .இச்சுவடிகளைப் பாதுகாத்து வரும் இந்நூலகம் சரபேந்திர வைத்திய முறைகளையும் மற்றும் பிற இலக்கியச் சுவடிகளையும் 1949ஆம் ஆண்டு முதல் சென்னை அரசின் அங்கீகாரம் பெற்று வெளியிடத் தொடங்கியது .இதற்கென 21 வல்லுநர்களை அரசு நியமித்தது .அன்று முதல் வெளியீட்டுப் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது .இந்நூலகம்; நீரிழிவுச் சிகிச்சை, சிரோநீராகச் சிகிச்சை, குன்மரோகச் சிகிச்சை, வாதரோகச் சிகிச்சை, சித்த வைத்திய முறைகள் ஆகியவற்றைச் சரபேந்திர வைத்திய ரத்னாவளி என 30க்கும் மேற்பட்ட மருத்துவ நூல்களை வெளியிட்டு விற்பனை செய்து வருகின்றது .இவ் வைத்திய நூல்களைப் பாடல்களில் வடித்துத் தந்த பெருமை மன்னர் காலத்து அவைதனில் விளங்கிய கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர், வேலாயுத வாத்தியார், திருவேங்கடம் பிள்ளை, வெங்கடாசலம் பிள்ளை, சுப்பராயக் கவிராயர் முதலான புலவர் பெருமக்களைச் சாரும்.

இந்நூலகம் ஊரின் மையத்தில் தஞ்சை அரண்மனை உள்ளே உள்ள பெரிய கட்டடத்தில் உள்ளது .இதில் சரபோஜி இருபத்திரண்டாயிரத்திற்கும் அதிகமான பல பொருள்களைப் பற்றிய கையெழுத்துப் பிரதிகளைச் சேகரித்து வைத்துள்ளார் .இதன் காரணமாக உலகிலேயே கையெழுத்துப் பிரதிகள் அதிகம் உள்ள நூலகங்களில் இதுவும் ஒன்றாகத் திகழ்கிறது .இவற்றில் பெரும்பாலும் சமஸ்கிருத நூல்களே மிகுதி ஆகும் .சரபோஜிக்கு முன்னர் இதுபோன்று பெரிய அளவில் நூல்களையும் ஓலைச் சுவடிகளையும் சேகரித்து வைத்தவர் மாமன்னர் அக்பர் . இவர் நூலகத்தில் இருபத்தி நான்காயிரம் தொகுப்புகள் இருந்தன .இதைப் போலவே மன்னர் சரபோஜி சேகரித்தவையும் இணையாக உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

**சரபோஜி நூலகத்தில் உள்ள அரிய நூல்கள்**

சரஸ்வதி மகால் நூலகச் சுவடிகள் ஓர் அரிய பொக்கிஷம் என்றால் மிகையில்லை .1719ஆம் ஆண்டு முதல் எழுதப்பட்ட கம்பராமாயணத்தின் ஏழு காண்டங்கள் அடங்கிய ஓலைச்சுவடியையும், பஞ்சபட்சி சாஸ்திரம் மிகச்சிறிய ஓலைச்சுவடியில் எழுதப்பட்டுள்ளதையும், பர்மிய எழுத்தில் உள்ள சமஸ்கிருதச் சுவடியையும், வங்க எழுத்தில் எழுதப்பட்ட தத்துவ சிந்தாமணி என்ற

சமஸ்கிருதச் சுவடியையும், ஏகாம்பர புராணம் என்ற சமஸ்கிருதச் சுவடி ஒரிய எழுத்தில் உள்ளதையும் இங்குக் காணமுடிகிறது.

**வண்ண ஓவியங்கள்**

பெர்தோஷி எழுதிய பாரசீக இலக்கியம் ஷாஹநாமாவும், முகமதிய கவி அம்பர் ஹ§சேனி ஸ்ரீபகவத் கீதைக்கு எழுதிய மராத்திய விரிவுரையும், கி.பி.1784இல் வெளிவந்த ஆங்கில அறிஞர் சாமுவேல் ஜான்சன் அவர்களுடைய ஆங்கில அகராதியின் ஐந்தாம் பதிப்பும், பிரபோத சந்திரோதயம் நாடக விளக்கமும், ரிக் வேதச் சுவடிகளின் தலைப்புப் பக்கங்களில் தீட்டப்பட்ட திருவிளையாடல் சிவபுராணக் கதைகள் 64 படங்கள் மூலம் விவரிக்கப்பட்டு உள்ளதையும் காண முடிகிறது . இப்படத்தின் நீளம் ஏறத்தாழ 40 அடியாகும் .சீன நாட்டின் தண்டனை முறைகள் ஆங்கிலப் படங்களில் விளக்கத்துடனும் கஜினி முகமதுவின் வாழ்க்கைப் படமாகச் சித்தரிக்கப்பட்ட நூலும் இங்கு உள்ளது . இந்நூலகத்தில் உள்ள வண்ண ஓவியங்கள் ஒவ்வொன்றும் காணக் கிடைக்காதவை.

சரபோஜி காலத்தில் இருந்த சிப்பாய்களின் உடைகள் பலவிதமான வண்ணச் சீருடைகளாக உள்ளன . இச்சீருடைகள் பதினேழு வகையான வண்ண

ஓவியங்களில் உள்ளன .காசியில் உள்ள 64 குளிக்கும் கட்டடங்களும், கி.பி .1796ஆம் ஆண்டு இந்தியாவின் வரலாற்றுத் தலங்களும் சித்திரமாகத் தீட்டப்பட்டுள்ளன . சரபோஜி வளர்த்த ராஜாளி பறவை முதல் பலதரப்பட்ட பறவைகள் அரசு ஓவியர்களால் கி.பி.1800இல் வரையப்பட்ட படங்களும், சார்லஸ்-லி-புரூன் என்ற பிரெஞ்சு ஓவியரால் 18ஆம் நூற்றாண்டில் தீட்டப்பட்ட முக ஒற்றுமைப் படங்களும் பலரையும் கவரும் வண்ணம் உள்ளன . ஒட்டகம், சிங்கம், குதிரை, பூனை, குரங்கு, மாடு, கழுகு, நரி, கிளி போன்றவற்றின் முகங்களை வரைந்து அவற்றுக்கு ஏற்ப உள்ள மனித முகங்களை பிரெஞ்சு ஓவியர் மிக அழகாக வரைந்துள்ளார் .இங்குள்ள ஓவியத்தில் புனித வேதாகமம், பலவித மீன்கள் மற்றும் தாவரங்களின் படங்களும் உள்ளன.

அசுவ சாஸ்திரம் என்னும் குதிரை வைத்தியம் பற்றிய காகிதச் சுவடிகள், கஜ சாஸ்திரம் என்னும் யானை வைத்தியத்திற்கான காகிதச் சுவடிகள் வண்ணப் படங்களுடன் இங்கு இடம் பெற்றுள்ளன .பல்வேறு யானைகளைப் பற்றிய விளக்கங்களைப் பாலகாப்பிய முனி என்பவர் மராத்தி, சமஸ்கிருதம் ஆகிய மொழிகளில் தந்துள்ளார் .இதற்கான விளக்கங்களைத் தமிழில் இந்நூலகம் வெளியிட்டுள்ளது .இதேபோல அசுவ

சாஸ்திரம் எனும் நூலில் குதிரைகளின் வண்ண ஓவியத் தொகுப்பு உள்ளது .இந்நூலின் ஆசிரியர் நகுலர் . இந்நூலையும் இந்நூலகம் வண்ணப் படங்களுடன் வெளியிட்டுள்ளது .இருநூறு ஆண்டுகளுக்கு முன்னர் உருவாக்கப்பட்ட இந்த அரிய சுவடிகள் நூலகத்தில் கண் கவர் வண்ணக் கலவை மங்காத ஓவியமாய்த் திகழ்கின்றது.

**டேனியல் வண்ண ஓவியங்கள்**

இந்தியாவில் உள்ள முக்கிய இடங்களான திருச்சி மலைக்கோட்டை, மதுரை அரண்மனை, டில்லி ஜும்மாமசூதி, தஞ்சாவூர் கோவில் போன்ற இடங்கள், லண்டன் மாநகரின் காட்சிகள், வில்லியம் மற்றும் தாமஸ், டேனியல் சகோதரர்களால் வரையப்பட்ட வரைபடங்களின் அச்சுப்பிரதிகள், பிரேசர் என்னும் ஓவியர் வரைந்த இமயமலைப் பகுதிகளின் படங்களின் பிரதிகள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

சரபோஜி மன்னரின் அச்சுக் கூடத்தில் அச்சிடப்பட்ட )கல் அச்சு (நூல்கள், மோடி காகிதச் சுவடி, புராண ஓவியங்கள், இசை வரைவு நூல்கள்) Books of Musical Notation) முதலியனவும் மற்றும் 1779இல் வெளியிடப்பட்ட மலபார் அகராதியும், உலக வரைபடத் தொகுப்பும், தஞ்சை மராட்டிய மன்னர்களுடைய பட ஓவியங்களும் நம்

கவனத்தை கவரும்படியாக உள்ளன .18ஆம் நூற்றாண்டில் உருவான யசோதை பாலகிருஷ்ணன், சமர¢த்த ராமதாசர், சரஸ்வதி, ஆதிசங்கரர் ஆகியோரின் படங்களும் தஞ்சை மரபுப் படங்களாக இங்குக் காட்சி அளிக்கின்றன.

**கண்நோய் அறுவை ஆவணம்**

நூலகத்தை ஒட்டியிருந்த தன்வந்திரி மகாலில் நடைபெற்ற கண்நோய் அறுவை சிகிச்சை பற்றிய ஆவணங்களுடன் அங்கு தயாரிக்கப்பட்ட மருந்துகள் பற்றிய விவரங்களும் உள்ளன .கண்நோய் குறித்த ஆவணத்தில் நோயுற்றவர் கண், வண்ணத்தால் வரையப்பட்டு ஆவணப்படுத்தப்பட்டுள்ளது . இக்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ள பொருட்களில் மன்னர் காலத்தில் தயாரிக்கப்பட்ட கனகசுந்தரம், சிந்தாமணி, ரஸபூபதி, பஞ்சாமிர்த பற்பொடி என்னும் நான்கு மாத்திரைகள் அடங்கிய பெட்டியும் ஒன்று . அக்காலத்தில் பல மருந்துகள் தன்வந்திரி மகாலில் தயாரிக்கப்பட்டதாகக் கூறப்படினும் இன்று நமக்குக் கண்கூடாகக் கிடைக்கும் மாத்திரைகள் இவை நான்குமாகும் .இம்மாத்திரைகளின் ஒரு புறம் மாத்திரையின் பெயரும் மறுபுறம் மாத்திரை தயார் செய்த சக ஆண்டும் பொறிக்கப்பட்டுள்ளன.

இவற்றினைத் தயார் செய்த ஆங்கில ஆண்டுகள் கி.பி.1808, 1812 என அறியமுடிகிறது .இது போன்ற அரிய மருந்துகளைத் தயார் செய்யப் பயன்படுத்திய மூலிகை வண்ணப் படங்கள், இயல்பான தோற்றத்துடன் வண்ணம் குறையாமல் அவற்றிற்கான விளக்கங்களுடன் உள்ளன . இவற்றுடன் மன்னரின் மேற்பார்வையில் எழுதப்பட்ட ஓவியங்களையும், சுவடிகளில் எழுதி வைக்கப்பட்ட வைத்தியக் குறிப்புகளையும், நூலகத்தில் இன்றும் காணமுடிகிறது .மருத்துவச் சுவடிகள் மட்டுமின்றி 500க்கும் மேற்பட்ட வைத்திய நூல்களையும் மிகுந்த பொருட் செலவு செய்து சரபோஜி மன்னர் திரட்டி வைத்துள்ளார் .இந்நூல்கள் 18, 19ஆம் நூற்றாண்டுகளில் லண்டன், எடின்பரோ, நியூயார்க் முதலிய இடங்களில் அச்சானவை .இவற்றைத் தவிர பிரதாப்சிங், இரண்டாம் சரபோஜி ஆகியோருடைய செப்புப் பட்டயங்களும் இங்குக் காட்சியில் உள்ளன.

## இராமநாதபுரம் சேதுபதிகள்

### சடைக்கத்தேவர் (1605-1622)

சங்ககாலம் முதல் கடல் வாழ்வில் -சிறந்திருந்த தமிழகத்து மக்கள் , தஞ்சையைத் தலைநகராகக் கொண்ட சோழர்களின் காலத் - திற்குப் பிறகு, கட்ல் வாழ்வில் நாட்டம் காட்டாது போனதினால். ஐரோப்பிய நாட்டவர் கட்ல்வழியாக, எந்தவித எதிர்ப்புமின்றித் தமிழகத்தில்

நுழைய வாய்ப்பு ஏற்பட்டது. தமிழகத்து மன்னார் களைக் கேட்காமலேயே, இந்த ஐரோப்பிய நாட்ட்வர் , தமிழகச் துக் - குக் கடற்பகுதிகளில் குடியிருப்புக்களை ஏற்படுத்திக் கொண்டு அப்பகுதிப் பரதவர் இனத்து மக்களை மதம் மாற்றி, தங்கள் இச்சை போல் அதிகாரம் செலுத்தி வரலானார்கள் . மதத்துறையிலும் , அரசியல் துறையிலும் , கடற்கரைப் பகுதியில் இந்த ஐரோப்பியர் வலிமை பெற்றது மட்டுமின்றி, கடல் வாணிபம் , முத்துக்குளிப்பு போன்ற பொருளாதாரத் துறைசளிலும் ஆதிக்சம் செலுத்தலானார் கள் . இச்சூழ்நிலையில்தான் , வளர்ந்துவரும் அன்னியரின் ஆதிக்க த் - திற்கு அணை போட வேண்டி, மதுரை முத்துகிருஷ்ணப்ப நாயக்கர் (1601-1609), இராமனாதபுரத்தில் மறவர் ஆட்சியைத் தோற்று-' வித்தார் . அன்னியரின் ஆதிக்கம் மட்டுமின்றி, இராமனாதபுரப்பகுதி யில் சட்டம் ஒழுங்கு கெட்டு, கொள்ளையர்களும் , ஈீயவர்களும் , இராமேசுவரம் செல்லும் புனிதப் பயணிகளுக்குத் தொல்லைகள்நல்கி வந்தார்கள் . மதுரை நாயக்கர் இக்குழப்பங்களுக்கு முடிவுகட்ட எண்ணினார் . மறவர் மையில் அமைதி ஏற்படுத்த, மறவர் தலைவர் சடைக்கத் தேவர் என்பவரை மதுரை நாயக்கர் தேர்வு செய்து, அவருக்குச் சேது பகுதியை ஆண்டுவர, அனுமதி வழங்கினார் . சடைக்கத் தேவர் புகளூரைத் தலைநகராகக்

கொண்டு 1605 முதல் 1628 வரை ஆட்சி செய்து உள்நாட்டில் தீயசக்திகளை ஒடுக்கி, புனிதப் பயணத்தைப் பாதுகாப்பாக மாற்றியது மட்டுமின்றி, இராமேசுவரம் இராமநாதசாமி கோவிலுக்கும் பலமானியங்களை

தாராளமாக வழங்கினார்கள் .

**கூத்தன் சேதுபதி (1622-1636)**

சடைக்கத் தேவருக்குப் பிறகு அவரது மகன் கூத்தன் சேதுபதி 14 ஆண்டுகள் , இராமனாதபுரச் சமையை ஆண்டு வந்தார் . இவரும் கதுந்தையைப் போன்று, மதுரை நாயக்கருக்குக் கட்டுப்பட்டு ஆட்சி செய்து வந்தார் . இராமேசுவரம் கோயிலுக்குத்தொடர்ந்து மானியங்கள் கொடுத்து வரப்பட்டன. இவர் ”ஆண் வாரிசு இன் ற ி மரணமடைந்தார் .

**முதலாம் சடைக்கத்தேவர் என்ற தளவாய் சேதுபதி (1636-1645).**

கூத்தன் சேதுபதஇிக்குப்பிறகு 11ம் சடைக்கத்தேவர் சேதுபதியானார் . இந்தச் சடைக்கத்தேவர் , கூத்தன் சேதுபதியின் தத்துப்பிள்ளையாக இருக்கலாம் எனச் இலர் கருதுகிறார்கள் . வேறு சிலர் , அவரின் சொந்தப்பிள்ளையே எனவும் கருதுசிறார்கள் . குறிப்பாக, மறவர் நாட்டு வரலாற்றிற்தச் சிறத்த நாட்டுப்புறப் பாடலாக விளங்கும்

“*இராமப்பய்டயன் அம்மானை”? சடைக்கத் தேவரைக் கூத்தன் சேதுபதியின் சொந்தமகன் என்றே கூறுகிறது.

கூத்தன் சேதுபதிக்கு “தம்பி” என்ற மற்றொரு மகனும் இருந்கூர் . இத்தம்பி, கூத்தன் சேதுபதியின் ஆசைநாயகியின் மகன் என்ற ஒரு கருத்தும் நிலவுகிறது. £* தனக்கு அரசுரிமை கிடைக்காகுதால் தம்பி, மதுரை இருமலை நாயக்கரிடம் முறையிட்டு, தானே உண்மையான வாரிசு; எனவே தன்னையே சேதுபதியாக அங்கீகரிக்க வேண்டுமென்று மன்றாடிக் கேட்டுக் கொண்டார் .

இரண்டாம் சடைக்கத்தேவர் , மதுரை நாயக்கருக்கு ஒழுங்காகக் கப்பம் கட்டி வரவில்லை. மேலும் சடைக்கத் தேவர் , மறவர் பகுதி மக்களால் பெரிதும் போற்றப்பட்டவராக விளங்கினார் . இதனால் இருமலைநாயக்கர் , தம்பிக்கு ஆதரவு கொடுத்து, சடைக்கத் தேவரைப் பதவி நீக்கம் செய்யத் தனது தளபதி இராமப்பய்யனின் தலைமையில் படைகளை அனுப்பினார் . இராமப்பய்யனுக்குத் துணைத் தளபதியாக, ரெங்கநாத நாயக்கரும் உடன் சென்றார் . ஆரம்பத்தில் மதுரை நாயக்கர் படைகள் தோல்வியைத் தழுவினாலும் , இறு- தியில் , வெற்றி கண்டு, இராமேச்வரத்தில் பதுங்கிய சடைக்கத் தேவரைச் சிறைப்பிடித்து, மதுரைக்குக் கொண்டு

வந்தார்கள் . — ஐரோப்பியர்களும் இப்போரில் பங்கு கொண்ட இனால் , இப்போர் முக்கியமானதாகக் சருதப்படுகிறது. மதுரை நாயக்கர் படை சளைத் தமிழகத்துக் கடற்கரைப் பகுதியிலுள்ள போர்ச்சுக்சியர்களும் , சேதுபதியின் படைகளை டச்சுக்காரர்களும் ஆதரித்துப் போரில் ஈடுபட்டார்சள் . போர்ச்சுக்கசியர் இருமலைநாயக்கருக்கு ஆதரவளித்ததால் , அவர்களின் மதப்பணிசளுக்கு ஆதரவு கொடுக்கப்பட்டது. எடைக்கதிதேவரிளைப்படுத்தப்பட்ட பிறகு, தம்பி, தனலை ஞாதபுரம் சேதுபதியானார் ஆனால் தம்பியினால் சிறந்த முறையில் ஒழுங்கான ஆட்சியை நட்த்த இயலவில்லை. குடிமக்களின் ஆதரவு இவருக்குக் கிடைக்கவில்லை. மேலும் சடைக்கத் தேவரின் நெருங்கிய உறவினர்களாகிய இரகுநாத தேவரும் , நாராயண தேவரும் , தம்பியை எதிர்த்துக் கலகம் செய்தார்கள் . இதையெல்லாம் அறிந்த இருமலை நாயக்கர் , தம்பி மீண்டும் உதவி கேட்க வந்த பொழுது, மறுத்துரைத்து, சிறையிலிருந்து சடைக்கத்தேவரை விடுவித்து, அவரை மீண்டும் இராமனாதபுரத்துச் சேதுபதியாக்கினார் . சடைக்கத் தேவரும் , ஐந்து ஆண்டுகளுக்குச் சீரும் சிறப்புடன் ஆட்சி நட்த்தியது, என்றாலும் 1645ம் ஆண்டு இவர் கொலைசெய்யப்பட்டார் .

சடைக்கத்தேவர் கொலையுண்ட் பிறகு, இராமனாதபுரத்து மறவர் மையை மூன்றாகப் பிரித்து, வைகளை, இரகுநாத தேவர் , குணக்கதேவர் , தம்பி ஆகிய மூவருக்கும் , படுர்ந்து, இருமலை நாயக்கர் நல்கினார் , என்றாலும் , தண்க்கதேவரும் , தம்பியும் அடுத்சடுத்து இறந்து விட்டதால் , இராமநாதபுரம் முழுமைக்கும் இரகுநாத சேதுபதி மன்னரானார் .

**இரகுநாத சேதுபதி என்ற திருமலை சேதுபதி (1645- 670)**

மதுரை திருமலைநாயக்கருக்குக் கடைசிவரை உறுதுணையாயிருந்து, பகைவர் படையெடுப்பிலிருந்து மதுரை அரசைக் காத்தருளிய இரகுநாத சேதுபதியே இராமனாதபுரத்தை ஆண்ட் சேதுபதிகளுள் தலைசிறந்தவராகக் கருதப்படுகிறார் . இவர் தஞ்சை நாயக்கரைத் தோற்கடித்து, அவரிடமிருந்து, மன்னார்கோவில் , தேவகோட்டை, அறந்தாங்கி, திருவாரூர் ஆகிய பகுதிகளைக் கைப்பற்றினார் . மதுரைமீது படையெடுத்துத் 'திண்டுக்கல் வரை வந்துவிட்ட மைசூர் படைகளைத் தடுத்து நிறுத்தி, புறமுதுகிட்டு ஓடச் செய்து, மதுரை திருமலை நாயக்கர் அரசைக் காப்பாற்றிய பெருமை இவருக்கு உண்டு. மைசூர் படைகளின் மூக்கறுப்புப் போர் முறியடிக்கப்பட்டு, அவர்கள் மூர்க்கத்தனமாகக்கைக்சொண்ட முறையிலேயே

அவர்களின் மூக்குகளை வெட்டி விரட்டி அடித்ததில் மறவர் படைக்குப் பெரும் புகழ் உண்டு. தக்க சமயத்தில் தனக்கு உதவிய இரகுநாத-சேதுபதிக்கு, தனது திருப்புவனம் , இருச்சுளி, பள்ளிமடம் ஆகிய பகுதிகளை விட்டுக் கொடுத்தது மட்டுமின்றி, **திருமலை சேதுபதி" என்னும் விருதுப் பெயரையும் நல்கித் -திருமலைநாயக்கர் பாராட்டினார் . மேலும் இரகுநாதத்தேவர் இனி மதுரைக்குக் கப்பம் கட்டி வரத் தேவையில்லை என்று விலக்களிக்கப்பட்டதால் , ஏறத்தாழ, ஒரு தனி மன்னராகவே இவர் இராமனாதபுரத்தை ஆண்டு வந்தார். இருமலைநாயக்கர் இறந்தபிறகு இரகுநாதத்தேவரின் போக்கில் மாற்றம் ஏற்படலாயிற்று. இதற்கு 8 காரணங்களைக் கூறலாம் .

முதலாவதாக, திருமலை நாயக்கர் காட்டிய அன்பையும் , மரியாதையையும் , இவருக்குப் பின்வந்தோர் காட்டத் தவறி விட்டார்கள் .இரண்டாவதாக, இனி யாருக்கும் கட்டுப்படாமல் , தானே :தனியாட்சி நடத்த நாட்டம் கொண்டிருக்கலாம் . எனவே மதுரை சொக்கநாத நாயக்கருக்கு அடிபணிய இரகுநாதத்தேவர் மறுத்ததால் , சொக்கநாத நாயக்கர் மறவர் நாட்டின்மீது படையெடுத்து, திருப்பத்தூர் , புதுக்கோட்டை, மானாமதுரை, காளையார் கோவில் ஆகிய பகுதிகளைக் கைப்பற்றிக்கொண்டார் .

என்றாலும் , மறவர் படைகளின் கொரில்லாத் தாக்குதல்களை மதுரை நாயக்கர் படைகள் வெற்றி கொள்ள முடியாமல் தோல்வியுற்றுத் திரும்பின. இதனால் இரகுநாதத்தேவரை ஒடுக்கப் பாடம் கற்பிக்க வேண்டுமென்னும் சொக்கநா தரின் விருப்பம் ஈடேறாமல் போய்விட்டது. 1670 வரை இரகுநாதத்தேவார் தன்னிச்சையாக ஆண்டுவிட்டுக் காலமானார் .

இரகுநாதத்தேவர் கற்றறிந்த சான்றோர் பலரை ஆதரித்தது மட்டுமின்றி, தானே கற்றறிந்த புலவராக விளங்கினார் . தமிழ் உலகு அறிந்த தாயுமானவர் சுவாமிகள் தனது இறுதி நாட்களை இராமனாதபுரத்தில்தான் கழித்துவந்தார் . அமூய சிற்றம்பலக் கவிராயர் அமிர்த. கவிராயர் போன்ற தமிழ்ப்புலவர்கள் இச்சேதுபதியால் ஆதரிக்கப்பட்டவர்கள் . தமிழ்ப் புலவர்களை மட்டுமின்ற தெலுங்குக் கவிஞர்களையும் இவர் ஆதரித்தார் . இவர் “ஹிரண்ய கர்ப்பகம் ”” என்னும் வேள்வியைச் செய்ததோடு மட்டுமின்றி, இராமேசுவரம் இரண்டாவது சுற்றுப் பிரகாரத்தையும் கட்டினார் .

**கிழவன் சேதுபதி என்னும் இரகுநாத சேதுபதி (1671-1710)**

இரகுநாத சேதுபதி இறந்த பிறகு அவரது மருமகன் சூரியத்தேவர் அடுத்த சேதுபதியானார் . அதுசமயம் மதுரை

நாயக்கராகச்சொக்கநாத நாயக்கரும் , தஞ்சை நாயக்கராகச் செங்கமலதாசும் ஆண்டு கொண்டிருந்தார்கள் . இந்த இரண்டு நாயக்கர் மன்னர்களுக்கும் இடையே ஏற்பட்ட் போட்டியில் , சேதுபதி சூரியத்தேவர் , தஞ்சை நாயக்கருக்கு ஆதரவாக இருந்தார் . எனவே தஞ்சைக்குச் சென்ற சூரியத் தேவரை, மதுரை தளவாய் வெங்கடகிருஷ்ணப்பன் கைது செய்து, திருச்சிக்குக் கொண்டு வரும் வேளையில் , பகைவர்களால் சூரியத்தேவர் படுகொலை ,செய்யப்பட்டார் . சூரியத்தேவருக்குப் பிறகு, அவரது தம்பி அத்தணத்தேவர் என்பவர் சேதுபதியானார் . இவரும் மூன்றுமாத கால, ஆட்சிக்கு பிறகு காலமாகிவிட்டார் .

சூரியத்தேவருக்கும் , அத்தணத்தேவருக்கும் ஆண்வாரிசு இல்_லாததால் , இராமனாதபுரம் அரசியலில் ஓர் வெற்றிடம் ஏற்பட்டது. இதைப் பயன்படுத்திக் கொண்டு, சூரியத்தேவரின் ஐந்தாவது மனைவியின் புதல்வன் இரகுநாதத் தேவர் என்பவர் சேதுபதியானார் . இவர் மக்களால் கிழவன் சேதுபதி என அன்புடன் அமைக்கப்பட்டார் . மறவர் நாட்டில் , மன்னனுக்குப் பல மனைவியர் இருப்பினும் கதன் சொந்த இனத்து மனைவியின் முதல் மசனைத்தான் அடுத்த வாரிசாக நியமிப்பது வழக்கம் . ஏனைய பனைவியரின் புதல்வர்கள் அந்தத்குகுதிக்கு தகுதியற்றவராவார் . பேராசிரியர்

சத்தியநாதய்யரா் அவர்கள் இந்த மரபை ஒருவேளை கருத்தில் கொள்ளாமல் , கிழவன் சேதுபதியை ஆசைநாயஇயின்மகன் என்று கூறியிருக்கலாம் . கிழவன் சேதுபதி என்னும் பெயர்க்குரிய காரணத்தை டாக்டர் 14. சுப்பிரமணியன் அவர்கள் விளக்கியுள்ளார்கள் . இழவன் என்றால் வயது முதிர்ந்தவர் என்ற பொருள் இங்கு பொருந்தாது. - கிழமை என்றால் உரிமை எனப் பொருள் உண்டு. எனவே *உரிமை உடையவர் ” என்னும் பொருள்தரத்தக்க அளவில் இவர் பெயர் அமைந்துள்ள ஆசைநாயகியின் புதல்வனாகயிருப்பினும் , சேதுநாட்டை ஆளஉரிமை பெற்றவர் என்பதே அப்பெயரின் விளக்கமாகும் . இராமனாதபுரம் சேதுபதிகளில் , வீரமிக்கவராகவும் , றந்த ஆட்சித்திறன் கொண்ட் - வராகவும் கிழவன் சேதுபதி கருதப்படுகிறார் .

**கிழவன் சேதுபதியின் தற்காப்பு நடவடிக்கைகள்**

இழவன் சேதுபதி அதிகாரத்திற்கு வந்தவுட்ன் , மறவர் நாட்டில் புகழ்பெற்று விளங்கும் இரண்டு தலைவர்களை மனச்சாட்சியின்றிஓழித்துக் கட்டினார் . இதனால் தனது நிலையை அவர் வலுப்படுத்திக்கொண்டார் இராமனாதபுரம் அரசிற்கு உட்பட்ட புதுக்கோட்டைப் பாளையத்தின் தலைவர் பல்லவராயன் என்பவர் , இராமனாதபுரத்திலிருந்த குனது விசுவாசத்தைத் தஞ்சை

நாயக்கரிடம் மாற்றிவிடுவதற்கான அறிகுறிகள் தெரியலாயின. எனவே, கிழவன் சேதுபதி, பல்லவராயனை நீக்கிவிட்டு, அந்த இடத்தில் , தனது ஆசைநாயகியாகிய கள்ளர் இனத்து நங்கை காத்தாயி என்ப ஃ0-ளின் சகோதரர் இரகுநாதன் என்பவரை நியமித்தார் . இந்த இரகுநாதன் “*தொண்டைமான் ”” என்னும் பட்டத்துடன் புதுக்கோட்டை அரசை நிறுவியவரானார் .

மேலும் நாலு கோட்டைப் பாளையம் என்ற ஒன்றை இழவன் சேதுபதி உருவாக்கி, அதற்குத் தனது நெருங்கிய உறவினர் பெரிய உடையத்தேவர் என்பவரைப் பாளையக்காரராக நியமித்தார் . இந்த நாலுகோட்டைப் பாளையமே பின்னர் சிவகங்கைச் சமையாக மாறியது.

**தலைநகர் மாற்றம்**

இதுவரை மறவர் நாட்டிற்குத் தலைநகராக இருந்தது புகளூராகும் . இத்தலைநகரைக் கிழவன் சேதுபதி, இராமனாதபுரத்திற்கு மாற்றினார் . இங்கு இவர் பழைய மண்கோட்டைகளை இடித்துத் தள்ளிவிட்டு, வலுவான கற்கோட்டையையும்அதைச் சுற்றி ஆழமான அகழியையும் அமைத்தார் . அத்தோடு மட்டுமின்றி, தனது நாட்டின் இராணுவ வலிமையையும் இவர் பெருக்கிக் கொள்ளத் தவறவில்லை. மிகக் குறுகிய காலத்தில் கிழவன் சேதுபதி 30 ஆயிரம் முதல் 40 ஆயிரம் வரையிலான படைகளைத்

இரட்ட மூடிந்தது என்று சொல்லப்படுகிறது. விலக்குச் செய்துவிட்டார் . இதனால் கிழவன் சேதுபதியின் சகோ தரியின் மகளும் பாதிப்பிற்கு உள்ளானார் . இவ்வாறு கிறித்துவ மதத்இனால் ஏற்படும் அரசியல் தொல்லைகளைக் கிழவன் சேதுபதி சூத்துக்கொள்ள விரும்பவில்லை. மேலும் கிழவன் சேதுபதி மற்றொரு கருத்தையும் மறந்துவிடவில்லை. தூத்துக்குடிப் பகுதியில் கிறித்துவர்சளாக மாறிய மக்கள், உள்நாட்டு மன்னரைப் புறக்கணித்து, போர்ச்சுக்கேய நாட்டு மன்னரையே ஏற்றுக் கொள்ளும் நிலை ஏற்பட்டது. இகே போன்று, தன் . பகுதியில் கிறித்துவர்கள் தனது அரசை மறுத்து, போர்ச்சுக்கசிய மன்னரையே ஏற்றுக் கொள்ளும் நிலை வெகு தொலைவில் இலக என்பதையும் இழவன் சேதுபதி உணர்ந்தார் .

இவ்வாறு ஆவ் குற்றங்கள் செய்ததற்காக 1693ம் ஆண்டு ஜனவரி 8ந்தேதி ஜான் டி பிரிட்டோ கைதுசெய்யப்பட்டு, விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார் . அதுசமயம் மதுரையில் ஆட்சி செய்தவர் இராணி மங்கம்மா. இவரிடம் கிறித்துவர்கள் முறையிட்டு ஜான் டி பிரிட்டோவைக் காத்தருளுமாறு வேண்டினார்கள் . இராணி மங்கம்மாவும் , கிழவன் சேதுபதி தனக்குக் சட்டுப்பட் விரும்புகிறாரா எனச் போதிக்க எண்ணி, அப்பாதிரியாரை

விடுவிக்குமாறு பணித்தார் . மதுரை அரசின் அதிகாரத்தைத் தாக்கிஎறிந்து, சுதந்திரமடைய விரும்பிய கிழவன் சேதுபதி இராணி மங்கம்மாவின் ஆணையை மதிக்கவில்லை. பாதிரியாரைக் காக்சு முயன்ற தடியத்தேவரையும் இவர் பொருட்படுத்தவில்லை. எனவே இப்பாதிரியாருக்கு மரண தண்டனை கொடுக்கப்பட்டு, 7699ம் ஆண்டு பிப்ரவரி 4ந்தேதி, ஜான் டி பிரிட்டோவின் தலை வெட்ட்ட்பட்டது. இதனால் உள்நாட்டுக் கலவரங்களும் ஒடுங்கி அமைதி ஏற்பட்டது. . திழவன் a கஇிறித்துவார்களைக் கொன்று குவித்த கொடியவர் என்று குற்றம் சாட்டுவார் பலருண்டு. ஆனால் எந்த ஒரு மேலாண்மைக் கொண்ட மன்னனும் , கிறித்துவ மதத்தினால் தனது அரசியல் நலன்கள் பாதிக்கப்படுவதையும் , தனது மக்கள் கருத்து வேறுபாடுகொண்டு சண்டையிட்டுக் கொண்டு மாள்வதையும் பொறுத்துக்கொண்டிருக்க முடியாது,

**இந்தக் கண்ணோட்டத்தில்**

தான் கிழவன் சேதுபதி கணிக்கப்பட்வேண்டும் என்று டாக்டர் 8. கதிர்வேல் கருதுகிறார்5 .8 மிண்டும் கிழவன் சேதுபதியின் மேலாண்மைக் கொள்கை 7693ம் ஆண்டுவாக்கில் , தக்காணம் முழுவதும் மொகலாயப் பேரரசர் ஔரங்கசீப்பின் ஆதிக்கத்திற்குக் கீழிருந்தது. பின் கவனம் அடுத்து தென்பகுதியில் திரும்பியது. மதுரை

இராணி மங்கம்மா, செய்வதறியாபல் பணிந்து போக வேண்டியிருந்தது. இந்நிலையில் , திருமலைநாயக்கர் காலத்திலிருந்து கப்பம் கட்டி வந்த இருவாதங்கூர் அரசு, இரவிவர்மராசனின் தலைமையில் மதுரைக்குக் கப்பம் கட்ட பறுத்தது. எனவே மதுரைப்படைகள் திருவிதாங்கூரின் மீது படையெடுத்துச் சென்றன. இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு, கிழவன் சேதுபதி 1698ம் ஆண்டு மதுரையை முற்றுகையிட்டுக் கைப்பற்றிக் கொண்டார் . என்றாலும் , திருவிதாங்கூர் சென்ற மதுரை நாயக்கர் படைத்தளவாய் நரசப்பய்யன் திருப்பி வந்து, மறவர்களிடமிருந்து மதுரையை நாயக்கர்களுக்கு மீட்டுத் தந்தார் . 1686ல் தஞ்சை அரசு உதவியதற்காகப் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு கிழவன் சேதுபதி விட்டுக்கொடுத்த பகுதிகளை, இப்பொழுது திருப்பித் தர தஞ்சை அரசு மறுக்கவே, கிழவன் சேதுபதி தஞ்சை நாட்டின் மீது படையெடுத்து, அறந்தாங்கி, திருமயம் , பிரான்மலை ஆகிய பகுதிகளை வென்று தன் அரசோடு சேர்த்துக் கொண்டார் இழவன் சேதுபதியின் மேலாண்மைக் கொள்கையால் பீதியுற்ற இராணி மங்கம்மா, தஞ்சை மராட்டியர்களுடன் சேர்ந்து

சொண்டு, இராமனாதபுரத்தின்மீது படையெடுத்தாள் . ஆனால் கிழவன் சேதுபதியின் படைகள் தீரத்துடன்

போராடி மதுரைத் குளபதி நரசப்பய்யனைப் போர்க்களத்தில் கொன்றுவிட்டு, 1708ல் வெற்றிக்கொடி நாட்டின இவ்வெற்றியின் மூலம் , கிழவன்சேதுபதி யாராலும் கட்டுப்படுத்த இயலாத தனிப் பெரும் மன்னரானார் . கிழவன் சேதுபதியின் மக்கள் தொண்டு 1709ம் ஆண்டு இவரது நாட்டில் பெரும் பஞ்சம் ஏற்பட்டது. என்றாலும் கிழவன் சேதுபதி மக்களின் வாட்டம் போக்க பல முயற்இளை மேற்கொண்டார் . வைகை ஆற்றிற்கு குறுக்கே அணைகட்டி நீர்ப்பாசன வசதியைப் பெருக்கினார் . மூகவை ஊருணி என்னும்.

**விசய ரகுநாத சேதுபதி (1710-1720)**

கிழவன் சேதுபதி தனக்குப் பிறகு, தனது ஆசைநாயகியின் மசன் பவானி சங்கரத்தேவரைத் தனது வாறீசாக நியமித்தார் , குளத்தை வெட்டினார் . பல கோவில்களுக்கும் , சித்திரங் ளுக்கும் மானியங்களை நல்கினார் . தனது இனத்து மக்களின் ஒற்றுமைக்கும் , நலனுக்கும் , சுதந்தர உணர்விற்கும் அரும்பாடுபட்டு, தனது அரசைச் சுதந்திரமாக்கிய பிறகு, 1710ம் ஆண்டு தனது எண்பதுார் வது-வயதில் இயற்கை எய்தினார் . கிழவன் சேதுபதியின் 45 மனைவிகளும் அவருடன் உடன்கட்டை ஏறினார்கள் .ஆனால் இது மறவர் பரபிற்குப்புறம்பானதாக இருந்ததால் , கிழவன் சேதுபதியின் மரு (கன் திருவுடைத்

தேவர் என்ற விசயரகுதாத சேதுபதிக்குப் பட்டம் சூட்ட்ப்பட்டது. பதவி கிடைக்காத பவாணி சங்கரத்தேவா் , கஇறித்துவர்களிடமும் , புதுக்கோட்டைத் தொண்டைமானிடமும் முறையிட்டுக் கொண்டார் . ஆனால் விசய ரகுநாத சேதுபதி, தனது அரசை 388 பாளையங்களாகப் பிரித்து அமர்த்தித் தனது பாதுகாப்பை வலுப்படுத்திக் கொண்டார் . நாடு முழுவதும் பல கோட்டைகளைக் கட்டிக் கொண்டது மட்டுமின்றி, டச்சுக்காரர்களின் துணையுடன் நடு பீரங்கிப்படையையும் உருவாக்கிக் கொண்டார் . 70ம் ஆண்டு வரை, விசயரகுதாத சேதுபதி மக்கள் நலன்பேணி, அவர்சளின் அன்பிற்குப் பாத்திரமாடு, சிறந்த வைணவப் பக்தராக வாழ்ந்தார் . :

**சுய மதிப்பிட்டு கேள்வி**

- தமிழ் நாட்டின் மராத்தியர்கள் நிர்வாகத்தை விவாதிக
- சரஸ்வதி மஹால் நூலகம் பற்றி விளக்கவும்
- சேதுபதிகள் – சமூகம் – பொருளாதாரம் – மதம் மற்றும் கலாச்சாரம்

## அலகு - ஐந்து

கர்நாடக நவாப்கள் - நவாப்களின் கீழ் தமிழ்ச் சமூகம் - - கர்நாடகப் போர்கள் - மைசூர் உறவுகள் - ஆங்கிலோ பொருளாதாரம் மற்றும் மதம் மற்றும் - சமூகம் கான் - புலித்தேவர் - பொலிகர் கலகம் - கலாச்சாரம் வீரபாண்டிய - வேலுநாச்சியார் - சாஹிப்கட்டபொம்மன் மருது சகோதரர்களின் கிளர்ச்சி -

**நோக்கங்கள்**

- நவாப்களின் கீழ் தமிழ்ச் சமூகம்
- மைசூர் மற்றும் கர்நாடகப் போர்கள்
- மருது சகோதரர்களின் கிளர்ச்சி

### கர்நாடக நவாப்கள்

- **சதத்துல்லா கான்** (நவாயத் ) 7710-1732
- **தோஸ்து அலி** 1732—1740
- **சப்தர் அலி** 1740—1742
- **மூகமது சாயித்கான்** 1742—1743
- **அன்வருதீன்கான்** (வாலாஜா) 1743—1749
- **முகமதுஅலி** 7749-1795
- **உமத்துல்லா உமாரு** 1795-1901
- **அசீம் உத்துல்லா** 1801—1820

கர்நாடக நவாபுகளில் இறுதியானவர் முகமதுகாவ்ஸ் . இவர் வாரிசு இல்லாமல் 1855ல் இறந்த பிறகு, இந்த அரசு, வாரிசு இல்லாச் சட்டத்தின்படி

சென்னை மாநிலத்தோடு இணைக்கப்பட்டு ஆங்கிலேயரின் ஆட்சிக்கு உட்பட்டது.

**தோஸ்து அலியும் மதுரை நாயக்கர் அரசும்**

சதத்துல்லா கானிற்குப் பிறகு தோஸ்துஅலி கர்நாடகநவாப் ஆனார் . இக்காலத்தில் மதுரையில் , சொக்கநாதநாயக்கருக்கு வாரிசு இல்லாததால் , அவரது மனைவி மீனாக்நி மதுரை இரா ணியாளுனார் . இந்த இராணி மீனாக்ஷி, பங்காரு திருமலை என்பவரின் மகன் விசயகுமாரனைத் தத்து எடுத்துக் கொண்டார் . என்றாலும் , பங்காருஇருமலையும் , மதுரைத் தளவாய் வெங்கடாச்சாரியாவும் சேர்ந்து, இராணி மீனாகஷியை எதிர்த்துப் போரிட்டு, மதுரை ஆட்சியைக் கைப்பற்ற முனைந்தார்கள் .

இந்நிலையில் 1734ம் ஆண்டுவாச்கில் ஆர்க்காட்டு நவாப் , தோஸ்து அலி, தனது மகன் சப்தர் அலியையும் , மருமகன் சந்தா- சாகிப்பையும் பெரும் படையுடன் அனுப்பி மதுரையையும் தஞ்சையையும் கைப்பற்றி வருமாறு பணித்தார் . என்றாலும் , தோஸ்துஅலி யின் மகனும் , மருமகனும் இணைந்து செயல்பட்வில்லை. பங்காரு திருமலை சப்தர் அலியின் ஆதரவினைப் பெற்றார் . இராணி மீனாக்ஷிக்கு: சந்தாசாகிப்பின் மீது அதிக ஈடுபாடு ஏற்பட்டது. எனவே சந்தாசாகிப் படைகள் மதுரைப்

பகுதிக்குள் நுழைவதை இந்த இராணி ஆதரிக்கவே செய்தார் . 1788ம் ஆண்டு, சந்தாசாகிப் திருச்சியைத் தாண்டித், இண்டுக்கல் வழியாக மதுரை வந்து இராணி மீனாக்ஷியை எதிர்த்த பங்காரு இருமலையைத் தோற்கடித்தார் தோல்வியுற்ற பங்காரு திருமலை சிவகங்கைக்குத் தப்பி ஓடினார் .

**சந்தா சாகிப்பும் இராணி மீனாக்ஷியும்**

இராணி மீனாக்ஷி, சந்தாசாகிப்பின்பால் மிக்க ஈடுபாடு கொண்டது மட்டுமின்ற ி , அவர் நிச்சயமாகத் தனது அரசைக் காப்பாற்றிக் கொடுப்பார் என உறுதியாக் நம்பினார் . ஆனால் காரியத்திலேயே கண்ணாக இருந்த சந்தாசாடுப் , தனது மனதை அலைபாயவிடாது,"இராணி மீனாக்ஷியைச் சிறையிலடைத்து, மதுரையில் தனது அதிகாரத்தை நிலைநாட்டினார் . சிறையில் மனமுடைந்த மீனாக்ஷி தற்கொலை செய்து கொண்டார் .இத்தோடு மதுரையில் நாயக்கர் ஆட்சி

முடிவுற்றது. சந்தாசாடப் மீனாக்ஷிக்கு நம்பிக்கைத் துரோகம் செய்து விட்டார் என்று கருதுவார் பலர் . ஆனால் அரசியலில் , அறத்திற்கும் , சத்தியத்திற்கும் இடமில்லை என்பதை அக்காலம் முதல் இக்காலம் வரையுள்ள எல்லா அரசியல் வல்லுநர்களும் அறிவார்கள் .

**ப்தர் அலியும் தஞ்சையும்**

1739ல் சப்தர் அஅலி, தனது படை வலிமையால் , தஞ்சையைக் கைப்பற்றி அங்கு தனது ஆதிக்கத்தை நிறுவினார் . எனவே மதுரை அரசும் , தஞ்சை அரசும் , ஆர்க்காட்டு நவாபின் ஆளுகைக்கு உட்பட்டன.

**மீண்டும் மராட்டியர்களின் வருகை**

தனது மகன் சப்தர் அலியும் , - மருமகன் சந்தாசா$ப்பும் ஒற்றுப் போகாதிருப்பதினால் கவலை கொண்ட் ஆர்க்காட்டு நவாபு தோஸ்த் அலி, அரசியலை விடுத்து, மதப்பணியில் ஈடுபடலானார் . இந்நிலையில் ஆர்க்காட்டு நவாபிற்குக் "கட்டுப்படாத தனிச் சுதந்திர அரசை திருச்சியில் சந்தாசாடப் அமைத்துக் கொண்டார் . இந்நிலை-யில் , இராமனாதபுரம் சேதுபதி, புதுக்கோட்டை மன்னர் , மதுரையிலிருந்து விரட்டப்பட்ட பங்காரு இருமலை ஆகியோர் , தமிழகத்திலுள்ள அரியல் குழப்பத்தை நீக்கித் தருமாறு மராட்டியர்களுக்கு வேண்டுகோளும் அழைப்பும் விடுத்தார்கள் . ஆர்க்காட்டு நவாபினால் குஞ்சையில் தங்கள் இனத்தவரின் அரசு அழிக்கப்பட்டதினால் கோபம் கொண்டிருந்த மராட்டியர்களுக்குத் தமிழகத்தில் தங்கள் செல்வாக்கை விரிவாக்கக் கொள்வதற்கு இவ்வழைப்பு நல்ல வாய்ப்பாக

விளங்கியது.

எனவே, ராகுஜி பான்ஸ்லே, பதேசிங் இவர்களின் தலைமையில் 1740ம் ஆண்டு மே மாதம் மராட்டியப் படைகள் தமிழகத்தில் நுழைந்தன. மராட்டியப் படைகளின் வருகையை ஆர்க்காட்டு நவாபு எதிர்பார்க்கவில்லை. இருபடைகளும் , கடுமையாக செருவு என்ற இடத்தில் மோதிக் கொண்டன என்று டாக்டர் 11. சுப்பிரமணியன் அவர்களும் , தமலச்சேரி என்ற இடத்தில் மோதிக் கொண் டன என்று டாக்டர் 8. இராசய்மன் அவர்சளும் கூறியுள்ளார்கள் .

இப்போரில் ஆர்க்காட்டு . நவாப் தோஸ்து அலி கொல்லப்பட்டு, ஆர்க்காடு கைப்பற்றப்பட்டது. இவ்வெற்றி மராட்டியர்களுக்கு பெரும் வெற்றியாகவே அமைந்தது.

திருச்சியிலிருந்த சந்தாசாடுப் , வேலூருக்குச் சென்று, தந்தையை இழந்த சப்தர் அலிக்கு ஆறுதல் கூறி, பகையை மறந்து ஒன்று சேர முயன்றார் . இருவரும் , பொதுப் பகைவர் மராட்டியரின் வருகையால் தங்களின் பசையைச் சிறிது காலத்திற்கு, மறந்து ஒத்இருந்தார்கள் . இவர்கள் இருவரும் பிரஞ்சுப்படைகளின் ஆதரவைப் பெற முயன்று தோல்வியுற்றார்கள் இதன் பிறகு, சப்தர் அலி ஆர்க்காட்டிற்கும் , சந்தாசாஇப் திருச்சிக்கும் பிரிந்து சென்றார்கள் . இவர்களின் சிறிதுகால ஒற்றுமை இத்தோடு முடிவுற்றது.

ஆர்க்காடு வந்த சப்தர் அலி, மராட்டியர்களுக்கு ஒரு கோடி ரூபாயைப் பணிந்தளித்து, ஆர்க்காட்டிலிருந்து அவர்களைக் காலி பண்ணச் செய்தது மட்டுமின்றி, திருச்சியிலிருக்கும் சந்தாசாகிப்பின் மீது படையெடுக்குமாறும் தூண்டினார் . எனவே மராட்டியப் படைகள் திருச்சியை நோக்கி விரைந்தன. ஆர்க்காட்டில் சப்தர் அலி நவா பாக முடிசூடிக் கொண்டார் . திருச்சியிலிருந்த சந்தாசாகிப் , பாண்டிச்சேரியிலுள்ள பிரெஞ்சுப் படையின் ஆதரவைப் பெற முயன்று, இறுதியில் 1741ல் மராட்டியர்களால் தோற்கடிக்கப்பட்டுச் சதாராவில் சிறை வைக்கப்பட்டார் . மதுரையையும் , திண்டுக்கல்லையும் பாதுகாத்து வந்த சந்தாசாசிப்பின் சகோதரர்கள் , முறையே பூதாசாகப்பும் , சதக்சாகிபும் தோற்கடிக்கப்பட்டு, முராரிராவ் என்னும் மராட்டியபப்டைத் தளபதியிடம் வெற்றிகொள்ளப்பட்ட தமிழகப் பகுதிகள் ஒப்படைக்கப்பட்டன. அதன் பிறகு மராட்டியப்படைகள் தங்கள் தாயகம் திரும்பின. மராட்டியப் படையினரின் .வருகையினால் , தமிழகத்தில் வளர்ந்து வரும் இசுலாமியர்களின்.

**ஹைதராபாத் நிசாமின் தமிழகப்படையெடுப்பு**

ஆர்காட்டு நவாப் சப்தர் அலியை, அவரது மைத்துனர் , வேலூர் கோட்டைத் தலைவர் முர்த்தசா என்பவர்

வஞ்சமாகக் கொலைசெய்துவிட்டு, ஆர்காட்டைத் தானே கைப்பற்றிக்கொண்டார் . என்றாலும் சப்தர் அலியின் உண்மையான படையினர் , மூர்த்தசாவை ஆர்க்காட்டிலிருந்து விரட்டிவிட்டு, சப்தர் அலியின் மகன் , சிறுவன் சாயித்கான் என்பவனை நவாபாக ஆக்கினார்கள் . மராட்டியநாட்டில் , பேஷ்வா பாலாஜி பாஜிராவிற்கும் - ராகுஜி பான்ஸ்லேவிற்கும் ஏற்பட்ட மோதல்களால் , தமிழகத்தி. வுள்ள மரரட்டியர்களின் ஆதிக்கம் வலுவிழந்தது. முராரிராவும் இதனால் வலுவிழந்தார் . தமிழகம் , இப்படியாகச் இக்குண்டிருக்கும் நிலையில் 1749ம் ஆண்டு ஹைதராபாத் நிசாம் ஆசாப்ஜா,, தனது செல்வாக்கை வளர்த்துக்கொள்ளத் தமிழகத்தின் மீது படையெடுத்து வெற்றி கொண்டார் . என்றாலும் , நிசாம் , ஆர்க்காட்டில் சாயித்கானைத் தொடர்ந்து ஆட்சிசெய்ய அனுமதித்தது மட்டுமன்றி கவாஜா அப்துல்லா என்பவரையும் அவருக்கு ஆலோசகராக தியமித்தார் . இதன்பிறகு, .நிசாம் மன்னர் , திருச்சியையும் மதுரையையும் முற்றுகையிட்டு. முராரிராவிடமிருந்து கைப்பற்றிக்கொண்டார்

என்பதை, ஆனந்தரங்கம்பிள்ளையின் நாட்குறிப்பேட்டிலிருந்து அறிந்துகொள்கிறோம் .

ஆர்க்காட்டில் கவாஜா அப்துல்லா 1744ம் ஆண்டு இறந்து போனதால் அடுத்த ஆலோசகராக அன்வருதீன் நியமிக்கப்பட்டார் . இவர் 10 வயதே நிரம்பிய சாயித்காவைக் கொன்றுவிட்டு, ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டார் . இதன்பிறகு, வரக்கூடிய ஆர்க்காட்டு நவாபுகளின் வரலாற்றை, கர்நாடகப் போர்கள் , மைசூர்போர்களின் போது காணலாம் .

**நவாபுகளின் கீழ் தமிழ்ச் சங்கம்**

ஆற்காடு நவாப்புகள் கலிபா உமர் இப்புனு அல் கத்தாப்பு அவர்களின் வழிவந்தவர்கள் ஆவர். இவர்கள் 1692 ஆம் ஆண்டு மொகலாய சக்கரவர்த்தி அவுரங்கசீப்பால் கருநாடக பிரதேசம் பகுதிகளில் வரிவசூல் செய்ய நியமிக்கப்பட்டனர். இவ்வாறு நியமிக்கப்பட்ட முதல் நவாப்பு சுல்பிக்கார் அலி என்பவராவார். இவர் மராத்திய, விசயநகரப் பேரரசுகளை முறியடித்தார். மேலும் தனது ஆட்சிப்பகுதியை கிருட்டிணை ஆறு வரை பரப்பினார். பின்பு வந்த நவாப்பு தோத்து அலி கான் (1732–1740) என்பவர் தனது அரசை 1736 இல் மதுரை வரையில் விரிவுபடுத்தினார்.[1]

இதன் பிறகு 1749 ஆம் ஆண்டு முகமது அலி கான் வாலாசா என்பவர் ஆட்சிக்கு வந்தார். இவரது ஆட்சி

மிகவும் அமைதியாகவும் , சமய சகிப்புதன்மை உள்ளதாகவும் விளங்கியது. இவர் தனது நாட்டின் அனேகமான பகுதிகளுக்கும் சென்று பார்வையிட்டதோடு, அங்கு இருந்த அனைத்து கோவில்கள், மசூதிகள் மற்றும் தேவாலயங்களுக்கு நன்கொடைகளையும் அளித்தார். இன்றைய திருச்சிராப்பள்ளி திருவரங்கம் நகரில் உள்ள திருவரங்கநாதர் ஆலயமும் அவற்றில் ஒன்றாகும். இவர் 1765 இல் முகலாயப் பேரரசிற்கு கப்பம் கட்டுவதை மறுத்து, நவாப்பு ஆட்சியை சுதந்திர அரசாக அறிவித்தார். இதன் பிறகு இவர் தன்னை காத்துக்கொள்ளும் பொருட்டு பிரித்தானியக் கிழக்கிந்தியக் கம்பனி உடன் நட்புறவை மேற்கொண்டார். தனக்கு கீழ் உள்ள சமசுதானங்களை கட்டுப்படுத்த இவர் கம்பெனி படைகளை உபயோகப்படுத்தினார். மேலும் இவர் பிரெஞ்சு – ஐதர் அலி கூட்டுப் படையை எதிர்க்க ஆங்கிலேயற்கு ஆதரவாக போரிட்டார். இதன் காரணமாக இந்திய சுதந்திர உணர்விற்கு எதிரானவர் என்ற தோற்றத்தைப் பெற்றதோடு தனது அரசாட்சியின் பெரும்பகுதியை கிழக்கிந்தியக் கம்பெனியிடம் இழந்தார். இதன் பிறகு பதின்மூன்றாவது நவாப்பாக ஆட்சிக்கு வந்த குலாம் முகம்மது கவுசு கான் ( 1825–1855 ) தனக்கு

பிறகு வாரிசு இல்லாமல் இறந்தார். இதனால் அவகாசியிலிக் கொள்கையின் படி, கருநாடக பிரதேசம் , ஆங்கிலேய அரசின் கீழ் சென்றது. இதன் பிறகு 1867 இல் குலாம் முகம்மது கவுசு கானின் சிறிய தந்தை ஆசிம் சா , பிரித்தானிய மகாராணி விட்டோரியாவிடம் ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டார். அதன்படி நவாப்பு ஆட்சிக்குட்பட்ட பகுதிகளில் வரி வசூல் செய்யும் உரிமையை ஆங்கிலேயர் பெற்றனர். அதற்கு பகரமாக வரிவசூலில் ஒரு பகுதியை ஓய்வுதியமாக ஆசிம் சா பெற்றார். மேலும் ஆற்காடு இளவரசர் என்றும் அங்கிகரிக்கப்பட்டார்.

இவரது பரம்பரையில் வந்தவர்கள் இன்றும் சென்னை நகரில் ஆற்காடு இளவரசர் என்ற பட்டத்துடன் வாழ்ந்து வருகின்றனர். சுதந்திர இந்தியாவும் இவர்களது பட்டத்தை அங்கீகரித்து , அரச குடும்பத்தினருக்கான ஓய்வூதியத்தை அளித்து வருகின்றது. இவர்களில் நடப்பு கடைசி ஆற்காடு இளவரசரான முகம்மது அத்துல் அலி ஆசிம் சா சூலை 1994 இல் பட்டத்துக்கு வந்தார்.

## ஆங்கிலோ - மைசூர் உறவுகள்

கல்வியறிவு இல்லாதவராக இருந்தாலும், ஹைதர் அலி தனது சண்டைத் திறமை மற்றும் நிர்வாகத் திறமைக்காக கர்நாடக வரலாற்றில் முக்கிய இடத்தைப் பெற்றார். 1761 வாக்கில், மராத்தா அச்சுறுத்தல் குறைந்து, 1763 வாக்கில், ஹைதர் அலி கெளடி சாம்ராஜ்யத்தைக் கைப்பற்றினார், பில்கி, பைதனூர் மற்றும் குட்டியின் ஆட்சியாளர்களைத் தோற்கடித்து, மைசூர் சாம்ராஜ்யத்தை தார்வாட் மற்றும் பெல்லாரி வரை விரிவுபடுத்தினார். 1766 மற்றும் 1796 க்கு இடையில், மைசூர் நஞ்சராஜ உடையார், சாமராஜ உடையார் VII மற்றும் சாமராஜ உடையார் VIII ஆகியோரால் ஆளப்பட்டது, அவர்கள் அவர்களின் உடனடி முன்னோடிகளைப் போலவே பட்டத்தில் மட்டுமே மன்னர்களாக இருந்தனர்.

மைசூருக்கு எதிராக மராட்டியர்கள், கோல்கொண்டாவின் நிஜாம் மற்றும் ஆங்கிலேயர்களால் ஒரு கூட்டணி உருவாக்கப்பட்டது , இது 1767 இல் முதல் ஆங்கிலோ-மைசூர் போரில் உச்சக்கட்டத்தை அடைந்தது. நவீன சென்னை வரை ஆங்கிலேயர்களை விரட்டியடித்து அமைதியைக் கட்டளையிட்ட ஹைதர் அலிக்கு இந்தப் போர் வெற்றி. விதிமுறை. 1779 வாக்கில், ஹைதர் அலி

தெற்கில் நவீன தமிழ்நாடு மற்றும் கேரளாவின் சில பகுதிகளைக் கைப்பற்றினார், இராச்சியத்தின் பரப்பளவை சுமார் 80,000 மைல் (205,000 கிமீ²) வரை நீட்டித்தார். ஹைதர் அலி பிரெஞ்சுக்காரர்களுடன் நட்பு கொண்டார் , மேலும் 1780 வாக்கில் மராட்டியர்கள் மற்றும் நிஜாம்களுடன் கூட்டணி வைத்து, தமிழ் பகுதியில் நடந்த ஒரு முக்கியமான போரில் அவர்களால் காட்டிக் கொடுக்கப்பட்டார். ஆங்கிலேயர்களுடன் சண்டை தொடர்ந்ததால் அவர் இறந்தார், மேலும் அவரது மகன் திப்பு சுல்தான் ஆட்சிக்கு வந்தார் . இரண்டாம் ஆங்கிலோ-மைசூர் போரில் திப்பு ஆங்கிலேயர்களுக்கு எதிரான பகையைத் தொடர்ந்தார்.

"மைசூர் புலி" என்று பிரபலமாக அழைக்கப்படும் திப்பு, 1783 இல் வண்டிவாஷில் ஆங்கிலேயர்களை தோற்கடித்தார், ஆனால் நவீன கடலோர கர்நாடகாவில் சில பகுதிகளை அவர்களிடம் இழந்தார். கித்தூர், நரகுண்ட் மற்றும் பாதாமி பகுதிகளையும் மராட்டியர்களிடம் இழந்தார். ஆங்கிலேய நட்பு நாடான திருவிதாங்கூர் இராச்சியத்தின் மீது திப்புவின் தாக்குதல் மூன்றாவது ஆங்கிலோ-மைசூர் போரில் விளைந்தது. 1792 வாக்கில், ஆங்கிலேயர்கள் ஸ்ரீரங்கப்பட்டினத்தை முற்றுகையிட்டனர், இதன் விளைவாக திப்புவின் தோல்வி ஏற்பட்டது. அவனுடைய பாதிப் பகுதிகள் கைப்பற்றப்பட்டன, அவனுடைய இரண்டு

மகன்கள் பணயக் கைதிகளாகப் பிடிக்கப்பட்டனர்.[13] ஒரு அவமானப்படுத்தப்பட்ட ஆனால் அடக்க முடியாத திப்பு பிரெஞ்சுக்காரர்கள், ஆப்கானிஸ்தானின் அமீர் மற்றும் துருக்கியின் சுல்தானகத்துடன் கூட்டணியை உருவாக்கினார் , அதே நேரத்தில் பிரிட்டிஷ் மராட்டியர்கள் மற்றும் கோல்கொண்டாவின் நிஜாம் ஆகியோரால் ஆதரிக்கப்பட்டது. 1799 ஆம் ஆண்டில், நான்காவது ஆங்கிலோ-மைசூர் போரில் திப்பு இறந்தார், இது ராஜ்யத்தின் சுதந்திரத்தின் முடிவைக் குறிக்கிறது. நவீன இந்திய வரலாற்றாசிரியர்கள் திப்பு சுல்தானை ஆங்கிலேயரின் தீவிர எதிரியாகவும், திறமையான நிர்வாகியாகவும், புதுமைப்பித்தனாகவும் கருதுகின்றனர்.[18]

திப்புவின் வீழ்ச்சியைத் தொடர்ந்து, மைசூர் இராச்சியத்தின் ஒரு பகுதி இணைக்கப்பட்டு, மெட்ராஸ் பிரசிடென்சி மற்றும் பிரிட்டிஷ் ஆட்சியாளர்களிடையே பிரிக்கப்பட்டது. மீதமுள்ள பிரதேசம் ஒரு சமஸ்தானமாக உருவாக்கப்பட்டது மற்றும் உடையார் குடும்பத்தின் ஐந்து வயது வாரிசான கிருஷ்ணராஜ உடையார் III, ஆங்கிலேயர்களால் அரியணையில் அமர்த்தப்பட்டார். ராஜா மைனர் என்பதால், மைசூரின் முதல் திவானான (மந்திரி) பூர்ணியாவால் நிர்வாகம் நடத்தப்பட்டது. மைசூர்

பிரிட்டிஷ் ராஜ்ஜியத்திற்கு ஆண்டு அஞ்சலி செலுத்தியது மற்றும் மைசூரில் பிரிட்டிஷ் இராணுவத்தை நிலைநிறுத்துவதற்கு மானியம் வழங்கியது.

திவானாக, பூர்ணியா தனது முற்போக்கான மற்றும் புதுமையான நிர்வாகத்திற்காக ஆங்கிலேயர்களிடமிருந்து பாராட்டைப் பெற்றார். 1811 இல், சிறுவனின் பதினாறாவது பிறந்தநாளைத் தொடர்ந்து அவர் சேவையிலிருந்து ஓய்வு பெற்றார். 1831 ஆம் ஆண்டில், சுதேச அரசின் பொருளாதாரத்தில் அதிருப்தி அடைந்து, தவறான நிர்வாகத்தை மேற்கோள் காட்டி, ஊழல் உள்ளூர் அதிகாரிகளால் (தாசில்தார்களால்) கொண்டு வரப்பட்ட சூழ்நிலை, ஆங்கிலேயர்கள் ராஜ்யத்தை நேரடியாகக் கைப்பற்றினர். மன்னர் மூன்றாம் கிருஷ்ணராஜ உடையார் தனது பெரும்பாலான நேரத்தை நுண்கலைகளை ஊக்குவிப்பதில் செலவிட்டார், இதன் விளைவாக கர்நாடக இசை மற்றும் கன்னட இலக்கியத்தின் வளர்ச்சி ஏற்பட்டது. அடுத்த 50 ஆண்டுகளுக்கு, மைசூர் கமிஷனர்களின் ஆட்சிக்கு உட்பட்டது, அவர்கள் பிரித்தானியரால் நியமிக்கப்பட்ட அதிகாரிகளாக இருந்தனர். 1876-1877 ஆம் ஆண்டில், நேரடி பிரிட்டிஷ் ஆட்சியின் முடிவில், மைசூர் பேரழிவுகரமான பஞ்சத்தால்

தாக்கப்பட்டது , மதிப்பிடப்பட்ட இறப்பு புள்ளிவிவரங்கள் 700,000 மற்றும் 1,100,000 அல்லது மக்கள்தொகையில் கிட்டத்தட்ட ஐந்தில் ஒரு பங்கு.[23] சிறிது காலத்திற்குப் பிறகு, ஆங்கிலேய முறையில் கல்வி பயின்ற மன்னர் சாமராஜ உடையார், 1881 ஆம் ஆண்டில் மைசூர் நிர்வாகத்தைக் கைப்பற்றினார், உடையார் வம்சத்தால் அமைக்கப்பட்ட லாபியின் வெற்றியைத் தொடர்ந்து. அப்போதிருந்து, 1947 இல் இந்திய சுதந்திரம் அடையும் வரை, மைசூர் பிரித்தானிய ராஜ்ஜியத்தின் கீழ் ஒரு சமஸ்தானமாக இருந்தது, உடையர்களின் ஆட்சியைத் தொடர்ந்தது.

மன்னர் IX சாமராஜ உடையார் மறைவுக்குப் பிறகு, பதினொரு வயது சிறுவனாக இருந்த மன்னர் கிருஷ்ணராஜ உடையார் IV 1895 இல் அரியணை ஏறினார். அவரது தாயார், மகாராணி கெம்பராஜம்மன்னியவரு, பிப்ரவரி 8, 1902 இல் கிருஷ்ணராஜ உடையார் ஆட்சிப் பொறுப்பை ஏற்கும் வரை ஆட்சியாளராக இருந்தார் அவரது ஆட்சியின் கீழ், சர் எம். விஸ்வேஸ்வரய்யாவை தனது திவானாகக் கொண்டு, மன்னர் மைசூரை முற்போக்கான மற்றும் நவீன மாநிலமாக மாற்றத் தொடங்கினார், குறிப்பாக தொழில் , கல்வி , விவசாயம் மற்றும் கலை ஆகியவற்றில். மைசூர்

மிகவும் வெற்றிகரமாக இருந்தது, மகாத்மா காந்தி ராஜாவை ராஜரிஷி (ஒரு துறவி ராஜா) என்று அழைத்தார். பால் புருண்டன், பிரிட்டிஷ் தத்துவவாதி மற்றும் ஓரியண்டலிஸ்ட், அமெரிக்க எழுத்தாளர் ஜான் குந்தர் மற்றும் பிரிட்டிஷ் அரசியல்வாதி லார்ட் சாமுவேல் ஆகியோர் மன்னரின் முயற்சிகளைப் பாராட்டினர். இந்தக் காலகட்டத்தில் நடைபெற்ற கல்வி உள்கட்டமைப்பில் முன்னோடியாகச் செயல்பட்ட பெரும்பாலான பணிகள், வரும் பத்தாண்டுகளில் கர்நாடகாவிற்கு விலைமதிப்பற்ற சேவையை அளிக்கும். ராஜா ஒரு திறமையான இசைக்கலைஞராக இருந்தார், மேலும் அவரது முன்னோடிகளைப் போலவே, நுண்கலைகளின் வளர்ச்சியை ஆர்வத்துடன் ஆதரித்தார். அவரைத் தொடர்ந்து அவரது மருமகன் ஜெயச்சாமராஜ உடையார் இந்திய சுதந்திரத்திற்கு முந்தைய ஆண்டுகளில் தகுதியான வாரிசாக நிரூபித்தார். ஆகஸ்ட் 9, 1947 இல் ஜெயச்சாமராஜ உடையார் கையெழுத்திட்ட இணைப்பு ஒப்பந்தத்தைத் தொடர்ந்து மைசூர் இந்திய ஒன்றியத்தில் இணைந்தபோது உடையார் வம்சத்தின் ஆட்சி முடிவுக்கு வந்தது.

**ஆங்கிலோமைசூர் போர்ள்-**

ஹைதர் அலி மற்றும் திப்பு சுல்தான் 1799 இல் மைசூர் சுல்தானகத்தின் இறுதி சரணடைதலுக்கு முன் ஆங்கிலேயருக்கு எதிராக நான்கு போர்களை நடத்தினர். இந்த போர்கள் ஆங்கிலோ-மைசூர் போர்கள் என்று அழைக்கப்படுகின்றன மற்றும் இந்திய வரலாற்றில் மிக நீண்ட இராணுவ மோதல்களாகும். இந்தப் போர்கள் ஆங்கிலேயர்களுக்கும் மைசூர் ஆட்சியாளர்களுக்கும் இடையே மைசூர் பிரதேசங்களின் மீதான கட்டுப்பாட்டிற்காக நடத்தப்பட்டன. மராத்தியர்கள், கர்நாடக நவாப் மற்றும் ஹைதராபாத் நிஜாம் ஆகியோர் அவ்வப்போது பிரிட்டிஷ் கிழக்கிந்திய நிறுவனத்துடன் (EIC) மைசூர் ஆட்சியாளரை அடிபணியச் செய்தனர். ஏனெனில், ஹைதர் அலியின் கீழ் மைசூரின் வளர்ந்து வரும் அதிகாரம் அருகிலுள்ள மராத்தியர்கள், கர்நாடக நவாப் மற்றும் ஹைதராபாத் நிஜாம் ஆகியோரை கவலையடையச் செய்தது. இருப்பினும், EIC அதன் எல்லையை விரிவுபடுத்த விரும்பியது, ஆரம்பத்தில், அவர்கள் மைசூர் மீது மார்த்தாவை ஆதரித்தனர், பின்னர் அவர்கள் மார்த்தாவுடனும் சண்டையிட்டனர். மைசூர் மற்றும் மராட்டிய மாநிலங்களில் EIC இன் நோக்கங்கள் முக்கியமாக வணிக நலன்களால் இயக்கப்பட்டன. மலபார்

கடற்கரையில் மசாலா வர்த்தகத்தில் ஹைதர் மற்றும் திப்புவின் ஆதிக்கம் ஆங்கிலேயர்களுக்கு கவலையை ஏற்படுத்தியது, ஏனெனில் இது மிளகு மற்றும் ஏலக்காய் மீதான அவர்களின் வர்த்தக நலன்களை நேரடியாக பாதித்தது. கூடுதலாக, மைசூர் பலம் பிரிட்டிஷ் கிழக்கிந்திய கம்பெனியின் மெட்ராஸ் பிராந்தியத்தின் கட்டுப்பாட்டிற்கு சவாலாக இருந்தது. மேற்கண்ட நிகழ்வுகள் 1767 முதல் 1799 வரை நான்கு வெவ்வேறு காலகட்டங்களில் நீடித்த ஆங்கிலோ மைசூர் போர்களின் அடித்தளத்திற்கு வழிவகுத்தது.

**ஆங்கிலோ-மைசூர் போர்களின் பின்னணி**

மைசூர் உடையார்கள் முந்தைய விஜயநகரப் பேரரசின் ஒரு பகுதி மற்றும் 1565 இல் விஜயநகரத்தின் வீழ்ச்சியுடன் சுதந்திரமடைந்தனர். 1673-1704 வரை ஆட்சி செய்த சிக்க தேவராஜாவின் கீழ் வம்சம் அதன் உச்சத்தை அடைந்தது. அவர் தனது நிர்வாகத்தை சாவடிகள் என்று 18 துறைகளாகப் பிரித்து, வரிவிதிப்பு முறையை அறிமுகப்படுத்தினார். பின்னர், சிக்க கிருஷ்ணராஜ உடையார் II 1734 முதல் 1766 வரை ஆட்சி செய்தார் மற்றும் முறையே நஞ்சாரா (சர்வாதிகாரி) மற்றும் தேவராஜ் (துல்வாய்; நடைமுறை அதிகாரங்களை வைத்திருந்தவர்) என அழைக்கப்படும் இரண்டு நிர்வாக பதவிகள் அல்லது

அமைச்சர்களை பராமரித்தார். இந்த ஆட்சிக் காலத்தில் மராத்தியர் மற்றும் நிஜாம் அடிக்கடி தாக்கினர். 1759 ஆம் ஆண்டில், பெங்களூரில் இருந்து மராட்டியர்களை விரட்டிய பின், ஹைதர் அலிக்கு "மைசூர் நவாப்" என்ற பட்டத்தை இரண்டாம் சிக்க கிருஷ்ணராஜா வழங்கினார்.

- 1761 ஆம் ஆண்டில், மைசூர் இராணுவத்தின் தளபதியான ஹைதர் அலி தன்னை மைசூர் மாநிலத்தின் உண்மையான ஆட்சியாளராக ஆக்கினார்.
- தனது நிர்வாக மற்றும் இராணுவ திறமையின் மூலம், பிரெஞ்சு ஆலோசகர்களின் உதவியுடன் தனது இராணுவத்திற்கு பயிற்சி அளித்தார் . இறுதியில், ஹைதர் அலியின் கீழ் மைசூர் ஒரு வலிமைமிக்க சக்தியாக மாறியது . பிரெஞ்சுக்காரர்களுக்கும் ஹைதர் அலிக்கும் இடையிலான இத்தகைய நெருக்கம் ஆங்கிலேயர்களை எரிச்சலடையச் செய்தது.
- ஹைதர் மலபார் கடற்கரையின் வளமான வர்த்தகத்தை கட்டுப்படுத்துவது மட்டுமல்லாமல், மதராஸில் ஆங்கிலேயர்களின் அரசியல் மற்றும் வணிக நலன்களையும் அச்சுறுத்தினார்.

- இதை எதிர்கொள்ள, கிழக்கிந்திய கம்பெனி ஹைதராபாத் நிஜாமை அணுகி, ஹைதர் அலிக்கு எதிராக சதி செய்ய அவரை சமாதானப்படுத்தியது . இது ஆங்கிலேயர்களுக்கும் மைசூர் மாநிலத்திற்கும் இடையே நடந்த தொடர்ச்சியான போர்களின் தொடக்கமாகும்.

**நான்கு ஆங்கிலோ-மைசூர் போர்கள்**

மைசூர் இராச்சியத்திற்கு எதிராக 1767 முதல் 1799 வரையிலான நான்கு போர்களின் தொடரில் ஆங்கிலேயர்கள் ஈடுபட்டுள்ளனர்,

**முதல் ஆங்கிலோ-மைசூர் போர்) 1767-69)**

**பின்னணி**

- 1612 ஆம் ஆண்டில், மைசூர் பகுதியில் உடையார்களின் கீழ் ஒரு இந்து இராச்சியம் தோன்றியது. சிக்க கிருஷ்ணராஜ உடையார் II 1734 முதல் 1766 வரை ஆட்சி செய்தார்.
- உடையார்களின் படையில் சிப்பாயாக நியமிக்கப்பட்ட ஹைதர் அலி, தனது சிறந்த நிர்வாகத் திறமையாலும், ராணுவத் தந்திரத்தாலும் மைசூரின் உண்மையான ஆட்சியாளராக ஆனார்.

- 18 ஆம் நூற்றாண்டின் இரண்டாம் பாதியில் , மைசூர் அவரது தலைமையில் ஒரு வலிமைமிக்க சக்தியாக உருவெடுத்தது.
- மைசூரின் அருகாமையில் பிரெஞ்சுக்காரர்கள் மற்றும் ஹைதர் அலியின் கட்டுப்பாட்டில் மலபார் கடற்கரையின் வளமான வர்த்தகம் ஆங்கிலேயர்களின் அரசியல் மற்றும் வணிக நலன்களையும், மெட்ராஸ் மீதான அவர்களின் கட்டுப்பாட்டையும் அச்சுறுத்தியது.
- ஆங்கிலேயர்கள், வங்காள நவாப்புடன் பக்சர் போரில் வெற்றி பெற்ற பிறகு, ஹைதராபாத் நிஜாமுடன் ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர், மராத்தியர்களுடன் ஏற்கனவே தகராறு செய்த ஹைதர் அலியிடம் இருந்து நிஜாமைப் பாதுகாப்பதற்காக வடக்கு சர்க்கார்களை அவர்களுக்கு வழங்குமாறு அவரை வற்புறுத்தினார் .
- ஹைதராபாத் நிஜாம், மராட்டியர்கள் மற்றும் ஆங்கிலேயர்கள் ஹைதர் அலிக்கு எதிராக ஒன்றிணைந்தனர்.
- ஹைதர் இராஜதந்திர ரீதியாக மராத்தியர்களை நடுநிலையாளர்களாகவும், நிஜாமை ஆற்காடு

நவாபுக்கு எதிராக தனது கூட்டாளியாகவும் மாற்றினார்.

**ஹைதர் அலி**

- ஹைதர் அலி ) 1721-1782), ஒரு தெளிவற்ற குடும்பத்தில் பிறந்தார், மன்னர் சிக்க கிருஷ்ணராஜ உடையாரின் மந்திரிகளின் கீழ் மைசூர் இராணுவத்தில் குதிரை வீரராக தனது வாழ்க்கையைத் தொடங்கினார் .
- அவர் படிக்காதவர், ஆனால் அறிவார்ந்த மற்றும் இராஜதந்திர மற்றும் இராணுவ ரீதியாக திறமையானவர்.
- அவர் 1761 இல் மைசூரின் *உண்மையான* ஆட்சியாளரானார் மற்றும் மேற்கத்திய பயிற்சி முறைகளை தனது இராணுவத்தில் அறிமுகப்படுத்தினார் . பிரெஞ்சு இராணுவத்தின் உதவியுடன்
- அவரது சிறந்த இராணுவத் திறமையால், அவர் நிஜாமி இராணுவத்தையும் மராட்டியர்களையும் கைப்பற்றினார் மற்றும் 1761-63 இல் டோட் பல்லாபூர், சேரா, பெட்னூர் மற்றும் ஹோஸ்கோட் ஆகியவற்றைக் கைப்பற்றினார் மற்றும் தென்னிந்தியாவின் தொந்தரவான

பொலிகர்களை அடிபணியச் செய்தார். (தமிழ்நாடு ( தொந்தரவான பொலிகர்களை அடிபணியச் செய்தார்.

- பொலிகர்கள் அல்லது பாளையக்காரர்கள் தென்னிந்தியாவின் சில பகுதிகளில் விஜயநகரப் பேரரசின் காலத்திலிருந்து இராணுவத் தலைவர்களாகவும் நிர்வாக ஆளுநர்களாகவும் நியமிக்கப்பட்டனர் . விவசாயிகளிடம் வரியும் வசூல் செய்தனர்.
- தோல்வியிலிருந்து மீண்டு, மாதவராவ் தலைமையில் மராத்தியர்கள் மைசூரைத் தாக்கினர் அலியை 1764, 1766, 1771ல் தோற்கடித்தனர்.
- அமைதியை வாங்க, ஹைதர் அலி அவர்களுக்கு பெரும் தொகையைக் கொடுக்க வேண்டியிருந்தது, ஆனால் 1772 இல் மாதவராவ் இறந்த பிறகு, ஹைதர் அலி 1774-76 இல் மராத்தியர்கள் மீது பல முறை தாக்குதல் நடத்தினார், மேலும் புதிய பகுதிகளைக் கைப்பற்றியதோடு முன்பு அவர் இழந்த அனைத்து பகுதிகளையும் மீட்டார். .

**போர் பாடநெறி**

- ஒன்றரை வருடங்கள் போர் தொடர்ந்ததுஎந்த முடிவும் இல்லாமல் ஹைதர் தனது

வியூகத்தை மாற்றிக்கொண்டு, திடீரென சென்னை வாயில் முன் தோன்றி, மெட்ராஸில் முழு குழப்பத்தையும் பீதியையும் ஏற்படுத்தினார்.

- இதனால் ஆங்கிலேயர்கள் 1769 ஆம் ஆண்டு ஏப்ரல் 4 ஆம் தேதி மெட்ராஸ் உடன்படிக்கை எனப்படும் ஹைதருடன் ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது .
- கைதிகளை பரிமாறிக்கொள்வதற்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டது .
- ஹைதர் அலி வேறு எந்த சக்தியாலும் தாக்கப்பட்டால் ஆங்கிலேயர்களின் உதவியை அவர் உறுதியளித்தார்.

**இரண்டாம் ஆங்கிலோ-மைசூர் போர்) 1780-84)**

**பின்னணி**

- 1771 இல் மைசூர் மராட்டியப் படையால் தாக்கப்பட்டபோது ஆங்கிலேயர்கள் மெட்ராஸ் உடன்படிக்கையைக் கடைப்பிடிக்கத் தவறிவிட்டனர்.
- .ஹைதர் அலி அவர்கள் நம்பிக்கையை மீறியதாக குற்றம் சாட்டினார். மேலும், துப்பாக்கிகள்,

சால்ட்பீட்டர் மற்றும் ஈயம் ஆகியவற்றின் இராணுவத் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் ஹைதர் அலி பிரெஞ்சுக்காரர்களை மிகவும் திறமையாகக் கண்டார்.

- இதன் விளைவாக, அவர் மலபார் கடற்கரையில் பிரெஞ்சு வசம் இருந்த மாஹே வழியாக மைசூருக்கு பிரெஞ்சு போர் பொருட்களை இறக்குமதி செய்யத் தொடங்கினார்.
- இருவருக்குமிடையே அதிகரித்து வரும் நட்பு ஆங்கிலேயர்களுக்கு கவலையை ஏற்படுத்தியது. இதன் விளைவாக ஹைதர் அலியின் பாதுகாப்பில் இருந்த மாஹேவை ஆங்கிலேயர்கள் கைப்பற்ற முயன்றனர்.

**போர் பாடநெறி**

- ஹைதர் அலி ஆங்கிலேயர்களுக்கு எதிராக மராத்தியர்களுடனும் நிஜாமுடனும் கூட்டணி அமைத்தார்.
- அவர் கர்நாடகத்தைத் தாக்கி ஆற்காட்டைக் கைப்பற்றினார் மற்றும் 1781 இல் கர்னல் பெய்லியின் கீழ் ஆங்கில இராணுவத்தை தோற்கடித்தார்.

- இதற்கிடையில், ஆங்கிலேயர்கள்) சர் ஐயர் கூட்டின் கீழ் (மராத்தியர்கள் மற்றும் நிஜாம் இருவரையும் ஹைதரின் பக்கத்திலிருந்து பிரித்தார்கள், ஆனால் 1781 நவம்பரில் போர்டோ நோவோவில் (இன்றைய பரங்கிப்பேட்டை, தமிழ்நாடு( தோல்வியைத் தழுவிய ஹைதர் ஆங்கிலேயர்களை தைரியமாக எதிர்கொண்டார். . இருப்பினும், அவர் தனது படைகளை மீண்டும் ஒருங்கிணைத்து ஆங்கிலேயர்களை தோற்கடித்து அவர்களின் தளபதி பிரைத்வைட்டைக் கைப்பற்றினார்.
- ஹைதர் அலி டிசம்பர் 7, 1782 இல் புற்றுநோயால் இறந்தார் . மகன் திப்பு சுல்தான் ஓராண்டு காலம் போரை நடத்தினார். முடிவில்லாத போரில் சலித்து, இரு தரப்பினரும் சமாதானத்தைத் தேர்ந்தெடுத்தனர், மங்களூர் உடன்படிக்கையில் )மார்ச், 1784) பேச்சுவார்த்தை நடத்தினர் , அதன் கீழ் இரு கட்சிகளும் ஒருவருக்கொருவர் கைப்பற்றிய பிரதேசங்களைத் திரும்பக் கொடுத்தன.

**திப்பு சுல்தான்**

- நவம்பர் 1750 இல் பிறந்த திப்பு சுல்தான், ஹைதர் அலியின் மகன் மற்றும் ஒரு சிறந்த போர்வீரன் என்றும் அழைக்கப்படுகிறார். மைசூர் புலி
- அவர் நன்கு படித்த மனிதராக சரளமாக இருந்தார் அரபு, பாரசீகம், கனராஸ் மற்றும் உருது மொழிகளில்
- திப்பு, தனது தந்தை ஹைதர் அலியைப் போலவே, திறமையான இராணுவப் படையை வளர்ப்பதிலும் பராமரிப்பதிலும் அதிகபட்ச அக்கறை செலுத்தினார்.
- அவர் தனது இராணுவத்தை ஐரோப்பிய மாதிரியில் பாரசீக கட்டளை வார்த்தைகளுடன் ஒழுங்கமைத்தார்.
- அவர் தனது வீரர்களுக்கு பயிற்சி அளிக்க பிரெஞ்சு அதிகாரிகளின் உதவியைப் பெற்றாலும், அவர்களை )பிரெஞ்சு (ஒரு அழுத்தக் குழுவாக உருவாக்க அவர் ஒருபோதும் அனுமதிக்கவில்லை.
- கடற்படையின் முக்கியத்துவத்தை திப்பு நன்கு உணர்ந்திருந்தார்.
- 1796 ஆம் ஆண்டில், அவர் அட்மிரால்டி வாரியத்தை நிறுவினார் மற்றும் 22 போர்க்கப்பல்கள் மற்றும் 20 பெரிய போர் கப்பல்களைக் கொண்ட ஒரு கடற்படைக்கு திட்டமிட்டார்.

- மங்களூர், வாஜேதாபாத் மற்றும் மொலிதாபாத் ஆகிய இடங்களில் மூன்று கப்பல்துறைகளை நிறுவினார். இருப்பினும், அவரது திட்டங்கள் பலனளிக்கவில்லை.
- அவர் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தின் புரவலராகவும் இருந்தார்
மற்றும் இந்தியாவில் ராக்கெட் தொழில்நுட்பத்தின் முன்னோடியாகப் போற்றப்படுகிறார் . ராக்கெட்டுகளின் செயல்பாட்டை விளக்கி ராணுவ கையேடு எழுதினார். மைசூர் மாநிலத்திற்கு பட்டுப்புழு வளர்ப்பை அறிமுகப்படுத்தியதில் அவர் முன்னோடியாகவும் இருந்தார்.
- திப்பு 1797 இல் ஜேக்கபின் கிளப்பை அமைப்பதில் செரிங்கில் இருந்த பிரெஞ்சு வீரர்களுக்கு தனது ஆதரவை வழங்கிய ஒரு சிறந்த ஜனநாயக காதலன் மற்றும் சிறந்த இராஜதந்திரி ஆவார்.
- திப்பு தானே ஜேக்கபின் கிளப்பில் உறுப்பினராகி, குடிமகன் திப்பு என்று தன்னை அழைக்க அனுமதித்தார். செரிங்காபட்டத்தில் சுதந்திர மரத்தை நட்டார்.

**மூன்றாம் ஆங்கிலோ-மைசூர் போர்) 1790-92)**

**பின்னணி**

- திப்பு சுல்தானுக்கும் ஆங்கிலேயர்களுக்கும் இடையிலான மோதல்களைத் தீர்க்க மங்களூர் ஒப்பந்தம் போதுமானதாக இல்லை.
- இருவரும் தக்காணத்தில் தங்கள் சொந்த அரசியல் மேலாதிக்கத்தை நிலைநிறுத்துவதை நோக்கமாகக் கொண்டிருந்தனர்.
- ஆங்கிலேயரின் நட்பு நாடான மற்றும் கிழக்கிந்திய கம்பெனிக்கு மிளகின் ஒரே ஆதாரமாக இருந்த திருவிதாங்கூரை திப்பு தாக்கியபோது மூன்றாம் ஆங்கிலோ-மைசூர் போர் தொடங்கியது.
- திப்புவின் நிலப்பிரபுவாக இருந்த கொச்சி மாநிலத்தில் டச்சுக்காரர்களிடமிருந்து திருவிதாங்கூர் ஜல்கொட்டல் மற்றும் கண்ணனூரை வாங்கியது, அவர் திருவிதாங்கூரின் செயலை தனது இறையாண்மையை மீறுவதாகக் கருதினார்.

**போர் பாடநெறி**

- ஆங்கிலேயர்கள் திருவிதாங்கூரின் பக்கம் நின்று மைசூர் மீது தாக்குதல் நடத்தினர். திப்புவின் பெருகிவரும் சக்தியைக் கண்டு

பொறாமை கொண்ட நிஜாம் மற்றும் மராத்தியர்கள் ஆங்கிலேயர்களுடன் இணைந்தனர்.

- 1790 இல், திப்பு சுல்தான் ஜெனரல் மெடோஸின் கீழ் பிரிட்டிஷ் இராணுவத்தை தோற்கடித்தார்.
- 1791 ஆம் ஆண்டில், கார்ன்வாலிஸ் பிரபு தலைமைப் பொறுப்பை ஏற்றார், மேலும் ஒரு பெரிய இராணுவத்தின் தலைமையில் ஆம்பூர் மற்றும் வேலூர் வழியாக பெங்களூர் (மார்ச் 1791 இல் கைப்பற்றப்பட்டது (மற்றும் அங்கிருந்து செரிங்காபட்டம் வரை அணிவகுத்துச் சென்றார்.

  கோயம்புத்தூர் அவர்களிடம் வீழ்ந்தது, ஆனால் அவர்கள் அதை மீண்டும் இழந்தனர், கடைசியில் மராட்டியர்கள் மற்றும் நிஜாம் ஆதரவுடன், ஆங்கிலேயர்கள் இரண்டாவது முறையாக செரிங்கபட்டத்தைத் தாக்கினர்.
- திப்பு கடுமையான எதிர்ப்பை வழங்கினார், ஆனால் முரண்பாடுகள் அவருக்கு எதிராக இருந்தன.
- 1792 ஆம் ஆண்டு செரிங்காபட்டம் உடன்படிக்கையுடன் போர் முடிவுக்கு வந்தது. இந்த ஒப்பந்தத்தின் கீழ், மைசூர் பிரதேசத்தின் கிட்டத்தட்ட பாதி பகுதிகள் ஆங்கிலேயர்கள், நிஜாம்

மற்றும் மராட்டியர்களின் கூட்டணியால் கைப்பற்றப்பட்டது.

- பாரமஹால், திண்டுக்கல் மற்றும் மலபார் ஆங்கிலேயர்களிடம் சென்றது, மராத்தியர்கள் துங்கபத்ரா மற்றும் அதன் துணை நதிகளைச் சுற்றியுள்ள பகுதிகளைப் பெற்றனர் மற்றும் நிஜாம் கிருஷ்ணாவிலிருந்து பென்னாருக்கு அப்பால் உள்ள பகுதிகளை கைப்பற்றினர். மேலும், திப்புவிடமிருந்து மூன்று கோடி ரூபாய் போர் சேதமும் எடுக்கப்பட்டது.
- போர் இழப்பீட்டுத் தொகையில் பாதியை உடனடியாக வழங்க வேண்டும், மீதியை தவணை முறையில் வழங்க வேண்டும், அதற்காக திப்புவின் இரண்டு மகன்களையும் ஆங்கிலேயர்கள் பிணைக் கைதிகளாகப் பிடித்தனர்.
- மூன்றாவது ஆங்கிலோ-மைசூர் போர் தெற்கில் திப்புவின் மேலாதிக்க நிலையை அழித்து, அங்கு பிரிட்டிஷ் மேலாதிக்கத்தை உறுதியாக நிறுவியது.

**நான்காவது ஆங்கிலோ-மைசூர் போர்) 1799)**

**பின்னணி**

- 1792-99 காலகட்டத்தை ஆங்கிலேயர்கள் மற்றும் திப்பு சுல்தான் இருவரும் தங்கள் இழப்புகளை ஈடுகட்ட பயன்படுத்தினார்கள்.
- திப்பு செரிங்கபட்டம் உடன்படிக்கையின் அனைத்து நிபந்தனைகளையும் நிறைவேற்றி தனது மகன்களை விடுதலை செய்தார்.
- 1796 இல், உடையார் வம்சத்தின் இந்து ஆட்சியாளர் இறந்தபோது, திப்பு தன்னை சுல்தான் என்று அறிவித்து, முந்தைய போரில் ஏற்பட்ட அவமானகரமான தோல்விக்கு பழிவாங்க முடிவு செய்தார்.
- 1798 இல், லார்ட் வெல்லஸ்லி, ஒரு ஏகாதிபத்தியவாதி, சர் ஜான் ஷோருக்குப் பிறகு புதிய கவர்னர் ஜெனரலாக ஆனார்.
- பிரெஞ்சுக்காரர்களுடன் திப்புவின் நட்பு வளர்ந்து வந்தது வெல்லஸ்லிக்கு கவலையை ஏற்படுத்தியது.
- திப்புவின் சுதந்திரமான இருப்பை நிர்மூலமாக்கும் நோக்கில், துணைக் கூட்டணி அமைப்பு மூலம் அவரை அடிபணியச் செய்தார்.

- தேசத்துரோக நோக்கத்துடன் அரேபியா, ஆப்கானிஸ்தான் மற்றும் பிரான்ஸ் தீவு )மொரிஷியஸ் (மற்றும் வெர்சாய்ஸ் ஆகிய நாடுகளுக்கு தூதுவர்களை அனுப்பி ஆங்கிலேயருக்கு எதிராக சதி செய்ததாக திப்பு மீது குற்றம் சாட்டப்பட்டது .திப்புவின் விளக்கம் வெல்லஸ்லியை திருப்திப்படுத்தவில்லை, இதனால் நான்காவது ஆங்கிலோ-மைசூர் போர் தொடங்கியது.

